உதயன்

www.onlineuthayan.com

26: பக்கங்கள் சுடர் 27 கதிர் 250 வள்ளுவர் ஆண்டு 2043 ஆடி 18 வியாழக்கிழமை (02/08/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா 25.00




# தமிழர்களுக்கு நேரடி உதவிகள் வழங்கத் தயாராகிறது இந்தியா

## இலங்கை அரசு ஊடாக வழங்கப்படும் உதவிகள் மக்களை சரியாகச் சென்றடையாத காரணத்தால்

புதுடில்லி, ஓகஸ்ட் 2

இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கான நிதி உதவிகளை நேரடியாக அந்த மக்களிடமே வழங்குவது குறித்து இந்திய அரசு தீவிர ஆலோசனை நடத்தி வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. பாதிக்கப்பட்ட மக்களின் வங்கிக் கணக்குகளுக்கு நேரடியாக நிதி உதவியை வைப்பில் இடுவதற்கு ஆலோசிக்கப்பட்டுள்ளதாகவும் இலங்கை அரசின் ஊடாக இந்தியாவினால் வழங்கப்படும் உதவிகள் பாதிக்கப்பட்ட மக்களைச் சரியாகச் சென்றடையாத காரணத்தினால் இந்திய அரசு இந்த நிலைப்பாட்டை எடுத்துள்ளதாகவும் புதுடில்லித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமிழகத்தைச் சேர்ந்த காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வி.சித்தனும் இந்திய அரசின் மேற்படி நிலைப்பாட்டை உறுதிப்படுத்தியுள்ளார்.

போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மக்களுக்காக இந்தியா வீடமைப்புத் திட்டம் உள்ளிட்ட பல உதவிகளை அறிவித்திருந்தது. இந்த உதவி நிதியை இலங்கை அரசு சரியான முறையில் பயன்படுத்தவில்லை என்ற குற்றச்சாட்டு தற்போது எழுந்துள்ளது.

அண்மையில் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்ட இந்திய எதிர்க்கட்சித் தலைவி சுஸ்மா சுவராஜ் தலைமையிலான இந்திய நாடாளுமன்றக் குழு இதனை நேரடியாகவே பார்த்து உறுதி செய்துள்ளது.

இந்தநிலையில்இலங்கைத் தமிழர்களுக்கு நேரடியாகவேநிதிஉதவிகளைவழங்குவதுகுறித்து இந்தியா ஆலோசித்து வருவதாக தமிழகத்தைச் சேர்ந்த காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வி.சித்தன் தெரிவித்துள்ளார்.

இலங்கை சென்ற குழுவில் இடம்பெற்றிருந்த அவர் இது தொடர்பாகத் தகவல் வெளியி

பார்க்க பக்கம் 4

2 மஹிந்த அரசை வீட்டுக்கு அனுப்ப அனைத்து மக்களும் ஒன்றிணையுங்கள் என யாழ்ப்பாணத்தில் சோமவன்ஸ அழைப்பு

5 வடக்கு கிழக்கில் போதிய வசதி வாய்ப்புக்கள் இல்லாமல் இயங்கும் சிறுவர் இல்லங்களை மூடுவதற்கு அரசு முடிவு செய்துள்ளது.

8 டில்லிக்கான மின்விநியோகம் முடங்கியதை அடுத்து இந்தியப் பிரதமர் மன்மோகன் வீட்டுக்கு பூட்டானில் இருந்து அவசர மின் விநியோகம்.

17 கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பாக வெளிநாட்டு தூதர்களுக்கு விளக்கமளித்துள்ளது இலங்கை.

## இராணுவ ரீதியாகத் தோற்கடிக்கப்பட்டாலும் புலிகளின் நிதி வலையமைப்பு இயங்குகிறது

### தடையை நீடித்து அமெரிக்கா அறிக்கை

வொஷிங்டன்,ஓக 2

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை அமெரிக்கா தொடர்ந்தும் வெளிநாட்டுத் தீவிரவாத அமைப்புகளின் பட்டியலில் இணைத்துள்ளது. இராணுவ ரீதியாகத் தோற்கடிக்கப்பட்டாலும் புலிகளின் வலையமைப்புக்கள் தொடர்ந்து இயங்குவதைக் காரணம் காட்டியே அமெரிக்கா இந்தத் தடையை நீடித்திருக்கிறது.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தீவிரவாத முறியடிப்பு ஒருங்கிணைப்புப் பணியகம் நேற்றுமுன்தினம் வெளியிட்டுள்ள தீவிரவாதம் தொடர்பான 2011ஆம் ஆண்டுக்கான அறிக்கையிலேயே இது பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் இயக்கம் உள்ளிட்ட

பார்க்க பக்கம் 4

## எண்ணெய் ஆலையை அமைக்க இந்தியாவுக்கு அனுமதி இல்லை

### இலங்கை அரசு அறிவிப்பு

கொழும்பு, ஓக.2

இந்தியன் எண்ணெய் கூட்டுத்தாபனம் 3.6 மில்லியன் டொலர் முதலீட்டில் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையை இலங்கையில் நிறுவவுள்ளதாக வெளியான தகவல்களை இலங்கை அரசு நிராகரித்துள்ளது.

இது தொடர்பாக இலங்கைப் பெற்றொலியத்துறை அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில், எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையை நிறுவுவது தொடர்பாக எந்தவொரு இந்திய நிறுவனத்துடனும் இலங்கை அரசு கலந்துரையாடவில்லை என்று கூறப்பட்டுள்ளது.

இலங்கையில் 3.6 மில்லியன் [illegible] முதலீட்டில் ஆண்டுக்கு 5 அல்லது 9 மில்லியன் தொன் மசகுஎண்ணெயை

பார்க்க பக்கம் 4

## வடமாகாண தேர்தலுக்கு முன் மீள்குடியமர்வு நிறைவு பெறும்

### அமைச்சர் பஸில் கூறுகிறார்

கொழும்பு,ஓக 2

வடக்கு மாகாணசபைத் தேர்தலுக்கு முன்னர் இடம்பெயர்ந்த அனைத்து மக்களும் மீள்குடியமர்த்தப்படுவர் என அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளினால் சிங்கள மற்றும் முஸ்லிம் மக்கள் வடக்கில் இருந்து துரத்தியடிக்கப்பட்டனர். அவர்களும் இந்தக் காலத்துக்குள் வடக்கில் குடியேற்றம் செய்யப்படுவர் என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, வடக்கில் முன்னதாகவே குடியேறாதிருந்த சிங்கள மக்கள் எவரையும் அங்கு புதிதாகக் குடியேற்றப் போவதில்லை எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இவ்வாறு புதிய குடியேற்றங்கள் இடம்பெறுகின்றதாக வெளியாகிய செய்திகளுக்கு அவர் மறுப்பு தெரிவித்துள்ளார். (த)

## அச்சமடைகிறார் ரணில்

கொழும்பு,ஓக 2

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க, தமது பிரபல்யத்தை எண்ணி அச்சம் கொண்டிருப்பதாக, முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ரணில்விக்ரமசிங்கஎன்னை ஓர் அரசியல்வாதியாக மதிக்கிறார். அதனால் நானும் அவரை மதிக்கிறேன். எனினும் அவர் என் மீது அச்சம் கொண்டவராக காணப்படுகிறார். ஆனால்அது என்மீதுள்ள

பார்க்க பக்கம் 4

## 'இசற்' புள்ளி விடயத்தில் அரசுக்கு எதிராக படை திரட்டிக் களமிறக்க ஐ.தே.க. முடிவு

### அனைத்து தரப்பினரையும் அழைத்துப் பேசி இரு வாரங்களுக்குள் மாபெரும் போராட்டம்

கொழும்பு, ஓக.2

இசற் புள்ளி விவகாரத்தில் அடுத்த கட்ட நடவடிக்கை என்னவென்பது தொடர்பில் அரசியல் கட்சிகள், அமைப்புகள் மற்றும் மாணவர்களுடன் பேச்சு நடத்தி அனைத்துத் தரப்பினரையும் அணிதிரட்டி இன்னும் 2 வாரங்களுக்குள் அரசுக்கு எதிராகப் பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளோம்.

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இசற் புள்ளியால் பாதிக்கப்பட்ட மாணவர் அமைப்புஇன்றுகாலைகொழும்

பார்க்க பக்கம் 4

## வல்லரசுகளின் போட்டிக்குள் சிக்கியுள்ள இலங்கைத் தீவு

### அமெரிக்க அரசியல் விஞ்ஞானி கருத்து

கொழும்பு, ஓக.2

இந்துமா கடற் பிராந்தியத்தில் தனக்குரிய பாரம்பரிய பகுதிகளுக்கு அப்பாலும் தனது ஆளுமையை விஸ்தரித்துக்கொள்ள சீனாவானது எத்தனித்துக் கொண்டிருக்கும் நிலையில் இந்தப் பிரதேசத்தில் வல்லரசுகளின் ஆதிக்க போட்டிகளுக்குள் சிக்கிக் கொள்ள வேண்டிய கட்டாயம் ஒன்று இலங்கைக்கு ஏற்படுவது தவிர்க்க முடியாததாக இருக்கப் போகிறது. எனவே இந்துமாக் கடல் பிரதேசத்தில் சீனாவின் பிரசன்னத்தைத் தவிர்ப்பதற்கு எந்த அளவில் அமெரிக்காவுடன் இணைந்து போக முடியும் என்பதை இலங்கை தீர்மானிக்கவேண்டிய கட்டத்தில் இருக்கிறது.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் தென்னாசிய விவகாரங்களில் நிபுணரும் புகழ் பெற்ற அமெரிக்க அரசியல் விஞ்ஞானியுமான பேராசியர் சுமித் கங்குலி. பேராசிரியர் கங்குலி கொழும்பில் கூட்ட

பார்க்க பக்கம் 4

## இலங்கைப் படைகளின் பலம் அறியவே பயிற்சி அளிக்கிறதாம் இந்தியா

இலங்கையின் படைபலத்தை அறியவே, இலங்கைப் படைகளுக்கு இந்தியா பயிற்சி அளித்து வருவதாக, காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த முன்னாள் மத்திய அமைச்சர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் கூறியுள்ளார். எதிர்காலத்தில் இலங்கைக்கு எதிராகப் போர் நடந்தால், அவர்களின் படைபலத்தை அறிந்து கொள்ளவே, இப்போது பயிற்சி அளிக்கிறோம். இலங்கைப் படையினர் அமெரிக்கா, சீனாவிடம் பயிற்சி பெற்றால், அவர்களின் பலத்தை எம்மால் அறிந்து கொள்ள முடியுமா என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (த)

## இலங்கையில் சீனப் பிரசன்னம் குறித்து விவாதிக்கவே 'டெசோ'

### கருணாநிதி கூறுகிறார்

சென்னை, ஓக.2

இலங்கையில் சீனாவின் பிரசன்னம் குறித்து விவாதிப்பதற்கே டெசோ மாநாடு நடைபெறுவதாக தி.மு.க. தலைவர் கருணாநிதி நேற்றுத் தெரிவித்தார்.

டெசோ மாநாடு குறித்து நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் அதிகரித்து வரும் சீனாவின் தலையீடு இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலானது. இது பற்றி நாங்கள் விவாதிக்க வேண்டாமா? இந்த விடயங்களுக்கு தீர்வு காணுமாறு மத்திய அரசிடம் எடுத்துச்சொல்ல வேண்டாமா? இந்த விடயங்களுக்காகத் தான் நாங்கள் டெசோ மாநாட்டை நடத்துகிறோம்.

இலங்கையில் சீனாவின் தலையீடு அதிகரித்துள்ளமையானது இந்தியாவின் தேசிய பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்

பார்க்க பக்கம் 4

# அனைவரும் ஒன்றிணைந்து மஹிந்த அரசை விரட்டுவோம்

## யாழ்ப்பாணத்தில் சோமவன்ஸ அழைப்பு

யாழ்ப்பாணம், ஓக. 02

அனைத்து மக்களும் ஒன்றிணைந்து போராடுவதன் மூலமே மஹிந்த அரசை வீட்டுக்கு அனுப்பமுடியும். நாட்டில் சோஷலிச ஆட்சியை ஏற்படுத்த வேண்டும். இராணுவத்தினரும் பொலிஸாரும் அரசின் தில்லுமுல்லுகளை விளங்கிக் கொண்டதாலேயே எமது ஆர்ப்பாட்டத்துக்கு ஆதரவளித்து பாதுகாப்பை வழங்குகின்றனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வடக்கு, தெற்கு என்று பேதம் பாராது எம்முடன் கை கோர்த்து போராட்டங்களை நடத்தி இந்த அரசை விரைவில் வீட்டுக்கு அனுப்புவோம்.

இவ்வாறு ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க யாழ். நகரில் நேற்று தெரிவித்தார்.

'மக்களை வதைக்கின்ற ஆட்சிக்கு எதிரான மக்கள் அணி திரள்வு' என்னும் தொனிப்பொருளில் கடந்த மாதம் 27 ஆம் திகதி தெய்வேந்திர முனையில் ஆரம்பமான வாகனப் பேரணி நேற்று மாலை 5 மணியளவில் யாழ். நகரை வந்தடைந்தது.

ஆயிரக்கணக்கான மக்கள் இந்த வாகன அணி வகுப்பில் கலந்து கொண்டிருந்தனர். பின்னர் யாழ். நகர மத்தியில்



ஜே.வி.பி.யின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பெ.சந்திரசேகரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான சுனில் ஹந்துன்நெத்தி, அனுரகுமாரதிசாநாயக்க ஆகியோர் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தனர்.

இதன் பின்னர் மக்கள் மத்தியில் உரையாற்றிய சோமவன்ஸ அமரசிங்க, வடபகுதி மக்கள் போரால் பாதிக்கப்பட்டு உள்ளனர். இவர்கள் தமது உரிமைக்காகப் போராட முடியாத நிலை இங்கு தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

மக்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதாக ஆட்சிபீடம் ஏறிய மஹிந்த அரசு இன்று மக்கள் பிரச்சினைகளை மேலும் பெரிதாக்கி விட்டுள்ளது. பதிலாக தனது குடும்பத்தாருக்கும் வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கவே பார்க்கின்றது.

இந்த நாட்டில் நாளொரு வண்ணம் பொழுதொரு மேனியுமாக குற்றச்செயல்கள் அதிகரித்துச் செல்கின்றன. பெண்கள், சிறுவர் மீதான வன்முறைகள் துஷ்பிரயோகங்கள் அதிகரித்துள்ளன. 'இசற்' புள்ளி நெருக்கடியால் மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

வடபகுதி மக்கள் குறிப்பாக மீள்குடியமர்த்தப்படாமல் இன்னும் அகதிமுகாம்களில் உள்ளனர். அவர்களது ஜனநாயக உரிமைகள் குழிதோண்டிப் புதைக்கப்பட்டுள்ளன. இராணுவ அராஜகம் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது.

இவற்றை மாற்றியமைக்க வேண்டும். இன்று தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள் என்ற பேதமின்றி அனைத்து மக்களும் எம்முடன் ஒன்றிணைந்து போராடுகின்றனர். மக்களின் தொடர்ச்சியான போராட்டத்தின் மூலமே இந்த அரசை வீட்டுக்கு அனுப்ப முடியும்.என்றார்.

இதேவேளை இன்றுகாலை வவுனியாவை வந்தடைந்தது ஜே.வி.பியின் வாகன பவனி. அங்கு மக்களுடன் இணைந்து ஜே.வி.பியினர் வவுனியா நகரத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன் அரசுக்கு எதிரான துண்டுப் பிரசுரங்களையும் விநியோகித்தனர். இதன்பின்னர் அங்கிருந்து புறப்பட்ட அவர்கள் கிளிநொச்சி நகரை வந்தடைந்து அங்கும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன் அரசின் அராஜகங்கள் குறித்து மக்களுக்கு விளக்கம் அளித்தனர். (த-10-5-6-17-400)

# பட்டதாரி நியமனங்களுக்கும் தேர்தலுக்கும் தொடர்பில்லையாம்

கொழும்பு,ஓக 2

பட்டதாரிகள் நியமனத்துக்கும் எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலுக்கும் எந்த வித தொடர்புகளும் இல்லை என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

மகாவலி கேந்திர நிலையத்தில் இடம்பெற்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

பட்டதாரிகளின் நியமனத்தைப் பயன்படுத்திச் சில பட்டதாரிகளை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுத்த எதிர்க் கட்சிகள் முயற்சிக்கின்றன.

தற்பொழுது வழங்கப்படும் பட்டதாரிகள் நியமனங்களானது தேர்தலுக்காக வழங்கப்படும் நியமனம் அல்ல என்றும் வடக்கு, கிழக்கு உட்பட நாடு முழுவதிலும் 15 ஆயிரம் பட்டதாரிகளை நியமிப்பதற்கு அரசு ஏற்கனவே அமைச்சரவையிலும், நாடாளுமன்றத்திலும் அறிவித்து அனுமதி பெற்றுள்ளது.

குறித்த நியமனங்களை பல்வேறு துறைகளிலும் வழங்கிக் கொண்டிருந்த நிலையிலேயே மாகாண சபைத்தேர்தல் அறிவிக்கப்பட்டது.

எனவே இந்த நியமனத்துக்கும் தேர்தலுக்கும் எந்த விததொடர்புகளும்இல்லைஎன அமைச்சர் சுசில் பிரேமஜயந்த குறிப்பிட்டுள்ளார். (த)

# வாகனப் புகை பரிசோதனை வடக்கில்

கொழும்பு,ஓக 2

வடக்கு மாகாணத்தில் வாகனப் புகைப் பரிசோதனை செய்யும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மோட்டார் வாகன ஆணையாளர் திணைக்களம் தெரிவிக்கின்றது.

கடந்த காலங்களில் ஏற்பட்டிருந்த நிலைமையினால், வடக்கு மாகாணத்தில் வாகனப் புகைப் பரிசோதனை மேற்கொள்ள் முடியாமல் போனதாக மோட்டார் வாகன ஆணையாளர் எஸ்.எச்.ஹரஸ்சந்திர தெரிவித்துள்ளார்.

வாகனப் புகைப் பரிசோதனைகளை மேற்கொள்வதற்கான நிலையங்களை அமைப்பதற்கான இடங்களைத் தெரிவு செய்யும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் ஆணையாளர் கூறினார்.

நாட்டில் இதுவரையான காலப்பகுதியில் 318 வாகனப் புகை பரிசோதனை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. (த)




உதயன் இணைய வானொலி

www.uthayanradio.com

தினமொரு பரிசுக் குலுக்கல்

நல்லூர் கந்தசுவாமி கோவிலின் வரலாற்றை எடுத்தியம்பும் "யாழ்ப்பாண வைபவ மாலை" எனும் நூலை எழுதியவர் யார்?

1. குல.சபாநாதன்
2. ஆறுமுக நாவலர்
3. பண்டிதர் சி.கணபதிப்பிள்ளை
4. மாதகல் மயில்வாகனப் புலவர்

பெயர் :....................

முகவரி :....................

வயது :.................... தொ.பே. இல :....................

சரியான விடைகளை எழுதி, பரிசுக் கூப்பனுடன் பருத்தித்துறை வீதி, நல்லூரில் (பாரதியார் சிலையடி) அமைந்துள்ள உதயன் இணைய வானொலியின் உற்சவ காலச் சிறப்புக் கலையகத்தில் வைக்கப்பட்டுள்ள பெட்டிகளில் இன்று மாலை 7 மணிக்கு முன் இடுவதன் மூலம் பெறுமதி மிக்க பரிசில்களை வெல்லும் வாய்ப்பு

1 ஆம் பரிசு : 4 GB பென் ட்ரைவ்
2 ஆம் பரிசு : கம்ப்யூட்டர் ருடே 6 மாத சந்தா
3 ஆம் பரிசு : அர்ச்சுனா சஞ்சிகையின் 6 மாத சந்தா

அனுசரணை: Study & Work in UK, Australia & Canada

2012 September Intake

" இறுதிச் சந்தர்ப்பத்தை நழுவவிடாதீர்கள் "

Administration & Documentation என்பன வெற்றிகரமான முறையில் எங்களால் செய்து தரப்படும் ஐரோப்பிய நாடுகளுக்கான வீஸா பெறுவதற்கான SponsorShip பிரச்சினையா ? உடனடியாக ஏற்பாடு செய்து தரப்படும்

Colombo T.P : 072 9994777, 011 7208752, Jaffna T.P : 072 7685691, 077 2479683

V T L Mangement, 01, Deanston House, Denston Place, Colombo - 03

பரிசுத் தெரிவுக் குலுக்கல் இன்றிரவு 7.30 மணிக்கு சிறப்புக் கலையக முன்றலில்..........


# காமினியின் தேர்தல் தந்திரோபாயங்களை சந்திரிகாவிடம் அம்பலப்படுத்தினார் ரணில்

கொழும்பு, ஓக 2

1994 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளரான காமினி திஸாநாயக்கவின் தேர்தல் தந்திரோபாயங்கள் அனைத்தையும் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவிடம் ரணில் விக்ரமசிங்க திருட்டுத்தனமான முறையில் அம்பலப்படுத்தியதாக அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவிக்கின்றார்.

தேவை ஏற்பட்டால் உரிய ஆதாரங்களுடன் அதனைத் தம்மால் நிரூபிக்க முடியும் என அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்ததாகச் சுகாதார அமைச்சு நேற்று விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலனறுவை சிரிபுர பகுதியில் நடைபெற்ற தேர்தல் கூட்டமொன்றில் அமைச்சர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டதாக அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் உள்ளவாறு அமைச்சரின் கருத்துக்கள் வருமாறு:-

இது நான் அரசியல் மேடையில் வாக்குகளைப் பெறுவதற்காகக் கூறும் கருத்துக்கள் அல்ல, காமினி திஸாநாயக்க தேர்தலில் போட்டியிட்ட போது, 1994 ஆம் ஆண்டு புலிப் பயங்கரவாதக் குண்டுத் தாக்குதலில் உயிரிழப்பதற்கு முன்னதாகக் காமினி திஸாநாயக்கவை ஜனாதிபதி தேர்தலில் தோற்கடிக்க வேண்டும் எனச் சந்திரிகா குமாரதுங்கவிடமும் எம்மிடமும் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் நடைபெறும் விடயங்களை, காமினி திஸாநாயக்கவின் தேர்தல் நடவடிக்கையில் உள்ள உபாயங்கள் தொடர்பான தகவல்களைக் கூறியது யார்? இன்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராகச் செயற்படுகின்ற ரணில் விக்ரமசிங்கவே அதனைக் கூறினார். 1994 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் காமினி திஸாநாயக்கவைத் தோற்கடிப்பதற்கான அனைத்துத் தகவல்களையும் ரணில் விக்ரமசிங்க எம்மிடம் வழங்கினார். இவ்வாறு தேர்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு எமக்கு கூறினார். அப்படி என்றால் ரணில் விக்ரமசிங்கவின் ஐ.தே.கவுக்கு வாக்களிப்பது ஏற்புடையதா? என்று கூறினார். (த)

# இரண்டரைக் கோடி பெறுமதியான போதைவஸ்துடன் இருவர் கைது

கொழும்பு,ஓக 2

சுமார் இரண்டரைக் கோடி ரூபா பெறுமதியான ஒரு தொகை போதைப் பொருள் கட்டுநாயக்க விமான நிலைய சுங்க போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

தோஹா கட்டாரில் இருந்து இலங்கையை வந்தடைந்த ஈரான் நாட்டவர்கள் இருவரிடம் இருந்து இந்த போதைப் பொருள் கைப்பற்றப்பட்டதாகச் சுங்கக் கட்டுப்பாட்டுப் பிரிவின் அத்தியட்சகர் நிஹால் அழகப்பெரும கூறினார்.

மெத் பெட்டமைன்ட் எனப்படும் இந்த போதைப் பொருள் 1.8 கிலோகிராம், சந்தேகநபர்களின் பயணப் பொதிகளில் இருந்து கைப் பற்றப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவர்கள் சுற்றுலா பயணிகளாக நாட்டுக்குள் நுழைய முற்பட்டுள்ளதுடன், அனுராதபுரம் பிரதேச ஹோட்டல் ஒன்றின் அறைகளையும் முன் கூட்டியே ஒதுக்கியுள்ளதாக விமான நிலைய சுங்கக் கட்டுப்பாட்டுப் பிரிவினர் மேற்கொண்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

# பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 28,000 பேர் கைது

கொழும்பு,ஓக 2

பொலிஸ்மா அதிபரின் பணிப்பின் பேரில் நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின்போது, பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 28,000 பேர் கடந்த ஜூலை மாதம் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நபர்களை கைது செய்வதற்கான தேடுதல் நடவடிக்கை தொடர்ந்து நாடு பூராகவும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (த)

## உயர்தரப் பரீட்சைக் காலத்தில் 24 மணிநேரமும் மின்சாரம்

### ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டும் மின்வெட்டு

யாழ்ப்பாணம், ஓக.2

உயர்தரப் பரீட்சை எதிர்வரும் 6 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில் பரீட்சைக் காலங்களில் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த ஏனைய நாள்களில் 24 மணிநேரமும் மின் விநியோகம் இடம்பெறும் என்று சுன்னாகத்திலுள்ள இலங்கை மின்சார சபையின் யாழ். பிராந்திய அலுவலக மின்பொறியியலாளர் எஸ். ஞானகணேசன் தெரிவித்தார்.

எதிர்வரும் 6 ஆம் திகதி ஆரம்பமாகும் உயர்தரப் பரீட்சை நிறைவடையும் வரை அந்தக் காலங்களில் மின்வெட்டு நிலை பற்றிக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பாக மேலும் தெரிவித்ததாவது:-

பரீட்சைக் காலங்களில் மாணவர்களின் நன்மைகருதி மின்சார சபை 24 மணி நேர சேவையை வழங்கவுள்ளது. இருப்பினும் வீதி அகலிப்பு, மின் மார்க்கத்தின் திருத்த வேலைகள் காரணமாக ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படும். அத்துடன் ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தபடி எதிர்வரும் சனிக்கிழமை மின்மார்க்கத்தில் திருத்த வேலை காரணமாக மின் தடை ஏற்படும்- என்றார். (ம-13)

## கூட்டுறவுச் சங்கக் கிளையை புனரமைக்கக் கோரிக்கை

வடமராட்சி, ஓக. 02

வதிரி, கல்வத்தை கூட்டுறவுச் சங்கக் கிளையை விரைவாகப் புனரமைப்புச் செய்து, மக்கள் சேவைக்கு உதவுமாறு இந்தப் பகுதியைச் சேர்ந்த நுகர்வோர் நெல்லியடி கட்டைவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தக் கிளைச் சங்கக் கட்டடத்தில் நீண்ட காலமாகக் காணப்படும் குறைபாடுகளை நீக்குமாறு இணைக்குழு சங்கத்துக்கு விடுத்த வேண்டுகோளை அடுத்து இந்தக் கிளைச் சங்கம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. இந்தக் கிளைச் சங்கத்தின் சேவைகள் வதிரி கூட்டுறவு நகருக்கு மாற்றப்பட்டுள்ளது.

இந்த நிலையில் கல்வத்தை கிளைச் சங்கக் கட்டடத்தை மிக விரைவாகத் திருத்தியமைத்து மீண்டும் திறந்து மக்கள் சேவைக்கு உதவுவதன் மூலம் நுகர்வோருக்கு பெரிதும் உதவியாக இருக்கும் என நெல்லியடி- கட்டைவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு விடுக்கப்பட்டுள்ள கோரிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-8)

# அத்துமீறிச் செய்யும் கடற்றொழிலை தெற்கு மீனவர்கள் நிறுத்த வேண்டும்

### இல்லையேல் உபகரணங்கள் பறிமுதல் செய்யப்படும் என்று எச்சரிக்கை

*யாழ்ப்பாணம், ஓக.2*

*வடமராட்சி கிழக்கு கடற்பரப்பில் தென்பகுதி மீனவர்கள் தடை செய்யப்பட்ட கடற்றொழில் உபகரணங்கள், முறைமைகளைப் பயன்படுத்தி தொழில் செய்து வருகின்றனர். இவ்வாறான தொழில் நடவடிக்கையை உடனடியாக நிறுத்த வேண்டும். இல்லையேல் உபகரணங்கள் பறிமுதல் செய்யப்படும். என்று முறையிட்டுள்ளனர். யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள உதவிப் பணிப்பாளர் என்.கணேசமூர்த்தி எச்சரித்துள்ளார்.*

வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர்கள் சங்கத்தினர் தென்னிலங்கை மீனவர்களின் அத்துமீறல் தொடர்பாகவும் சட்ட விரோத கடற்றொழில் முறையினால் கடல் வளம் நாசம் அடைவது தொடர்பாகவும் 15 சங்கங்களின் உறுப்பினர்கள் கையெழுத்திட்ட இது தொடர்பான மனு கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள உதவிப் பணிப்பாளரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

அந்த மனு தொடர்பான நடவடிக்கை குறித்து அவரிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வடமராட்சி கிழக்கு பகுதியில், தென்பகுதியிலுள்ள மீனவர்களின் அத்துமீறல் தொடர்ச்சியாக உள்ளது. தென்பகுதி மீனவர்களின் சில நிறுவனங்களுக்கு கடலட்டை, சங்கு பிடிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அவற்றில் அனுமதி வழங்கப்பட்ட 3 நிறுவனங்கள் இந்தக் கடற்பரப்பில் தடைசெய்யப்பட்ட உபகரணங்களைப் பயன்படுத்தியும், ஒளிபாய்ச்சியும் கடற்றொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இவற்றுக்கு ஆதரவாக கடற்படையினர் உள்ளனர்.

வடபகுதியில் அத்துமீறிச் சட்ட விரோதமான முறையில் கடற்றொழிலை மேற்கொண்டுவரும் தென்னிலங்கை மீனவர்களை கட்டுப்படுத்தாத நிலைமை தொடர்கிறது.

படையினரின் பாதுகாப்பு வலயங்களுள் கொட்டகைகள் அமைத்து தங்கி இருந்து அங்கு மீனவர்கள் சுதந்திரமாக தொழிலை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில் அங்கு நேரடியாகச் சென்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. வடமராட்சி கிழக்கு மீனவர்களின் நிலைமைகளைக் கூறி, கடலட்டை பிடிப்பதாயின் கடற்பரப்பிலிருந்து 20 கிலோ மீற்றருக்கு அப்பால் சென்றே பிடிக்க வேண்டும் என்றும் தடை செய்யப்பட்ட உபகரணங்கள், முறையை உபயோகித்தால் பறிமுதல் செய்யப்படும் என்றும் இதன்போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கில் 15 கடற்றொழில் சங்கங்களான சுண்டிக்குளம், கட்டைக்காடு, வெற்றிலைக் கேணி, ஆழியவளை, உடுத்துறை, வத்திராயன், மருதங்கேணி, தாளையடி, செம்பியன்பற்று, மாமுனை, நாகர்கோயில் மேற்கு, நாகர்கோயில் கிழக்கு, குடத்தனை, பொற்பதி, மணற்காடு ஆகிய சங்கங்களில் 4 ஆயிரத்து 186 தொழிலாளர்கள் தொழில் செய்து வருகின்றனர்.

இவர்கள் தொழிலை மேற்கொண்டுவரும் கடற்பரப்பில் தென்னிலங்கையில் இருந்துவரும் மீனவர்கள் அனுமதி இன்றி கடலட்டை, சங்கு பிடித்து வருகின்றனர். அத்துடன் இராணுவத்தினரால் விடுவிக்கப்படாத பகுதிகளிலும் தொழிலை மேற்கொள்கின்றனர். இதனால் மீன் வளம் அழிவதுடன் எமது பிரதேச வளங்களையும் நாசம் செய்கின்றனர்.

கரைவலை, ஆழ்கடல் மீன்பிடி வலை, தென்னிலங்கையில் இருந்து வந்து கடலட்டை பிடிப்பவர்களால் சேதமாக்கப்பட்டு வெட்டப்பட்டு அழிந்து நாசமடைகின்றன. இதனால் சிறு தொழிலாளர்கள் பெரிதும் பாதிப்படைகின்றனர்.

இந்த வேண்டுகோளுக்கு இணங்கவே நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.- என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-13)

## எழுதுமட்டுவாழ் விபத்தில் மூவர் காயம்

தென்மராட்சி, ஓக 2


ஆலய தேர்த் திருவிழாவுக்கு மூவரை ஏற்றிச் சென்ற மோட்டார் சைக்கிளை வேகமாக வந்த 'படி' வாகனம் மோதித் தள்ளியது. இதில் தந்தையும் இரண்டு மகன்மாரும் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று எழுதுமட்டுவாழ் வடக்கு மருதங்குளம் வீதியில் இடம்பெற்றது.

மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத் திட்ட துர்க்கை அம்பாள் ஆலய தீர்த்தத் திருவிழாவுக்கு வந்த வேளையில் ஆலயத்துக்கு அருகில் விபத்து இடம்பெற்றது.

விபத்தில் துன்னாலை மத்தியைச் சேர்ந்த கந்தசாமி கணேஸ்வரன் (வயது-43) என்பவருக்கு கால் முறிந்தது இவரது மகனான கணேஸ்வரன் வருண் (வயது-5) மற்றொரு மகன் ஆகியோர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

(ம-9)



வலி.மேற்கு துரட்டிப்பளை முத்துமாரி அம்மன் ஆலய வீதிக்கு மின்விளக்குகள் பொருத்துவதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தனது சொந்த நிதியில் இருந்து மின்விளக்குகளைக் கொள்வனவு செய்த வழங்கியுள்ளார். அவை ஆலயகுரு மதுசூதனக் குருக்களிடம் அவரது பிரதிநிதியால் கையளிக்கப்படுகின்றன.

# நேர்முகத் தேர்வு இல்லாமலே ஸ்கந்தாவுக்குப் புதிய அதிபர்

### பழைய மாணவர்கள் கேட்டமையால் நியமிக்கப்பட்டாராம்

யாழ்ப்பாணம்,ஓக. 2

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் கோரிக்கை விடுத்ததன் காரணமாகவே நேர்முகத் தேர்வு நடத்தப்படாமல் அந்தக் கல்லூரிக்குப் புதிய அதிபர் நியமிக்கப்பட்டார். இதற்கு வேறெந்தக் காரணங்களும் இல்லை என வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலர் எஸ். சத்தியசீலன் தெரிவித்தார்.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றிய ஆறு.திருமுருகன் ஓய்வு பெற்றுச் செல்வதால் பாடசாலையின் புதிய அதிபராக இ.ஈஸ்வரநாதன் நியமிக்கப்பட்டுள்ளார்.

குறித்த பாடசாலையின் அதிபர் வெற்றிடம் தொடர்பில் விளம்பரப்படுத்தாமல் நேர்முகத் தேர்வு நடத்தப்படாமல் புதிய அதிபர் ஒருவர் வடமாகாண கல்வி அமைச்சால் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஆறு. திருமுருகன் ஓய்வுபெற்றுச் செல்வதாக அறிவித்ததைத் தொடர்ந்து யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் கற்பித்துக் கொண்டிருந்த இ.ஈஸ்வரநாதனை புதிய அதிபராக நியமிக்குமாறு பழைய மாணவர் சங்கம் வலிகாமம் கல்வி வலயத்திடம் கோரிக்கை விடுத்திருந்தது.

வேறொரு வலயத்தில் இருந்து வருவதால் இந்த நியமனத்தை வடமாகாண கல்வி அமைச்சின் ஊடாகவே மேற்கொள்ள வேண்டும் என கல்வி வலயம் அறிவித்ததைத் தொடர்ந்து பழைய மாணவர் சங்கம் வடமாகாண கல்வி அமைச்சிடம் குறித்த நபரை அதிபராக நியமிக்குமாறு கோரிக்கை விடுத்தது.

இதேவேளை, பாடசாலை அதிபர் பதவிக்கு வெற்றிடம் ஏற்படுமிடத்து வலயக் கல்விப் பணிமனையாலேயே நேர்முகத் தேர்வு நடத்தப்பட வேண்டும் என்றும் தமது வலயத்திலுள்ள 131 பாடசாலைகளில் 67 பாடசாலைகளுக்கே அதிபர் தரத்திலுள்ளவர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். எனவே வேறு வலயத்திலிருந்து அதிபர் தரத்துடன் ஒருவர் வரும்போது அதனை ஏற்று எமது வலயத்தில் வெற்றிடத்தை நிரப்பலாம் என்பதாலேயே நேர்முகத் தேர்வு நடத்தப்படவில்லை என்றும் வலிகாமம் வலயக் கல்வி அலுவலகத்தினர் தெரிவித்தனர். அத்துடன் ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கு நியமிக்கத் தகுதியான அதிபர்கள் தமது வலயத்தில் உள்ளனர் என்றும் அவர்கள் கூறினர்.

இந்தவிடயம் தொடர்பில் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலனுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, பழைய மாணவர் சங்கம் மற்றும் பாடசாலைச் சமூகத்துடன் இணங்கிப் போகக் கூடிய ஒருவரையே பெரிய பாடசாலைகளுக்கு அதிபராக நியமிக்க வேண்டும். அதனால் பழைய மாணவர் சங்கம் கோரிய அந்தப் பாடசாலையின் பழைய மாணவரையே புதிய அதிபராக நியமித்துள்ளோம். இதனாலேயே நேர்முகத் தேர்வுகள் நடத்தப்படவில்லை. இதற்கு வேறெந்தக் காரணமும் இல்லை என்றார்.

இதேவேளை, ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கு 2010 ஆம் ஆண்டு அதிபர் ஒருவர் நியமிக்கப்பட்டபோதும் பின்னர் அவர் ஸ்கந்தவரோதய ஆரம்பப் பாடசாலைக்கு அதிபராக நியமிக்கப்பட்டார். இந்த நிலையில் அரசியல் கட்சி ஒன்றின் பின்னணியிலேயே புதிய அதிபர் நியமிக்கப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (த-5)

# இந்திய வர்த்தக அமைச்சருடன் உயர் மட்டக்குழு இங்கு வருகை

**கொழும்பில் நாளைமறுதினம் முதல் இடம்பெறவுள்ள இந்தியா ஷோ என்ற இந்திய நிறுவனங்களுக்கான சிறப்பு வர்த்தகக் கண்காட்சியில் பங்கேற்கவென இந்தக் குழு இலங்கை வரவுள்ளது.**

புதுடில்லி,ஓக 2

இந்திய வர்த்தக அமைச்சர் ஆனந்த் சர்மா தலைமையில் உயரதிகாரிகள், தொழிலதிபர்கள், தொழில் துறை அமைப்புகளின் பிரதிநிதிகள் கொண்ட குழுவொன்று இலங்கைக்கு பயணம் செய்யவுள்ளது.

கொழும்பில் நாளைமறுதினம் முதல் இடம்பெறவுள்ள 'இந்தியா ஷோ' என்ற இந்திய நிறுவனங்களுக்கான சிறப்பு வர்த்தகக் கண்காட்சியில் பங்கேற்கவென இந்தக் குழு இலங்கை வரவுள்ளது.

அதில் 100க்கும் மேற்பட்ட இந்திய நிறுவனங்கள் பங்கேற்று தங்கள் தயாரிப்புகளை காட்சிக்கு வைக்க உள்ளன.

இந்தியா, இலங்கை இடையே வர்த்தகத்தை அதிகரிக்கவும், இலங்கையில் இந்தியப் பொருள்களின் விற்பனை உயரவும் இந்த கண்காட்சி உதவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (த)

# குர்ஆனை இழிவுபடுத்தாத ரணில் மன்னிப்புக் கோரத் தேவையில்லை

## அஸ்வருக்கு உலமாக்கட்சி பதிலடி

முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்காரர்கள், குர்ஆன் ஹதீஸை விட்டு விட்டு மஹிந்த சிந்தனையைக் கட்டிப்பிடித்துக் கொண்டு திரிகிறார்கள் என்று கூறிய ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் கூற்று குர் ஆனை எந்த வகையிலும் இழிவுபடுத்தாது என்பதால் அவர் முஸ்லிம்களிடம் மன்னிப்புக் கோர வேண்டிய அவசியம் இல்லை என்று அகில இலங்கை உலமா கட்சி தெரிவித்துள்ளது.

குர் ஆனை இழிவுபடுத்தும் வகையில் ரணில் பேசிவிட்டார் என்றும் இதனால் முஸ்லிம்களிடம் அவர் பகிரங்க மன்னிப்புக் கோர வேண்டும் என்றும் தெரிவித்த அஸ்வர் எம்.பிக்கு பதிலடி கொடுக்கும் வகையிலேயே உலமாக்கட்சி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

இதுபற்றி உலமா கட்சித் தலைவர் மௌலவி முபாறக் அப்துல் மஜீத் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு -

"பொதுவாக ஒரு முஸ்லிம்குர்ஆன்,ஹதீஸை விடுத்து வேறு சித்தாந்தங்களுக்கு முதன்மை வழங்குவானாயின் அவன் உண்மையான முஸ்லிமாக இருக்க முடியாது. அந்த வகையில் குர் ஆன் ஹதீஸே தமது யாப்பு எனக் கூறிக்கொள்ளும் ஸ்ரீமு.கா. இன்று அவற்றை ஒதுக்கி விட்டு வேறு சிந்தனைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து வருவது நாடறிந்த விடயம். - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உயர்தரப் பரீட்சையில் 2,77,452 பேர்

கொழும்பு, ஓக.2

இம்மாதம் 6 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஜி.சீ.ஈ. (உ/த) பரீட்சையில் 2 இலட்சத்து 77ஆயிரத்து 452 பேர் தோற்றவுள்ளனர் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் ஜகத் புஷ்பகுமார அறிவித்துள்ளார்.

இவர்களில் பாடசாலைப் பரீட்சார்த்திகளாக 2 இலட்சத்து 20 ஆயிரத்து 535 பேரும், தனிப்பட்ட பரீட்சார்த்திகளாக 15 ஆயிரத்து 239 பேர் புதிய பாடத்திட்டத்திலும், 41 ஆயிரத்து 323 பேர் பழைய பாடத்திட்டத்திலும் தோற்றவுள்ளனர்.

நாடு முழுவதிலும் 2 ஆயிரத்து 93 பரீட்சை நிலையங்களில் பரீட்சை நடைபெறவுள்ளது. அத்துடன், 289 இணைப்பு நிலையங்களூடாகப் பரீட்சைகள் கண்காணிக்கப்படுவதுடன், சுமார் 12 ஆயிரத்து 500 பேர் வரையிலான ஆசிரியர்கள் கண்காணிப்பாளர்களாக ஈடுபடவுள்ளனர்.

## அச்சமடைகிறார் ரணில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அச்சமல்ல, எனது புகழ் மீது உள்ள அச்சம் என்று குறிப்பிட் டார். இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் பதவி வழங்கப்படுவதாகக் கூறி, சரத் பொன்சேகாவை ஐக்கிய தேசிய கட்சி அழைத்ததாக வெளியான செய்தியில் உண்மை இல்லை எனவும் பொன்சேகா சுட்டிக்காட்டியுள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியின் செய்தியாளர் சந்திப்பு ஒன்றின்போது, கட்சியின் 20 ரூபா சீட்டினை மாத்திரம் பெற்றுக் கொண்டு, ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொள்ளுமாறு ஐக்கிய தேசிய கட்சி கோரியதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (த)

## 'இசற்' புள்ளி விடயத்தில் அரசுக்கு எதிராக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தவுள்ளதாகவும் அறிவித்துள்ளது.

இசற் புள்ளிப் பிரச்சினையால் பாதிப்புக்குள்ளாகிய மாணவர்கள் சிலர் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து மேற்படி விடயம் தொடர்பில் கலந்துரையாடினர். கொழும்பு மாநகரசபை முதல்வரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்ற சந்திப்பில் கருத்து வெளியிட்ட ரணில் விக்கிரமசிங்க மேலும் கூறியவை வருமாறு:-

கலிங்க மாகன் அன்று இராஜரட்டையை நாசப்படுத்தியதுபோல மஹிந்த ராஜபக்ஷ அரசு பரீட்சை முறைமையை முற்றாக நாசமாக்கியுள்ளது. இலவசக் கல்வியில் பரீட்சை முறைமைதான் முக்கியம் பெறுகின்றது. சாதாரண தரப் பரீட்சையின் பின்னர் உயர்தரத்திற்குச் செல்வது யார்? உயர்தரப் பரீட்சைக்குப் பின்னர் உயர்கல்வியைப் பயிலப்போவது யார் என்பவற்றை பரீட்சை முறைமைதான் தீர்மானிக்கின்றது.

இதற்கிணங்க பரீட்சை முறைமை என்பது மன்னாருக்குச் செல்லும் பாலமாக விருந்தால் அந்தப் பாலம் உடைந்தால் மன்னாருக்குச் செல்வதற்கான வீதியொன்று இல்லாமல் போய்விடும். கலிங்க மாகன் இராஜரட்டையை முற்றாக நாசப்படுத்தியதால் அந்தப் பகுதியை விடுத்து மேல்மாகாணம், உடரட்ட மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் அந்த மக்கள் குடியேறினர்.

கலிங்க மாகன் இராஜரட்டையை அன்று நாசப்படுத்தியதுபோல மஹிந்த அரசு பரீட்சை முறைமையை சீர்குலைத்துள்ளதால் இலவசக் கல்வி முறைமை முற்றுமுழுதாக நாசமடைந்துள்ளது.

பழைய முறைமையின் படி இஸட் புள்ளி கணிப்பிடப்பட்டு பல்கலைக்கழகத்துக்குத் தெரிவான மாணவர்களுக்கும், அதேபோன்று புதிய முறைமையின் கீழ் கணிப்பிடப்பட்டு பல்கலைக்கழகத்துக்குத் தெரிவான மாணவர்களுக்கும் பல்கலைக்கழகம் செல்வதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும்.

மாணவர்களுக்கு அநீதி ஏற்படாத வண்ணம் நியாயமான முறையில் இந்த விடயத்தில் அரசு அணுகுமுறைகளைக் கையாளவேண்டும். இது விடயம் தொடர்பில் கலந்துரையாடி தீர்வைக் காண்பதற்கு உயர்கல்வியமைச்சர் இன்னும் அவர்களின் நாடாளுமன்ற ஆலோசனைக் குழுவைக் கூட்டவில்லை.

இஸட்புள்ளி கணிப்பீட்டு முறைமைக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்த மாணவர்கள், அந்த வழக்கில் ஆஜராகி வாதிட்ட சட்டத்தரணிகள், வழக்கை விசாரணை செய்த நீதிவான்கள் ஆகியோரை அழைத்து இந்த விடயம் தொடர்பில் இந்த ஆலோசனைக்குழு தீர்மானமொன்றை எடுக்கவேண் டும்.

1000 அமெரிக்க டொலரை அரசு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு என்ற போர்வையில் அமெரிக்காவிடம் நிபந்தனையின் அடிப்படையில் பெற்றுள்ளது. அப்படியாயின் அதில் 50 மில்லியனையோ அல்லது 100 மில்லியனையோ அரசு அரச பல்கலைக்கழகங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்த வேண்டும்.

பெருந்தொகையான நிதியை வீண்விரயம் செய்து ஒலிம்பிக் போட்டிகளைப் பார்வையிடுவதற்கு 80 - 90 பேரடங்கிய குழுவொன்று லண்டன் சென்றுள்ளது. குறித்த நிகழ்விற்கு நிதியை வீண்விரயம் செய்யமுடியுமென்றால், இந்த அரசால் ஏன் பல்கலைக்கழகத்துக்குத் தேவையான பொருள்களை உடன்வழங்கமுடியாதுள்ளது?

துறைமுகம், விமான நிலையங்களை அமைப்பதற்கு ஏதுவான பிரதேசமாக அம்பாந்தோட்டை இல்லாதபோதிலும்அங்குஇவற்றை அமைக்கின்றனர். இவற்றைச் செய்யமுடியுமென்றால் மேலதிகமாக மாணவர்களை ஏன் பல்கலைக்கழகத்திற்கு அனுமதிக்க முடியாது?

கல்வி முறைமையில் ஏற்பட்டுள்ள அனைத்துவித பிரச்சினைகளுக்கும், இஸட் புள்ளி பிரச்சினைக்கும் ஜனாதிபதி, சம்பந்தப்பட்ட அமைச்சர்கள், மாகாண அமைச்சர்கள், பரீட்சைகள் ஆணையாளர் உட்பட அனைத்துத் தரப்பினரும் பொறுப்புக்கூற வேண்டும். இந்தப் பிரச்சினைகளுக்குப் பொறுப்புக்கூற வேண்டிய அனைவரும் அவர்கள் வகிக்கும் பதவிகளிலிருந்து விரட்டியடிக்கப்படவேண்டும்.

இந்தப் பிரச்சினைகளுக்குப் பொறுப்புக் கூறவேண்டியவர்கள் தொடர்பில் ஆராயும் பொருட்டு நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றை அமைக்க நாம் நடவடிக்கை எடுக்கவேண்டியுள்ளது. இந்த விடயங்கள் தொடர்பில் ஆழமான முறையில் கலந்துரையாடி அடுத்தகட்ட நடவடிக்கைகளை எடுப்பது தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் என்ற அடிப்படையில் சம்பந்தப்பட்ட அனைத்து அரசியல் கட்சிகளையும், அமைப்புகளையும் அழைத்து எதிர்வரும் 6 ஆம் திகதி கலந்துரையாடவுள்ளேன்.

அரசியல் கட்சிகள் மற்றும் அமைப்புகளுடன் பேச்சு நடத்தி அனைத்துத் தரப்பையும் ஒன்றிணைத்து - மாணவர் - ஆசிரியர்களுக்கு இது தொடர்பில் விளக்கமளிக்கும் நிகழ்வொன்றை நடத்தி 2 வாரங்களுக்குள் அரசுக்கு எதிராகப் பாரிய ஆர்ப்பாட்டத்தை நடத்தத் தீர்மானித்துள்ளோம் - என்றார்.

இசற் புள்ளியால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் ஆர்ப்பாட்டம் இன்று காலை 9.30 மணிக்கு பொறளை கெம்பல் பாக்கில் இருந்து ஆரம்பமாகி பொறளைச் சந்தியை அடைந்து அங்கிருந்து வாட்பிளேஸ் ஊடாக மானியங்கள் ஆணைக்குழு அலுவலகத்தைச் சென்றடையுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (த-சி)

## எண்ணெய் ஆலையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுத்திகரிக்கும் திறனுள்ள ஆலையை நிறுவவுள்ளதாக இந்திய ஊடகங்கள் தகவல் வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

## இலங்கையில் சீனப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலானது. இந்த விடயத்தில் மத்திய அரசு தீவிர கவனம் செலுத்த வேண்டும். - என்றார்.

தனுஸ்கோடிக்கு அருகே உள்ள தீவு ஒன்றை ஒட்டியதாக சீனக் கடற்படையின் உதவியுடன் தற்காலிக முகாம் ஒன்றை அமைக்கும் பணியில் இலங்கைக் கடற்படை ஈடுபட்டுள்ளது என தமிழகப் பத்திரிகையில் வெளிவந்த செய்திகளை ஒட்டி கருத்து வெளியிடுகையிலேயே கருணாநிதி மேற்கண்டவாறு கூறினார்.

1980இல் டெசோவை ஆரம்பித்த நீங்கள் பின்னர் ஏன் அதனைக் கைவிட்டீர்கள் என அவரிடம் எழுப்பிய கேள்விக்கு "டெசோ மீள ஆரம்பிக்கப்படுவதற்குக் காரணம் போரினால் இலங்கைத் தமிழர்கள் பட்ட காயங்களிலிருந்து அவர்களை மீட்பதற்காகவே" என்று பதிலளித்தார்.

இந்த டெசோ மாநாட்டில் மத்திய அமைச்சர்களான சரத் பவார், பாருக் அப்துல்லா மற்றும் சரத் யாதவ் ஆகியோருடன் புலம்பெயர் நாடுகளில் உள்ள அறிஞர்கள், அரசியல் தலைவர்கள் உட்படப் பலர் கலந்துகொள்வர் எனவும் கருணாநிதி கூறினார். (த)

## தமிழர்களுக்கு நேரடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுகையில், தமிழர்களுக்காக இந்திய மத்திய அரசு வழங்கிய நிதியை, இலங்கை அரசு சரியான முறையில் பயன்படுத்தவில்லை என்பது, அங்கு சுற்றுப் பயணம் செய்தபோது தெரியவந்தது. இதனால், பாதிக்கப்பட்டவர்களுக்கு அவர்களின் பெயரிலேயே வங்கிக்கணக்கை ஆரம்பித்து, நிதி உதவி வழங்க மத்திய அரசு ஆலோசித்து வருகிறது என்று கூறினார். (த)

## இராணுவ ரீதியாகத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

49 இயக்கங்கள் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தினால் வெளிநாட்டுத் தீவிரவாத அமைப்புகளாகப் பட்டியலிடப்பட்டுள்ளன. என்று இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

1997 ஒக்ரோபர் 8ஆம் திகதி விடுதலைப் புலிகள் இயக்கத்தை முதன் முதலாக அமெரிக்கா வெளிநாட்டுத் தீவிரவாத அமைப்பாக அறிவித்தது. 2009 மே மாதம் விடுதலைப் புலிகள் இயக்கம் இராணுவ ரீதியாக இலங்கைப் படைகளினால் தோற்கடிக்கப்பட்ட போதும், விடுதலைப் புலிகளின் அனைத்துலக அனுதாபிகள் வலையமைப்பும், நிதி உதவி வழங்குவோரின் செயற்பாடுகளும் இன்னமும் உயிர்ப்புடன் உள்ளன.

ஆஸ்திரேலியா மற்றும் வடஅமெரிக்க, ஐரோப்பிய நாடுகளில் விடுதலைப் புலிகள் இயக்கம் புலம்பெயர் தமிழர்களிடம் இருந்து தொடர்ந்தும் நிதி சேகரித்து வருகிறது. நிதி சேகரிப்புக்காகத் தமிழ் தொண்டர் நிறுவனங்களையும் பயன்படுத்தி வருகிறது. இலங்கையில் இருந்து தப்பிய சில விடுதலைப் புலிகள் இந்தியாவில் மீள ஒருங்கிணைய முயன்றதாகவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் இலங்கையில் தற்போதைக்கு மீள உருவெடுக்கக்கூடிய அபாயம் இல்லை என அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் 2011ஆம் ஆண்டுக்கான பயங்கரவாத எதிர்ப்பு அறிக்கையை வெளியிட்ட அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள ஆணையாளர் பென்ஜமின் தெரிவித்துள்ளார். (த)

## வல்லரசுகளின் போட்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மொன்றில் உரை நிகழ்த்தினார்.

விசேடமான புவிசார் - அரசியல் பிரதேசத்தில் இலங்கை நாடு நிலை கொண்டிருப்பதால், சீனக் கடற்படையானது இப்பிரதேசத்தில் அதிக ஈடுபாடும் ஆக்கிரமிப்புத் தன்மையும் கொண்டு செயல்படத் தொடங்குமானால் அமெரிக்காவுடன் அதிக ஒத்துழைப்புடன் செயல்படும்படியாக இலங்கை கோரப்படலாம் என்று தெரிவித்த பேராசியர்,

மக்கள் சீனக் குடியரசானது பெருங்கடல் பிரதேசத்தில் கப்பல் பயணங்களில் சவால்களை ஏற்படுத்துமானால் அல்லது எந்த வகையிலாவது வர்த்தகத்துக்கு தடங்கலாக இருக்குமானால் அல்லது குடாக்கடல் பகுதியிலிருந்துவரும் எண்ணெய் விநியோகத்தில் தலையிட முயலுமானால் நிச்சயமாக அமெரிக்கா தனது வல்லமைகளைப் பிரயோகிக்காமல் இருக்கமாட்டாது என்றார். அவர் மேலும் கூறுகையில்; இலங்கைக் கொள்கை வகுப்பாளர்கள் இதில் தம் தெரிவை தீர்மானிக்கவேண்டும். எந்த அளவுக்கு அமெரிக்காவுடன் இணைந்து போவது அல்லது ஒதுங்கி விடுவது என்பது குறித்து என்றார்.

சர்வதேச லக்ஷ்மன் கதிர்காமர் நிறுவனத்தில் பேராசிரியர் கங்குலி உரை நிகழ்த்தினார். 2009ஆம் ஆண்டு போர் முடிவின் இறுதிகட்டத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் இராணுவ அத்துமீறல்கள் தொடர்பாக அமெரிக்கா பிரயோகித்த அழுத்தங்களினால் அமெரிக்க - இலங்கை உறவுகள் பலவீனமடைந்தன.

இலங்கை அரசு தனது உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்களுக்கு சீனாவிடம் அதிகமாக சாய்ந்துபோவது அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் மனக்கசப்பை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவின் உலக ஆதிக்கத்தை, எதிர்க்கக்கூடிய நாடாக சீனாவே காணப்படுவதால் தென்னாசிய விடயத்தில் அமெரிக்கா தனது மூல வளங்களையும் கவனத்தையும் திருப்புவதுடன் இந்தியாவுடனான உறவுகளையும் பலப்படுத்திக் கொள்ள விரும்புகிறது. (ப)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## சவாலுக்கு உள்ளாகும் சிறுபான்மை மக்களின் மத சுதந்திரம்

மத சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தும் வகையில் இலங்கையில் பல சம்பவங்கள் இடம்பெற்றன; இடம்பெற்று வருகின்றன. அரசாங்கம், அத்தகைய சம்பவங்களுக்கு காரணங்களை வெளியிட்டது; ஆனால் அவற்றைக் கட்டுப்படுத்த முன்வரவில்லை.

இதனைப் பௌத்த மதம் தவிர்ந்த ஏனைய சமய அமைப்புகளைச் சார்ந்த தரப்புக்கள் பல தடவைகள் சுட்டிக்காட்டி இருந்தன. இப்போது அமெரிக்கா அதனை உத்தியோக பூர்வமாக அனைத்துலக மட்டத்தில் பகிரங்கப்படுத்தி உள்ளது.

இலங்கையில் மத ரீதியான பாகுபாட்டை உருவாக்கும் மற்றும் சமுதாய ரீதியான மீறல்கள் குறித்து, அமெரிக்காவின் வெளிவிவகார அமைச்சர் ஹிலாரி கிளின்டன் வெளியிட்ட அனைத்துலக மத சுதந்திரம் தொடர்பான, விசேட அறிக்கை ஒன்றையே இங்கு குறிப்பிடுகிறோம்.

இலங்கையின் அரசமைப்புச் சட்டத்தில், மத சுதந்திரத்தைப் பாதுகாக்க ஏற்பாடுகள் இருந்த போதிலும், அதற்கு எடுத்துக்காட்டான செயற்பாடுகளில் அரசு ஈடுபடுவதில்லை என்றும் அந்த விசேட அறிக்கையில் மிகத் துல்லியமாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

இலங்கையில் மத சுதந்திரம் போட்டுடைக்கப்படுவதனை அனைத்துலக மட்டத்தில், அமெரிக்க அமைச்சர் இப்போது வெளிச்சம் போட்டுக் காட்டினாலும், இந்த நாட்டில் உள்ள ஊடகங்கள் அவ்வப்போது சுட்டிக் காட்டின. ஆயினும், மத சுதந்திரத்தை மீறும் செயற்பாடுகளை ஆமோதிக்கும் வகையிலும், கண்டும் காணாத போக்கிலுமே இந்த நாட்டு அரசு, செயற்பட்டு வருவது வெள்ளிடை மலை போன்றதே.

அதனையே-

அமெரிக்க அமைச்சர், மத சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தும் வகையில் பல வேண்டாத சம்பவங்கள் இடம்பெற்ற போதிலும், இலங்கை அரசு அவற்றுக்கு நொண்டிச் சாட்டுக்களை, காரணங்களை முன்வைத்ததைத் தவிர, ஆக்கபூர்வமாகச் செயற்படவில்லை என்று நுள்ளிக் காட்டுகிறார்.

பௌத்த மதம் தவிர்ந்த ஏனைய மதங்களைக் கைக்கொள்வோரின் மனங்களைப் புண்படுத்தும் கைங்கரியம் திருகோணமலை பஸ் நிலையத்தில் புத்தர் சிலை நிறுவும் கைங்கரியத்துடன் சில ஆண்டுகளுக்கு முன்னரே தொடங்கப்பட்டதை இங்கு ஞாபகப்படுத்தலாம்.

அதனைத் தொடர்ந்து போர் முடிவுற்ற மூன்று ஆண்டுகளில் தமிழ் மக்களின், தமிழ் பேசும் மக்களின் பூர்வீக நிலங்களில் கௌதம புத்தரின் சிலைகளை நிறுவி, அவற்றைச் சிங்கள மக்களின் பிரதேசங்கள் என்று நிறுவும் திட்டம் அவ்வப்போது, அங்காங்கே கனகச்சிதமாக நிறைவேற்றப்பட்டு வருகின்றது.

ஒட்டு மொத்தத்தில் தமிழ் மக்களின், தமிழ் பேசும் மக்களின் மிகப் பெரும்பான்மையினரின் மதமான இந்து மதத்தை வடக்கு கிழக்கில் பிய்த்துப் பிறாண்டும் ஏற்பாடுகள் வெகுவீச்சாக மேற்கொள்ளப்படுகின்றன. அதே வரிசையில் இஸ்லாமிய மக்களின் வழிபாட்டுத் தலங்களை அகற்றும் அதிகாரத்தனமான, மேலோங்கித் தனமான செயற்பாடுகளும் அரங்கேற்றப்படுகின்றன.

இலங்கையின் சரித்திரப் பிரசித்திபெற்ற பிரதான ஈஸ்வரங்களில் ஒன்றான, வடக்கில் மன்னாரில் அமைந்துள்ள, திருக்கேதீஸ்வரத்தில் புத்தர் பெருமானின் சிலை நிறுவும் சூழ்ச்சி மிக்க முயற்சி அரங்கேற்றப்பட்டதை இங்கு விசேடமாகக் குறித்தாக வேண்டும்.

இவ்வாறாக, பௌத்த சமயம் சாராத மக்கள் பெரும் எண்ணிக்கையில் வாழும் பிரதேசங்களில் பௌத்த மதம் சார்ந்த மத நிலையங்கள் இருந்தன என்று காட்டும், இல்லை இல்லை நிறுவும் தந்திரமான, அடாத்தான செயற்பாடுகளுக்கு அரச ஆதரவும், பின்னணியும் உண்டெனக் கொள்ளும் அளவுக்கு -

தமிழர் பிரதேசங்களில் மத சுதந்திரம் பாதுகாப்பற்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. பல்வேறு வடிவங்களில், பெருவீச்சில் புனை ஆதாரங்களைப் பெருக்கும் செயல் வடிவங்களும் தலையெடுத்து வருகின்றன.

சிறுபான்மை இன மக்களின், குறிப்பாக வடக்கு, கிழக்கின் பூர்வீக குடிமக்களான தமிழ் மக்களின், தமிழ் பேசும் மக்களின் மத சுதந்திரம் பல்வேறு நோக்கங்களுடன், வெவ்வேறு வடிவங்களில் உள்ளந்தரங்கமாகவும், வெளிப்படையாகவும் மீறப்படும் சம்பவங்கள் அரங்கேற்றப்படுகின்றன.

அத்துடன் அவற்றின் அடி அத்திபாரமாக தமிழ் மக்களுக்குப் பூர்வீக தாயகம் எதுவும் இருக்கவில்லை என்று நிலைநாட்டி, அவர்களை நிரந்தர இரண்டாம் தரப் பிரஜைகளாக்கும் நச்சு விதை தூவப்படுகிறது என்ற உண்மை உள்ளுறைந்துள்ளது. நவீன, நாகரிக உலக நியதிகளை, அவற்றின் பாற்பட்ட சிறுபான்மையினரின் உரிமைகளை உடைத்து, பெரும்பான்மைப் பலத்துடன் அவற்றுக்குச் சவால் விடும் ஒரு கைங்கரியமாகவும் இதனைக் கொள்ளலாம்.

## தரமற்ற சிறுவர் இல்லங்களை வடக்கு, கிழக்கில் மூடத் தீர்மானம்

கொழும்பு, ஓக.2

வடக்குக் கிழக்குப் பிரதேசங்களிலுள்ள தனியார்துறை சிறுவர் இல்லங்கள் சம்பந்தமாக ஆய்வொன்றை நடத்தி முறையான தர நிர்ணயங்களுக்கு அமைவாகச் செயற்படாத சிறுவர் இல்லங்களை மூடிவிடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாகக் கருத்துத் தெரிவித்துள்ள நன்னடத்தை ஆணையாளர் திருமதி யமுனா பெரேரா, இந்தச் செயற்பாடு தொடர்பாக வட மாகாண ஆளுநரால் வடமாகாண சபையின் நன்னடத்தை ஆணையாளருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

எனினும் அந்தச் சிறுவர் இல்லங்கள் மாகாண நன்னடத்தை ஆணையாளர் திணைக்களத்தின் நீதிமன்றம் மற்றும் சட்டவிதிகளுக்கு அமைவாக குறைபாடுகளை முறையாக சீர்ப்படுத்திக் கொள்ளுமா என்பதைக் கண்டறிந்து கொள்வதற்கு கால அவகாசம் வழங்கப்பட்டதன் பின்னரே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படலாம் எனவும் கூறியுள்ளார்.

எவ்வாறான போதிலும், தரமற்ற சிறுவர் இல்லங்களை மூடும் தீர்மானத்துக்கு இலக்காகும் சிறுவர் இல்லங்களிலுள்ள சிறார்கள் வேறு இல்லங்களில் சேர்த்து விடப்படுவர்.

நாடு முழுவதும் மாகாண நன்னடத்தை ஆணையாளரின் கண்காணிப்பின் கீழ் நிர்வகிக்கப்பட்டு வரும் 341 சிறுவர் இல்லங்கள் இருப்பதாகவும் யமுனா பெரேரா தெரிவித்துள்ளார். (ம-22)

## நல்லூரில் இன்று மஞ்சம்

யாழ்ப்பாணம், ஓக.2

பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் திருமஞ்சத் திருவிழா இன்று வியாழக்கிழமை மாலை இடம்பெறும்.

இன்று மாலை இடம்பெறும் மஞ்சத் திருவிழாவில் பெரும் எண்ணிக்கையான மக்கள் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இன்றைய மஞ்சத் திருவிழாவில் மக்கள் அதிகளவில் கலந்து கொள்வதாலும் மக்களின் நெரிசலைப் பயன்படுத்தித் திருட்டுகள் அதிகரிக்கலாம் என்றும் பக்தர்கள் இந்த விடயத்தில் கவனமாக இருக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-17-86)

## பாடசாலை நேரத்தில் அதிபர், ஆசிரியர்கள் வெளிச் செல்லத் தடை

கொழும்பு,ஓக. 2

அடுத்துவரும் பாடசாலைத் தவணையில் இருந்து, எந்தவொரு காரணத்தைக் கொண்டும் பாடசாலை அதிபர்களோ, ஆசிரியர்களோ பாடசாலையில் கல்விச் செயற்பாடு இடம்பெறும் நேரத்தில் வெளியே செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின்செயலாளர் கோத்தபாய ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

கல்வித்துறை சார்ந்த வெளி வேலைக்கு அல்லது பணிசார்ந்த வேலைக்கும் பாடசாலை நேரம் முடிவடைந்த பின்னரே வெளியே செல்ல வேண்டும் எனவும் ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, ஒவ்வொரு பாடசாலை அதிபரும், ஆசிரியர்களும் காலை7.30 மணியிலிருந்து பி.ப 1.30 வரையில் கடமையில் இருப்பதுகட்டாயமாகிறது எனவும் கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

ஒருசில ஆசிரியர்கள் துறைசார் வெளிக்கருமங்கள் மற்றும் வேறு காரணங்களைக் காட்டிப் பாடசாலை நேரத்தில் வெளியேறிச் செல்வதனால் பாடசாலையில் கல்விச் செயற்பாடுகளுக்குப் பெரும் தடை ஏற்படுவதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (த-22)

## உயர்தர கல்வித் தகுதியுடன் வேலையின்றி 47,300 பேர்

யாழ்ப்பாணம், ஓக.2

வெளியாகியுள்ள புள்ளி விவரங்களின்படி 47 ஆயிரத்து 300 பேர் உயர்தரம் கற்றுத் தேறிய நிலையில் வேலையின்றி உள்ளமை தெரிய வந்துள்ளது.

இது வடக்கில் யாழ். மாவட்டத்தில் உள்ள நிலைமையை மட்டுமே சுட்டி நிற்கின்றது.

தொழில் இன்மை தொடர்பாக வலி.மேற்கு பிரதேச சபை உறுப்பினர் த.நடனேந்திரன் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

வலி.மேற்கு பிரதேச சபையின் தொழில் நுட்ப குழுக் கூட்டத்தில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இன்று நாடு தழுவிய ரீதியில் உயர் தேசிய டிப்ளோமா பட்டம் பெற்றவர்களைத் தவிர்த்து, ஏனைய பட்டதாரிகளுக்கு அவர்களின் பட்ட நிலைமையைப் பரிசீலித்து ஆறு மாத பயிலுநர் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

**பட்டதாரிகளை விட பெரிய பிரச்சினையாகவுள்ளது உயர்தரம் கற்றுத் தேறியவர்களின் எண்ணிக்கையே.**

ஆனால் இன்று யாழ்.குடாநாட்டில் உயர்தரம் வரை கற்றுத் தேறிய பல ஆயிரக்கணக்கானவர்கள் அவர்களின் தராதரத்துக்கு ஏற்ற வகையில் தொழில் இன்றி மிகைச் சுமையானவர்களாக உள்ளனர்.

இவர்களை வாழ்வாதாரத்தில் வளமிக்கவர்களாக மாற்ற அதிகாரம் உடையோர் முன்வர வேண்டும்.

தற்போது பட்டதாரிகளை விட பெரிய பிரச்சினையாகவுள்ளது உயர்தரம் கற்றுத் தேறியவர்களின் எண்ணிக்கையே. எனவே மிகைச் சுமையாக உள்ளவர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் - என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-50)

## கல்வி அதிகாரிகளுக்கு எதிராக 200 லஞ்ச முறைப்பாடுகள்

தென்மராட்சி, ஓக.2

பாடசாலை அதிபர்கள் உட்பட கல்வி அதிகாரிகள் லஞ்சம் பெறுவதாக 200 வரையான முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக லஞ்ச, ஊழல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது .

அடுத்த ஆண்டுக்கு பாடசாலைகளில் மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும் செயற்பாடு ஆரம்பமானதையடுத்து கல்வித்துறை அதிகாரிகளுக்கு எதிராக கிடைத்து வரும் லஞ்ச முறைப்பாடுகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும், ஆணைக்குழுவுக்குக் கிடைக்கும் ஒவ்வொரு 20 முறைப்பாடுகளில் 15 கல்வி அதிகாரிகளுக்கு எதிரானவை எனவும், ஆணைக்குழுவின் தலைவரும் உயர்நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதியுமான ஜகத் பாலபட்ட பெந்தி தெரிவித்துள்ளார்.

லஞ்சம் பெறப்படுவதாக முன்வைக்கப்படும் முறைப்பாடுகளில் பெரும்பாலானவை பெயர் குறிப்பிடப்படாத முறைப்பாடுகளாகவே இருப்பதால் இவற்றை ஆணைக்குழு விசாரணைக்கு எடுத்துக் கொள்ள முடியாத நிலை உள்ளதைச் சுட்டிக்காட்டிய அவர், இவ்வாறான விசாரிக்க முடியாத பெருந்தொகையான முறைப்பாடுகள், கல்வி அமைச்சின் செயலாளரிடம் கையளிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார் .

எனவே லஞ்சம் பெறும் முறைப்பாடுகளை முன்வைக்கும் சந்தர்ப்பங்களின் பெயர்களைக் குறிப்பிட்டு அனுப்பி வைக்குமாறு அவர் கேட்டுள்ளார். (த-22)

## தொழில்நுட்ப உத்தியோகத்தராக அரச தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்

கொழும்பு, ஓக.2

அரசு சார்ந்த தொழில்நுட்பக் கல்லூரிகளில் தொழிற் பயிற்சிகளைப் பெற்று வரும் மாணவர்கள், அரச தொழில்நுட்ப உத்தியோகத்தர்களாக இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர்.

வடக்கு - கிழக்குப் பிரதேசங்களில் உள்ள அரச அலுவலகங்களில் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கு நிலவும் கடும் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் நோக்கில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் டபிள்யூ.டீ.ஜே. செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

இன்றைய அளவில், வடக்கு - கிழக்கு மாவட்டச் செயலகங்களில் மற்றும் பிரதேச செயலர் அலுவலகங்களில் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கு நிலவும் கடும் பற்றாக்குறை காரணமாக அவற்றின் செயற்பாடுகள் முடங்கிப் போயுள்ளன - என்று அவர் மேலும் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலர் அலுவலகங்களில் நிலவும் பதவி வெற்றிடங்கள் சம்பந்தமாக மாவட்டச் செயலாளர் என்.வேதநாயகத்தின் வெளிப்படுத்தலொன்றுக்கு அமைய, அமைச்சர் இத்தீர்மானத்துக்கு வந்துள்ளார்.

முல்லைத்தீவு நிர்வாக மாவட்டத்தில் பொறியியலாளர் ஒருவர் மாத்திரமே செயற்படுவதாக தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (ம-22)

# 50 ஆண்டுகளுக்குப் பின்னர் இரணைமடு புனரமைப்பு

## வடக்கு நீர்ப்பாசனப் பொறியியலாளர் தகவல்

யாழ்ப்பாணம், ஓக.2

50 ஆீண்டுகளுக்குப் பின்னர் கிளிநொச்சி இரணைமடுக் குளத்தில் புனரமைப்பு வேலைகள் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மழைகாலங்களில் பெறப்படும் நீர் தற்போது முழுமையாகத் தேக்கப்படாததால் கடலுக்குள் வீணே செல்கின்றது.

'இபாட்' நிதி மூலம் இரணைமடுக்குளத்தின் மேல்தளம் மற்றும் கீழ்த்தளம் மீளப்புனரமைக்கப்படவுள்ளன. வடக்கு மாகாண நீர்ப்பாசன எந்திரி என்.சுதாகரன் இந்தத் தகவல்களைத் தெரிவித்தார்.

யாழ்.அரச அதிபர் தலைமையில் இடம்பெற்ற யாழ்-கிளிநொச்சி குடிதண்ணீர் விநியோகம் தொடர்பான முன்னேற்றக் கூட்டத்தில் கலந்து கொண்ட எந்திரி சுதாகரன் மேலும் தெரிவித்ததாவது:-

இரணைமடுக் குளத்தின் அபிவிருத்திக்கு முன்னர் அங்குள்ள நீர் மட்டம் தொடர்பாகவும், வரட்சி தொடர்பாகவும் எதிர்வு கூறமுடியாது. தற்போது உலக வங்கியின் நிதியுதவி மற்றும், 'இபாட்' நிதி உதவியுடன் குளத்தின் உட்கட்டுமானம், மேல்தள, கீழ்த்தள வேலைகள் 50 ஆண்டுகளுக்குப் பின்னர் இடம்பெறுகின்றன

தற்போது வறட்சி அதிகமாக உள்ளது. இனிவரும் காலங்களில் உட்கட்டுமான அபிவிருத்திக்குப் பின்னர் மழைநீர் எதிர்பார்த்த அளவு சேகரிக்கப்படும். இதன் போது அதிகளவு நீர் கிடைக்கவுள்ளதால் கிளிநொச்சி விவசாயிகளுக்கும், யாழ்.குடாவுக்கும் போதிய நீரை வழங்க முடியும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இதில் கலந்து கொண்ட திட்டப் பணிப்பாளர் தி.பாரதிதாசன் கூறுகையில்,

'2016 இல் இந்தத் திட்டம் முழுமைபெறும். இதற்காக நாம் பல மில்லியன் அமெரிக்க டொலர் நிதியைப் பெற்றுள்ளோம். எனவே முதற்கட்டமாகப் பிரதேச செயலர் காணி விடயங்களுக்குக் கூடுதல் முன்னுரிமை கொடுத்து உதவ வேண்டும் எனக் கேட்டுள்ளார்.

(க-50)

# சில்லுகள் கழன்று ஓடியதால் கடலுக்குள் பாய்ந்தது பஸ்



தனியார் பஸ் ஒன்றின் முன் சக்கரங்கள் இரண்டும் திடீரெனக் கழன்று தனியே ஓடின. இதனால் அந்த பஸ் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானது.

மன்னார் தனியார் பஸ் தரிப்பிடத்திலிருந்து நேற்றுக் காலை வட்டக்கண்டல் கிராமத்தை நோக்கிப் பயணித்த பஸ் காலை 7.30 மணியளவில் அதன் முன் சக்கரங்கள் இரண்டும் கழன்றதால் கட்டுப்பாட்டையிழந்து அருகிலுள்ள கடலுக்குள் பாய்ந்துள்ளது.

மன்னார் பிரதான பாலத்திலிருந்து சுமார் 100 மீற்றர் தொலைவில் இந்த விபத்துச் சம்பவம் நிகழ்ந்தது.

ஆழம் குறைவான பகுதியில் பஸ் பாய்ந்ததால் பயணிகளுக்கு அதிக பாதிப்பு ஏற்படவில்லை. ஒருவர் மட்டுமே காயமடைந்த நிலையில் மன்னார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மன்னார் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(க-12)



அக்கராயனில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின்போது பிரதேச செயலகத்தின் சேவைகளை மக்கள் எவ்வாறு இலகுவாகப் பெறுவதென்பது தொடர்பாக கரைச்சிப் பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் உரையாற்றிக் கொண்டிருக்கின்றார்.

(க-18)

## பரீட்சைக்குத் தோற்றும் முல்லை மாணவர்கள்

இந்த ஆண்டு நடைபெறவுள்ள க.பொ.த உயர்தர பரீட்சைக்கு முல்லைத்தீவு கல்வி வலயத்தில் இருந்து 767 மாணவர்களும் தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சைக்கு 1077 மாணவர்களும் தோற்றவுள்ளதாக முல்லைத்தீவு வலயக் கல்விப்பணிப்பாளர் கோ.வரதராஜமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இவர்களுக்கான பரீட்சைகள் புதுக்குடியிருப்பு மத்தியகல்லூரி, முல்லைத்தீவு மகாவித்தியாலயம், முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி, விசுவமடு மகாவித்தியாலயம் ஆகிய நான்கு பாடசாலைகளில் அமைக்கப்படும் பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(க-6)

# வவுனியாவில் நல்லெண்ணெய் உற்பத்தி

வவுனியா ஓக.1

வவுனியாவில் நல்லெண்ணெய் உற்பத்தியை மேம்படுத்துவதற்கு வவுனியா பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றது. இதுவரை 5 ஆயிரம் கிலோ எள்ளைக் கொள்வனவு செய்துள்ள இந்தச் சங்கம் குறிப்பிட்ட சில நாள்களுக்குள் 600 போத்தல் நல்லெண்ணெயை உற்பத்தி செய்துள்ளது.

"முன்னர் யாழ்ப்பாணத்தில் இருந்து வரும் நல்லெண்ணெயை எதிர்பார்த்து இங்குள்ளவர்கள் காத்திருப்பர். தற்போது இந்த எதிர்பார்ப்பை நிறைவேற்றுவதில் வவுனியா பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. இந்த எண்ணெய் உற்பத்தியின் போது கிடைக்கும் ஒருபகுதி பிண்ணாக்கு வேறு இடங்களுக்கு அனுப்பிவைக்கப்படுகின்றது. ஒரு பகுதி பிண்ணாக்கு வன்னிப் பிரதேசத்திலுள்ள கால்நடைகளுக்கு உணவுக்கென விற்பனை செய்யப்படுகின்றது" என்று சங்கம் தெரிவித்தது.

போத்தலொன்று 400 ரூபாவாக விற்பனை செய்யப்படும் நல்லெண்ணெயை வவுனியாவுக்கு வரும் உல்லாசப் பயணிகள் ஆர்வத்துடன் கொள்வனவு செய்வதனால் உற்சாகமடைந்த சங்கத்தினர் நல்லெண்ணெய் உற்பத்தியில் ஆர்வத்துடன் ஈடுபட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

(க-402)

# போக்குவரத்து வசதிகளின்றி அவலத்தில் தட்டுவன்கொட்டி

கிளிநொச்சி ஓக.2

போக்குவரத்து வசதிகள் எதுவுமே இல்லாததால் கிளிநொச்சி தட்டுவன்கொட்டிக் கிராம மக்கள் தினமும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட தட்டுவன்கொட்டிக் கிராமத்தில் தற்போது 93 வரையான குடும்பங்கள் மீளக்குடியமர்ந்து வசித்து வருகின்றன.

ஆனால் இந்த மக்களுக்கான போக்குவரத்து வசதிகள் எதுவும் இல்லாத நிலையே இன்று வரை காணப்படுகின்றது. இதனால் தினமும் இவர்கள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

சுமார் நான்கு கிலோமீற்றர் தூரத்தை நடையாகவோ அல்லது சைக்கிள் மூலமாகவோ கடந்து தான் இவர்கள் ஏ-9 வீதியை அடைய முடிகின்றது. தட்டுவன் கொட்டிச் சந்தியையே இவர்கள் தமது போக்குவரத்துத் தேவைகளுக்குப் பயன்படுத்தி வருகின்றனர்.

இங்கிருந்துதான் இவர்கள் ஏனைய இடங்களுக்குச் சென்று வருகின்றனர்.

மேலும் இந்தக் கிராமத்துக்கான ஒரேயொரு வீதியும் கடந்த 50 வருடங்களுக்கு மேலாகப் புனரமைப்பு எதுவுமின்றி மிகவும் மோசமான நிலையில் காணப்படுகின்றது. இதில் பயணிப்பது என்பது இந்தக் கிராம மக்களுக்கு நரக வேதனையாகவே உள்ளது.

மேலும் குடிதண்ணீர் தட்டுப்பாடும் இவர்களை வாட்டி வருகின்றது.

போரினால் ஏனையவர்களைப் போன்று பாதிக்கப்பட்டுத் துன்பங்களை அனுபவித்து மீளக்குடியமர்ந்த தமக்கும் முக்கிய தேவையான போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தித் தந்து துன்பங்களைப் போக்க வேண்டுமென இந்த மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(க-6)

# பாடசாலை மாணவர்கள் சிலரிடையே வவுனியாவில் போதைப் பாவனை

## பெற்றோரே விழித்துக் கொள்ளுங்கள் அபாயக்குரல் எழுப்புகின்றனர்; சமூக ஆர்வலர்கள்

வவுனியா ஓக.2

வவுனியா மாவட்டத்திலுள்ள பாடசாலை மாணவர்களுக்கிடையில் அண்மைக்காலமாக மதுபானம் மற்றும் போதைப்பொருள் என்பனவற்றின் பாவனை அதிகரித்துள்ளதாக சமூக ஆர்வலர்களும், கல்வியியலாளர்களும் கவலை வெளியிட்டுள்ளனர்.

பாடசாலையின் கற்றல் செயற்பாடுகளுக்கு வரும் மாணவர்கள் மதுபானம், போதைப்பொருள்கள் என்பவற்றைச் சூட்சுமமான முறையில் பாடசாலைக்கு எடுத்து வந்து பயன்படுத்துவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மாண்வர்கள் சிலர் பாடசாலைக்கு வரும்போது தண்ணீர்ப் போத்தலில் (சுடுதண்ணீர்ப் போத்தல் போன்ற அமைப்பு) மதுபானத்தையும் சோடாவையும் கலந்து கொண்டு வருவதாகவும் அவ்வாறு கொண்டு வரப்பட்ட மதுபானத்தை மாணவர்கள் ஒன்று சேர்ந்து அருந்திய பின்னர் ரகளையில் ஈடுபடுவதாகவும் சமூக ஆர்வலர்கள் தெரிவித்தனர்.

அண்மையில் வவுனியாவில் உள்ள பாட்சாலை ஒன்றில் இவ்வாறு மதுபானம் அருந்திய மாணவர்கள் ஒரு சிலர் காலைப் பிரார்த்தனைக் கூட்டத்தில் ரகளை செய்துள்ளனர்.

மாணவர்கள் மத்தியில் வன்முறைக் கலாசாரம் மேலோங்கிக் காணப்படுவதால் இத்தகைய செயல்பாடுகளில் ஈடுபடும் மாணவர்களைக் காட்டிக் கொடுப்பதற்கு ஆசிரியர்களும், அதிபர்களும் தயக்கம் காட்டுகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. அவ்வாறு இனங்காட்டிவிட்டால் சம்பந்தப்பட்ட ஆசிரியர் தாக்கப்படுவதற்கான அல்லது அவர்களது உடைமைகள் சேதமாகக்கப்படுவதற்கான சாத்தியக் கூறுகள் காணப்படுவதால் பாடசாலைச் சமூகத்தினர் பின்னிற்கின்றனர் என்றும் தெரியவருகின்றது.

தமது பிள்ளைகளின் எதிர்கால வாழ்க்கையில் அக்கறை கொண்ட பெற்றோர் பிள்ளைகள் பாடசாலை செல்லும் போதும் அவர்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளிலும் கூடிய கவனம் செலுத்த வேண்டுமெனக் கல்வியியலாளர்களும், சமூக நலன்விரும்பிகளும் வலியுறுத்துகின்றனர்.

ஏற்கனவே வவுனியாவில் மாணவர்களால் பல்வேறு அடாவடித்தனமான செயல்கள் அரங்கேறியுள்ளன.

பாடசாலையின் அதிபரொருவரைத் தாக்கியமை, பாடசாலையொன்றின் ஒன்றுகூடல் நிகழ்வைக் குழப்புவதற்காகச் சேதங்களை விளைவித்தமை, விளையாட்டு நிகழ்வு ஒன்றின் போது சண்டித்தனத்தைக் காண்பித்தமை என்பன அண்மையில் வவுனியாவில் மாணவர்களால் இடம்பெற்றுள்ள காடைத்தனமான சம்பவங்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

(க-410)

# தஞ்சம் நிராகரிக்கப்பட்டோர் துன்புறுத்தப்படவில்லை

## பிரி. நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் அமைச்சர் பீரிஸ்

யாழ்ப்பாணம், ஓக.2

பிரிட்டனில் புகலிட தஞ்சக் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட பின்னர் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டவர்கள் எவரும் இங்கு துன்புறுத்தல்களுக்குள்ளாகவில்லை என வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

பிரிட்டனில் இருந்து வருகை தந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே அமைச்சர் நேற்று இதனைத் தெரிவித்தார்.

புகலிட தஞ்சம் நிராகரிக்கப்பட்ட பின்னர் பிரிட்டனில் இருந்து திருப்பி அனுப்பப்படுபவர்களை ஏற்றுக் கொள்வதற்கு நாம் தயாராக இருப்பதாகவும், திருப்பி

**திருப்பி அனுப்பப்படும் எவரும் துன்புறுத்தப்படவோ பயமுறுத்தப்படவோ இல்லை என்றும் அவ்வாறு நடப்பதாக புலம்பெயர் தமிழ் குழுக்களே பொய்ப் பிரசாரம் செய்து வருவதாகவும் பீரிஸ் தெரிவித்தார்.**

அனுப்பப் படும் எவரும் துன்புறுத்தப்படவோ பயமுறுத்தப்படவோ இல்லை என்றும் அவ்வாறு நடப்பதாக புலம்பெயர் தமிழ் குழுக்களே பொய்ப் பிரசாரம் செய்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர்களுடனான இந்த சந்திப்பில் இலங்கை அரசியலில் தற்போது ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்தும் அவர் விளக்கினார்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரையின் நடைமுறையாக்கம் என்பவற்றுடன் அந்த அறிக்கை தொடர்பான விரிவான விளக்கத்தையும் நாடாளுமன்ற குழுவினருக்கு பீரிஸ் விளக்கினார்.

30 வருடங்களின் பின்னர் நாடு பூராகவும் எடுக்கப்பட்ட சனத்தொகை கணக்கெடுப்பு, மும்மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்த ஆரம்பித்திருப்பது, ஐ.நா. மனித உரிமைகள் சபையால் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் போன்ற விடயங்கள் இதன் போது பேசப்பட்டது. அத்துடன் பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேரடியாக இலங்கைக்கு வந்து களநிலைமைகளை அவதானிப்பது குறித்து அவர்களுக்கு தான் பாராட்டுக்களைத் தெரிவிப்பதாகவும் பீரிஸ் கூறினார்.

# கிழக்கு மாகாணத் தேர்தல் தமிழருக்கான சந்தர்ப்பம்

அம்பாறை, ஓக. 2

கிழக்கு மாகாணத் தேர்தல் தமிழ் பேசும் மக்களுக்குக் கிடைத்த அரிய சந்தர்ப்பம். தமிழர் உரிமைப் போராட்டம் தொடர்பிலும், அரசின் அராஜக ஆட்சியில் தமிழ் மக்கள் அனுபவித்துவரும் துன்பங்களுக்கு விடிவை ஏற்படுத்தும் வகையிலும் சர்வதேசம் கவனம் கொண்டுள்ள காலகட்டமிது என்று காரைதீவு பிரதேச சபைத் தவிசாளரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட முக்கியஸ்தருமான செல்லையா இராசையா தெரிவித்தார்.

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் அம்பாறை மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர் ஆறுமுகம் பூபாலரெத்தினத்தை ஆதரித்து காரைதீவு மூன்றாம் பிரிவில் பிரச்சாரக் கருத்தரங்கு நடைபெற்றது.

இந்தப் பிரச்சாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அற்பசொற்ப சலுகைகளை வழங்கியும் அபிவிருத்தி எனும் மாயையைக் காட்டியும் தமிழ் மக்களைப் பேரினவாதத்தின் பின்னால் இழுத்துச் செல்லமுடியாது. கிழக்கு வாழ் தமிழ் மக்கள் தமிழ்த் தேசியத்துக்கு என்றும் உரமூட்டி வருபவர்கள்.

அரசு கபடநோக்குடன் உரிய காலம் முடிவடைவதற்கு முன்னரே கிழக்கு மாகாண சபைத் தேர்தலை நம்மீது திணித்துள்ளது.

எனினும் இந்தத் தேர்தலை கிழக்கில் வாழும் சிறுபான்மைச் சமூகங்கள் நம் எதிர்கால நலன்கருதி சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது.

இந்தநிலையில் பேரினவாதத்துக்கும் அரசுக்கும் துணைபோகும் அடிவருடிகளும் இந்தத் தேர்தலில் களமிறக்கப்பட்டுள்ளனர்.

இத்தகைய பேர் வழிகள் குறித்து சிறுபான்மைச் சமூகங்கள் மிகவிழிப்புடன் செயற்பட வேண்டியுள்ளதுடன் அவர்களுக்குத் தக்க பாடத்தையும்புகட்ட வேண்டும்.

இதுவரை நடைபெற்ற தேர்தல்களில் கிழக்கு வாழ் தமிழ் மக்கள் தமிழ்த் தேசியத்தின் மீது கொண்ட தமது மிகையான பற்றுறுதியைத் தமது வாக்குப்பலம் மூலம் நிரூபித்து வந்துள்ளனர்.

எனவே எம் உரிமைக்காக உழைத்து வரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு பெரும் பலமாக நம் மக்கள் சக்தியிருக்க வேண்டும்.

எதிர்காலத்தில் கிழக்கு மாகாண சபையில் தமிழர்களும்,முஸ்லிம்களும்இணைந்த ஆட்சி உருவாக் கப்படுவதன் மூலம் நம் அரசியல் பயணத்தில் பல விடிவுகளைக் காணலாம்- என்றார்.(ச-30)

# எச்சரிக்கை குறியீட்டை கடலில் நடவும்

திருகோணமலை, ஓக. 2

மூதூர், கொட்டியாரக் குடாமுனை கடல் பரப் பில் நீராடுவதற்கு தடை யாக 'நீராடுதல் அபாயம்' என்ற எச்சரிக்கை பலகை யொன்றை நடுமாறு மூதூர் திடீர் மரண விசா ரணை அதிகாரி முகம்மது யூசுப் லாபீர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் வேண்டு கோள் விடுத்துள்ளார்.

கடந்த 26 ஆம் திகதி மாலை இந்தக் கடல் பரப் பில் நீராடச் சென்ற என்.இர் பான், எல்.றிபான், ஜே.ஸஹீ ஆகிய மூவர் நீர்ச் சுழியில் சிக்குண்டு மூச்சுத் திணறி மரணமாகினர்.

இவ்வாறான உயிர் இழப்புக்கள் முன்பும் பல இடம்பெற்றுள்ளன. நீர்ச் சுழிகள் மற்றும் சேறு சகதிகள் கொண்ட இட மாக இந்தக் கடல் முனைப் பகுதி காணப்படுகின்றது என்று அவர் கூறினார்.

மக்கள் இந்தக் கடல் பரப்பில் நீராடுவது முற் றாக தடை செய்யப்பட வேண்டும். நீராடுதல் அபா யம் எனும் பெயர்ப் பலகை நடுவதன் மூலம் உயிர் இழப்புக்களை, கடல் விபத்துக்களை தவிர்க்க வழியேற்படும் என்று அவர் மேலும் தெரி வித்தார். (ச-40)

# பட்டதாரி பயிலுநர் ஒன்றியம் அங்குரார்ப்பணம்

### 137 பட்டதாரிகள் ஒன்றிணைந்து ஆரம்பித்தனர்

அட்டாளைச்சேனை,ஓக.2

அட்டாளைச்சேனைப் பிரதேச செயலக பட்டதாரிப் பயிலுநர்களால் பட்டதாரிப் பயிலுனர் ஒன்றியம் ஒன்று அட்டாளைச்சேனையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

அட்டாளைச்சேனைப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட அட்டாளைச்சேனை, பாலமுனை, ஒலுவில், தீகவாப்பிய ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த சுமார் 137 பட்டதாரிப் பயிலுநர்கள் ஒன்றிணைந்து குறித்த ஒன்றியத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்துள்ளனர்.



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், மு.கா. பிரதிச் செயலாளர் நிஸாம் காரியப்பர், மு.கா. சர்வதேச விவகாரப் பணிப்பாளர் ஏ.எம்.பாயிஸ் ஆகிய மூவரும் நேற்றுமுன்தினம் சட்டத்துறையில் சட்ட முதுமாணி பட்டத்தைப் பெற்றுள்ளனர்.

# ஆட்சி மாற்றங்களை ஏற்படுத்த ஊடகங்கள் பெரும் பங்காற்றும்

## மு.காவின் திருமலை மாவட்ட வேட்பாளர் கூறுகிறார்

திருகோணமலை,ஓக.2

ஊடகங்கள் நாட்டினுடைய ஆட்சியை ஏற்படுத்துவதற்கும், மாற்றுவதற்கும் சக்திவாய்ந்த அமைப்பாகும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் திருகோணமலை மாவட்ட வேட் பாளர் சட்டத்தரணி எம்.லாஹிர் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையைப் பொறுத்தவரை பல்வேறு காலங்களில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தியதை அவதானிக்க முடிகின்றது. ஊடகங்கள் தமது பொறுப்பை சரிவர நிலைநாட்டுகின்றபோது மக்கள் தமது உரிமைகள் பற்றிய சிந்தனைகளைப் பெறுகின்றனர்.

சுதந்திரமாக ஊடகங்க்ள் செயற்படுகின்றபோது நாட்டில் நல்லாட்சி ஏற்படுவதற்கான வழிகள் பிறக்கின்றன. மேலும் ஊடக சுதந்திரமானது அரசமைப்பின் உறுதி செய்யப்பட்ட விடயமாக உள்ளது. ஆட்சியாளர்கள் ஊடகங்களை சுதந்திரமாக செயற்படுவதற்கு வழி அமைத்துக்கொடுப்பதானது அரசின் கடமையாகும்.

எனவே, நாட்டில் நல்லாட்சி நிகழ்வதாக இருந்தால் ஊடக சுதந்திரம் நடைமுறையில் உறுதிசெய்யப்பட வேண்டும். ஊடகங்கள் நாட்டினுடைய ஆட்சி மாற்றத்திற்குப் பெரும் பங்களிப்பு செய்வதென்பது குறிப்பிடத்தக்கது - என்றார். (ச)

# கஞ்சா சந்தேக நபர்களுக்கு 10 நாள்கள் விளக்கமறியல்

அம்பாறை, ஓக.2

அம்பாறை, தமண பிரதேசத்தில் ஒன்றரைக் கிலோகிராம் நிறையுடைய கஞ்சா போதைபொருளுடன் கைது செய்யப்பட்ட நபரை 10 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு அம்பாறை நீதிவான் நீதிமன்ற நீதிபதி எம்.எஸ்.பிரிங்கி உத்தரவிட்டார்.

பொலிஸார் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது வீதியால் சென்று கொண்டிருந்த பொலிஸாரின் வாகனத்தை கண்டு குறித்த நபர் பதற்றமடைந்துள்ளார்.

இதனை அவதானித்த பொலிஸார் குறித்த நபரின் பையை சோதனையிட்ட போது ஒன்றரை கிலோகிராம் கஞ்சா மறைத்து வைக்கப்பட்டுள்ளதை கண்டறிந்துள்ளனர். இதனையடுத்து மேற்படி நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தநபரை அம்பாறை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியபோது இவரை 10 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார் என்று தமண பொலிஸார் தெரிவித்தனர்.(ச)

# அரசில் அதிகாரம் மிக்கவர்களாக தமிழர் மாறவேண்டும்

## இப்படிக் கூறுகிறார் கருணா

மட்டக்களப்பு,ஓக.2

தமிழ் மக்கள், அரசில் அதிகாரம் மிக்கவர்களாக இருப்பதன் மூலமே தமது உரிமையையும், அபிவிருத்தியையும் பெற்றுக் கொள்ளலாம் என்று மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் விநாயக மூர்த்தி முரளிதரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு, சீலாமுனையில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் தமிழர்களுக்கு வாக்களிக்கவேண்டும் என்பதே எனது அன்பான வேண்டுகோள். இந்த மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அரசியல் ஆதிக்கம் என்பது முஸ்லிம் தலைவர்களிடம் உள்ளது. அது தவறென்று நாங்கள் கூறவில்லை. அதே ஆதிக்கத்தை தமிழர்களும் கொண்டிருக்க வேண்டும். அதன் மூலமே எங்களது விகிதாசாரத்துக்கு சமனான அபிவிருத்தியைக் கொண்டுவர முடியும்.

மாகாணசபை மூலமே கூடுதலான அபிவிருத்தியும், வேலைவாய்ப்பும் தங்கியிருக்கின்றன. எனவே, கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் தகுதியான ஆற்றலுள்ள பிரதிநிதிகளை அரச கட்சியிலிருந்து தெரிவு செய்து அரசியல் ஆதிக்கத்தை தமிழ் மக்கள் பெற்றுக்கொள்ள முன்வரவேண்டும். இதன் மூலமே ஜனாதிபதியின் கவனம் எமது பிரதேசத்தின் பக்கம் திரும்புவதோடு அதிகளவு அபிவிருத்தி நிதிகளையும் பெற்றுக் கொள்ளமுடியும்.

'தேசத்திற்கு மகுடம்' கண்காட்சி அபிவிருத்தியில் இம்மாவட்டத்திற்கு 3 ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. தமிழ் அமைச்சராக அரசில் இருப்பதால் அதனை விகிதாசார அடிப்படையில் பிரிக்கவேண்டும் என்று கூறியதன் அடிப்படையில் 2 ஆயிரத்து 100 மில்லியன் ரூபா எமது தமிழ்ப் பிரதேச அபிவிருத்திக்குப் பெற்றுக்கொள்ள முடிந்தது- என்றார்.(ச)

# தீக்காயங்களுக்கு இலக்கான பெண் யாழ். ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், ஓக.2

தீக்காயங்களுக்கு இலக்கான பெண் ஒருவர் நேற்று யாழ். போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சாவகச்சேரியைச் சேர்ந்த எ.சுதர்சினி (வயது-20) என்ற குடும்பப் பெண்ணே தீக் காயங்களுக்கு இலக்கான நிலையில் நேற்றுப் பிற்பகல் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது-

குறித்த பெண் வீட்டில் தனித்திருந்தவேளை தீ விபத்து ஏற்பட்டுள்ளதாகவும், அவலக்குரல் கேட்டு ஓடி வந்த அயலவர்கள் இவரை வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர். சமையல் வேலையில் ஈடுபட்டிருந்த வேளையிலே இவரது ஆடையில் தீப்பிடித்து விபத்து இடம்பெற்றதாகவும் இவருக்கு திருமணமாகி இரண்டு வாரங்களேயாவதாகவும் இவரது உறவினர்கள் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பில் சாவகச்சேரிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (16)

## மணமகன் தேவை

1969இல் பிறந்த, கிரகபாவம் 44¼, 2இல் செவ்வாயுடைய அரச சுருக்கெழுத்தாளருக்கு அரச, தனியார், சுயதொழில் புரியும் மணமகன் உடனடியாகத் தேவை.

(21229)(5-6) தொடர்பு: 021 205 3065/ 077 901 3850

# இலங்கை வங்கி சேவை நேரம் நீடிப்பு

யாழ்ப்பாணம், ஓக.2

இலங்கை வங்கி வாடிக்கையாளர் நலன்கருத்தி இன்றிலிருந்து வார நாள்களில் மாலை 6 மணிவரை தனது சேவையை வழங்கவுள்ளதாக இலங்கைவங்கியின் ஸ்ரான்லி வீதி கிளை முகாமையாளர் இ.பிறேமராஜன் அறிவித்துள்ளார். இதுவரை காலமும் இலங்கை வங்கி தனது சேவையை பி.ப 3 மணி வரையே வழங்கிவந்தது. எனினும் வாடிக்கையாளர் நலன்கருதி இச் சேவை நீடிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (16)

# சொகுசு பஸ் சாரதி விளக்கமறியலில்

இயக்கச்சிப் பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்துடன் தொடர்புடைய சொகுசு பஸ் தலைமறைவாகி இருந்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ளார் என்று கிளிநொச்சி மாவட்டப்பொலிஸ் பொறுப்பதிகாரி எட்மன் மகேந்திரா தெரிவித்துள்ளார்.

கடந்த 21ஆம் திகதி கிளிநொச்சிப் பகுதியில் இரவு 10 மணியளவில் யாழ்ப்பாணம் -கொழும்பு சொகுசு பஸ்ஸொன்று சாரதியின் கட்டுப்பாட்டை மீறித் தடம் புரண்டதில் தம்பதியர் உயிரிழந்ததுடன் 12 பயணிகள் படுகாயமடைந்திருந்தனர்.

இந்த நிலையில் பஸ்ஸின் சாரதியும் நடத்துநரும் சம்பவம் இடம்பெற்ற கையோடு தலைமறைவாகியிருந்தனர்.

இந்த நிலையில் கடந்த 24 ஆம் திகதி பஸ் உரிமையாளர் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (க-6)

# ஈரானியர் இருவர் கொழும்பில் போதைப் பொருளுடன் கைது

250 மில்லியன் ரூபா பெறுமதியான மெதம்பெத்தேமைன் எனும் தடைசெய்யப்பட்ட போதைப் பொருள்களுடன் ஈரானியர்கள் இருவர் நேற்றுக் காலை கட்டுநாயக்காவில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

44 மற்றும் 28 வயதான இவ்விரு சந்தேக நபர்களும் கட்டாரிலிருந்து வந்ததாகவும் இதற்குமுன் இவர்கள் இருவரும் ஜூன் 20 இற்கும் 22 இற்கும் இடையில் இலங்கையில் இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.கண்டியில் நடைபெறவுள்ள எசல பெரஹரவில் கலந்துகொள்ளும் வெளிநாட்டவர்களுக்கு விநியோகிப்பதற்காக இந்தப் போதைப்பொருள்கள் கொண்டுவரப்பட்டிருக்கலாம் எனவும் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (16)

## Veta Spoken English பரீட்சைகள் veta

Experts in English Training

Veta கற்கை நெறிகளை பூர்த்தி செய்து பரீட்சைக்கு தேற்றாதவர்களுக்கான விசேட பரீட்சை நடைபெறவுள்ளது. Foundation, First step, Next step கற்கை நெறியை பூர்த்தி செய்தவர்கள் அல்லது ஏதேனும் ஒரு படி முறையை மட்டும் பூர்த்திசெய்தவர்கள் அதற்கான பரீட்சைக்கு தோற்றி அதற்கான சான்றிதழ்களை பெற்றுக்கொள்ளமுடியும். பரீட்சைக்கு தோற்றி சான்றிதழ்களுக்கு விண்ணப்பிக்காதவர் பதிவுகளை உங்கள் அருகில் உள்ள பயிற்சிமையத்தில் 10/8/2012ம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளவும். (சி/2056)

Hotline - 0777577333

Note. சான்றிதழ்கள் 26/8/2012ம் திகதி அன்று யாழ்ப்பாணத்தில் வழங்கப்படும்.

## DMI COMPUTER EDUCATION

| யாழ்ப்பாணம் | நெல்லியடி. | சாவகச்சேரி. |
|---|---|---|
| No.113, கன்னாதிட்டி வீதி, Tel.: 021-222 4403 | M.M.V. வீதி, (மத்திய மகாவித்தியாலயம் முன்பாக) Tel. : 021-226 2470 | No.174, கண்டி வீதி. (HNB அருகில்) Tel.:021-227 0243 |

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் வளர்ச்சியிலும், உயர்ச்சியிலும் அக்கறை கொண்ட ராஜராஜஸ்ரீ

கு. நகுலேஸ்வரக்குருக்கள்

அவர்களின் பாரியார்

**ஸ்ரீமதி வேதநாயகி அம்மா**

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அம்மாவின் ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச்சமூகம்,
கீரிமலை நகுலேஸ்வர மகா வித்தியாலயம்

(சி/2057)(8-14)

உதயன்
விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

## மரண அறிவித்தல்

### திருமதி நவமணி சிவகுமாரன்



சாவகச்சேரி, கச்சாய் வீதியைப் பிறப்பிடமாகவும் இந்தியா திருவான்மியூரை வசிப்பிடமாகவும் கொண்ட நவமணி சிவகுமாரன் 29.07.2012 ஞாயிற்றுக்கிழமை சென்னையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா - செல்லம்மா தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற அம்பலம் தம்பதியரின் அன்பு மருமகளும், சிவகுமாரனின் (சோமு -சுவிஸ்) அன்பு மனைவியும், நரேசன் (கனடா), லோஜினி (லண்டன்), சுரேஷ் (இந்தியா) ஆகியோரின் பாசமிகு தாயும், சுதாகரனின் (லண்டன்) பாசமிகு மாமியும், காலஞ்சென்ற செல்வ ராசா, துரைராஜா (கனடா), யோகராசா(ஓய்வு பெற்ற ஆசிரியர்), பாக்கியலீலா(ஓய்வு பெற்ற ஆசிரியை), காலஞ்சென்ற பரமேஸ்வரி, சித்திராதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ் சென்ற சந்திரமதி, காலஞ்சென்ற ராஜேஸ்வரி, அம்பிகாதேவி(ஓய்வுபெற்ற ஆசிரியை), சுகநவரட்ணம்(ஓய்வுபெற்ற ஆசிரியர்), சின்னத்துரை ஆகியோரின் அன்பு மைத்துனியும் மற்றும் ஓய்வு பெற்ற நிலஅளவையாளர் திரு.திருமதி சிவராசா தம்பதியரின் சம்பந்தி அம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று(02.08.2012) சென்னையில் நடைபெறும்.
இந்த அறிவித்தலை தொடர்புடையோர் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அக்கா
திருமதி ந. பாக்கியலீலா

'நவஜீவனம்'
கச்சாய் வடக்கு.

(18134)(5-6-7)

## நன்றி நவில்கின்றோம்



எமது தாய் திருமதி பேரம்பலம் மாணிக்கம் அவர்கள் திடீர் நோய் வாய்ப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்த நேரம் முதல் அவர் உயிர் நீத்து 29.07.2012 பொறளை கனத்தையில் தீயில் சங்கமமாகும் வரை எம்மோடு இணைந்து செயலாற்றிய அன்பு நெஞ்சங்களுக்கும் அனுதாபம் தெரிவித்து, எமது துக்கத்தில் பங்கெடுத்த அனைவருக்கும், பத்திரிகைகளில் கண்ணீர் அஞ்சலி பிரசுரித்தோர்கள், விநியோகம் செய்தோர், தொலைபேசி, தொலைநகல், தபால் அஞ்சல் மூலம் தொடர்புகொண்டு அனுதாபம் தெரிவித்தோர், மலர் அஞ்சலி செலுத்தியவர்கள் மற்றும் எமது இல்லத்திலிருந்து பொறளை மயானம் வரை அன்னையின் பூதவுடல் தாங்கிய பேளையை சுமந்துவந்த அனைவருக்கும், சகல வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும் எமது இதயம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.


இ.ச.பே. நாகரத்தினம் - குடும்பத்தவர்கள்,
இ.ச.பே. கணேசலிங்கம் - குடும்பத்தவர்கள்,
பராசக்தி - குடும்பத்தவர்கள்,
பரமேஸ்வரி - குடும்பத்தவர்கள்,
சவுந்தராம்பிகை - குடும்பத்தவர்கள்,
அன்னபாக்கியம் - குடும்பத்தவர்கள்.

(சி/2052) (45.6)

## மரண அறிவித்தல்

### செல்லப்பா தருமலிங்கம்

(ஓய்வு பெற்ற சீமெந்து கூட்டுத்தாபன ஊழியர்)



திசமளை சுழிபுரத்தை பிறப்பிடமாகவும், சில்லாலை தெற்கு பண்டத்தரிப்பை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா தருமலிங்கம் (29.07.2012) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், பராசக்தியின் அன்புக்கணவரும், காலஞ்சென்றவர்களான தம்பிஐயா - பொன்னம்மா தம்பதியரின் மருமகனும், லோகநாதன், நாகேந்திரம் காலஞ்சென்ற புஸ்பகுணம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், மதியழகன் (ஹொலண்ட்), விஜயகுமாரி, புஸ்பகுமாரி (கனடா), மகேந்திரன் (பிரான்ஸ்), அஜேந்திரன் (பிரான்ஸ்), சசிகலா (ஆசிரியை, காரை/ மெய்கண்டான் வித்தியாலயம்), தாசன் (ஆசிரியர்- இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பாலஸ்கந்தன் , அருந்ததி (ஹொலண்ட்), கனகலிங்கம் (கனடா), சதீஸ்வரி (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனும், அபினயா, சர்மிலன், டிலக்ஷன், தரண்ஜா, ஆரபி, கீர்த்தனா, கேசினி, கேசிகன், அபிரன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.08.2012) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

சில்லாலை தெற்கு,
பண்டத்தரிப்பு

(21230) (8.14)

தகவல்:
குடும்பத்தினர்

## மண்ணுக்கு விலை நிர்ணயம்

யாழ்ப்பாணம், ஓக. 2

வடமராட்சி கிழக்கு அம்பன் பகுதியில் இருந்து பிரதேச செயலகங்களுக்குக் கொண்டு செல்லப்படும் மணல் மண்ணுக்கு அரச அதிபர் சு. அருமைநாயகம் விலை நிர்ணயம் செய்துள்ளார்.

பருத்தித்துறை, கரவெட்டி பிரதேச செயலகங்களுக்கு மணல் கொண்டு செல்லும் போக்குவரத்துச் செலவாக ஒரு டிராக்டர் லோட்டுக்கு 2,250 ரூபாவும் 2 டிராக்டர் லோட்டுக்கு 4,000 ரூபாவும் 4 டிராக்டர் லோட்டுக்கு 7,500 ரூபாவும் விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

கோப்பாய் பிரதேச செயலகங்களுக்கு 4 டிராக்டர் லோட்டுக்கு 10 ஆயிரம் ரூபாவும் ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பிரிவுக்கு 4 டிராக்டர் லோட்டுக்கு 13 ஆயிரத்து 500 ரூபாவும் என மதிப்பிடப்பட்டுள்ளது. (ம-41)

## காவலரண் அகற்றல்

வடமராட்சி, ஓக. 02

நெல்லியடி நகர் மத்தியில் நாற்சந்தியின் கிழக்குப் பகுதியில் இருந்து வந்த இராணுவக் காவலரண் சில தினங்களுக்கு முன்னர் முற்றாக அகற்றப்பட்டது.

இதனால் நகரில் போக்குவரத்து சுலபமடைந்துள்ளதுடன் இந்தப் பகுதியில் வீதி அகலிப்பு மேற்கொள்ளவும் வசதி ஏற்பட்டுள்ளது.

இந்த நாற் சந்தியில் பல வருடங்களுக்கு மேலாக இந்தக் காவலரண் இருந்து வந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-8)

# இ.போ.சவில் சாரதி, காப்பாளர் வெற்றிடத்தால் பணி நெருக்கடி

### வடபிராந்திய பிரதம முகாமையாளர் எல்.அஷ்கர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 2

சாரதி, காப்பாளர் பதவிகளுக்கு வெற்றிடங்கள் நிலவுவதாலேயே தற்போதுள்ள சாரதிகள், காப்பாளர்களை முழு நேரமாக வேலையில் ஈடுபடுத்த வேண்டியுள்ளது. இந்த நிலையில் பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

இவ்வாறு இலங்கை போக்குவரத்துச் சபையின் வடபிராந்திய பிரதம முகாமையாளர் எல்.அஷ்கர் தெரிவித்தார்.

தேசிய சுதந்திர போக்குவரத்து ஊழியர் சங்கம், ஜனநாயக போக்குவரத்து ஊழியர் சங்கம் என்பவற்றை சந்தித்துக் கலந்துரையாடிய போதே முகாமையாளர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலின் போது, கோண்டாவில் சாலை ஊழியர்களுக்கு வழங்க வேண்டிய மார்ச் மாத சம்பளம் விரைவில் முற்று முழுதாக வழங்கி முடிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலுக்கு முன்பதாக கோண்டாவில் சாலை முகாமையாளர் குலபாதச் செல்வத்துடனான கலந்துரையாடலில், மார்ச் மாதத்திற்கு உரிய சம்பளம் எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன்பதாக வழங்கப்படும் என்று தெரிவித்திருந்தார்.

அவ்வாறு வழங்கப்படாவிட்டால் எதிர்வரும் 15 ஆம் திகதியிலிருந்து தொழில் சங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று டிப்போ ஊழியர்கள் தெரிவித்திருந்தனர்.

இந்தக் கலந்துரையாடலின் பின்பே வடபிராந்திய பிரதம முகாமையாளர் தொழிற்சங்கத்தினருடன் கலந்துரையாடினார்.

தொழிற் சங்கத்தினரால், முழு நேர வேலையை பகுதி நேர வேலையாக மாற்றியமைத்துத் தரும்படி கோரிக்கை விடுக்கப்பட்டது. ஏழரை மணி நேரமாகத் தமது வேலையை மாற்றியமைத்துத்தருமாறும் தொடர்ச்சியாக பணிபுரிவது கடினமாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதற்குப் பதிலளித்த பிரதம முகாமையாளர் சாரதி, காப்பாளருக்கு வெற்றிடம் நிலவுவதாலேயே முழு நேர கடமையில் ஈடுபடுத்த வேண்டியுள்ளது என்றும் விரைவில் பகுதி நேரமாக மாற்றியமைத்துத் தருவதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் மார்ச் மாத சம்பளத்தில் 40 லட்சம் ரூபாய் வரையில் வழங்கப்பட்டுள்ளது. எஞ்சிய 29 லட்சம் விரைவில் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-5)

## பாதசாரிக் கடவை இல்லை நோயாளர் பெரும் சிரமத்தில்

வடமராட்சி, ஓக. 2

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலைக்கு முன்பாக பாதுகாப்புக் கடமைக்கான மஞ்சள் கோடு இடப்படாமையால் வைத்தியசாலைக்குச் சென்று வரும் நோயாளர்கள் மற்றும் பார்வையாளர்கள் சிரமங்களை எதிர்கொண்டுள்ளார்கள்.

வைத்தியசாலைக்கு முன்பாக மஞ்சள் கோடு போட்டு பாதுகாப்புக் கடவை ஒன்றைச் செயற்படுத்துமாறு வைத்தியசாலை நிர்வாகம் பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் சில மாதங்களுக்கு முன்னர் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் வைத்து கோரிக்கை விடுத்திருந்தது.

இந்தக் கோரிக்கையை வீதி அபிவிருத்தித் திணைக்களம் ஏற்றுக் கொண்டிருந்த போதிலும் மஞ்சள் கோடுகள் இன்னமும் இடப்படவில்லை.

போக்குவரத்து நெருக்கடி மிகுந்த வீதியில், நோயாளர்கள், பார்வையாளர்கள் வீதியைக் கடந்து வைத்தியசாலைக்குள் சென்று வருவதில் சிரமங்களைச் சந்தித்து வருகின்றனர். (ம-8)

## சின்ன மடுமாதா ஆலயத் திருவிழா ஏற்பாடுகள் யாவும் பூர்த்தியாகின

ஊர்காவற்றுறை, புளியங்கூடல் சின்னமடுமாதா ஆலயத் திருவிழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகவுள்ள நிலையில் இதற்கான ஏற்பாடுகள் யாவும் செய்யப்பட்டு வருகின்றன.

ஆலயத்துக்கு வருகை தரும் யாத்திரிகர்களின் நலன் பற்றி ஆராய்வதற்கான ஆலோசனைக் கூட்டம் ஆலய மண்டபத்தில் ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் திருமதி அன்ரன் யோகநாயகம் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் போக்குவரத்து வசதி, குடிதண்ணீர், பாதுகாப்பு, மின்சாரம், வியாபார நிலையங்கள், வாகனத் தரிப்பிடம் சம்பந்தமாக விரிவாகக் கலந்துரையாடப்பட்டு மேற்கொள்ள வேண்டிய ஒழுங்குகள் பற்றியும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் ஊர்காவற்றுறை பிரதேச சபைத் தலைவர் ம.ஜெயகாந்தன், சபையின் செயலாளர் சுதர்ஜன், நாரந்தனை உப அலுவலக உத்தியோகத்தர், உதவி அரச அதிபர் பணிமனை உத்தியோகத்தர், இந்தப் பகுதியின் பங்குத் தந்தை மற்றும் திணைக்கள அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (ம-115)

## நகரில் பிரதான கால்வாயில் தேங்கும் கழிவு

கொழும்புத்துறை,ஓக. 2

யாழ். நகரில் பருத்தித்துறை வீதியில் தாதிகள் பயிற்சிப் பாடசாலையின் ஓரமாகச் செல்லும் பிரதான கழிவு நீர் கால்வாயில் இடையிடையே கழிவு நீர் தேங்கி நிற்பதால் சுகாதாரச் சீர்கேடுகள் நிலவுகின்றன என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

இந்தக் கால்வாயில் புற்கள் பெருமளவு வளர்ந்து மூடியுள்ளமையால் நீர் வடிந்தோடுவதிலும் தடைகள் ஏற்பட்டு நீண்டகாலமாக கழிவுகள் தேங்கிக் காணப்படுகின்றன.

டெங்கு நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் வேளையில் நகரின் மத்தியில் நுளம்புப் பெருக்கத்துக்கு ஏதுவாகக் கழிவு நீர் தேக்கங்கள் காணப்படுவது டெங்கு நோய்த் தாக்கத்துக்கு வழிவகுக்கும் என்று மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

போதனா வைத்திய சாலைக்கு அருகில் இவ்வாறான சுகாதார சீரற்ற தன்மை காணப்படுவது பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம-135)

## சங்கிலி அபகரிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 2

பாஷையூர் அந்தோனியார் ஆலயத்துக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த பெண் ஒருவரின் தங்கச் சங்கிலியை மோட்டார் சைக்கிளில் வந்த திருடர்கள் அபகரித்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இந்தத் தங்கச் சங்கிலி அபகரிப்புச் சம்பவம் ஈச்ச மோட்டை கடற்கரை வீதி சந்தியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை இடம்பெற்றது.

சனநடமாட்டம் அதிகமாகக் காணப்படும் இந்த வீதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-17)

## சாவற்கட்டில் திருட்டு

வலி வடக்கு, ஓக. 2

மானிப்பாய், சாவற்கட்டுப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்து சுமார் இரண்டு லட்சத்து எழுபத்தையாயிரம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் திருட்டுப் போயுள்ளன என்று மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த வாரம் இந்தத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. வீட்டில் இருந்தவர்கள் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த வேளை இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளது என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மானிப்பாய் பொலிஸார் குறிப்பிட்ட இடத்துக்கு சென்று விவரங்களைப் பதிவு செய்துள்ளனர்.

திருட்டுச் சந்தேக நபர்கள் குறித்து வீட்டுச் சொந்தக்காரரால் தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ள போதும் சந்தேக நபர்கள் தலைமறைவாகியுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-86)


## குடும்பஸ்தர் மீது மிளகாய்த்தூள் வீச்சு

வடமராட்சி, ஓக 02

குடத்தனை, வலிக்கண்டிப் பகுதியில் வைத்து இரவு வேளை குடும்பஸ்தர் ஒருவர் மீது, இனந்தெரியாத மூவர் மிளகாய்த் தூளைக் கொட்டிவிட்டு தலைமறைவாகினர். உடலும், இரண்டு கண்களும் எரிந்து பார்வை தெரியாத நிலையில் அவஸ்தைப்பட்ட அந்தக் குடும்பஸ்தர் நீண்ட நேரத்தின் பின்னர் வீதியால் வந்த ஓட்டோவில் ஏற்றிச் செல்லப்பட்டு பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

கடந்த திங்கள் இரவு 7 மணியளவில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் குடத்தனை தேவாலயப் பகுதியைச் சேர்ந்த எஸ். ஜேசுதாசன் (வயது-48) என்பவரே பாதிக்கப்பட்டவராவார்.

சம்பவ தினத்தன்று குறித்த நபர் மந்திகையில் உள்ள ஆலை ஒன்றில் அரைக்கப்பட்ட தூளை எடுத்துக் கொண்டு சைக்கிளில் வீடு நோக்கிச் சென்று கொண்டிருந்தார். அவ்வேளை வலிக்கண்டிப் பகுதியில் ஆள்கள் நடமாட்டம் குறைந்த இடத்தில் வைத்து வழிமறித்த மூன்று இளைஞர்கள் என்ன வைத்திருக்கிறாய் எனக் கேட்டுக்கொண்டே குறித்த பொதியை சோதனை செய்துள்ளனர். இந்த நிலையில் அதற்குள் மிளகாய்த் தூள் இருப்பதைக் கண்ட அவர்கள் அதனைக் குறித்த குடும்பஸ்தர் மீது கொட்டிவிட்டுச் சென்றுள்ளனர் என்று கூறப்பட்டது. (ம-8)



யாழ்.பொலிஸ் நிலையத்துக்கு நிரந்தர கட்டடம் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. யாழ். கோட்டைக்குப் பின்புறமாக கடற்கரை வீதியில் இந்தக் கட்டடத்துக்கான கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ம-17)

## திருத்தத்துக்கு வீதி மூடல்

யாழ்ப்பாணம், ஓக. 2

கே.கே.எஸ். வீதியில் முனீஸ்வரன் கோயிலுக்கு முன்பாகச் செல்லும் பிரதான வீதி கடந்த சில நாள்களாக மூடப்பட்ட நிலையில் உள்ளது.

வீதிப் புனரமைப்புக்காக வீதி மூடப்பட்டுள்ளதால் வீதியூடான போக்குவரத்துக்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இதேவேளை வீரசிங்கம் மண்டபத்துக்கு முன்பாகச் செல்லும் பிரதான வீதியின் ஒரு பகுதியும் புனரமைக்கப்பட்டு வருகின்றது. இந்த வீதிகளின் புனரமைப்புக்கள் ஆமை வேகத்தில் இடம்பெறுவதால் பிரதான வீதிகள் ஊடான போக்குவரத்துக்களும் பாதிக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றன. (ம-17)

## கால்நடை வளர்ப்பை ஊக்குவிக்க நல்லின ஆடுகள் வழங்கப்பட்டன

வடமராட்சி, ஓக. 2

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் கால்நடை வளர்ப்போரை ஊக்குவிக்கும் பொருட்டு அந்தப் பகுதியில் மீளக்குடியமர்ந்த 14 குடும்பங்களுக்கு தொழுவங்களுடன் கூடிய நல்லின ஆடுகள் வழங்கப்பட்டன.


பருத்தித்துறை அரசினர் கால்நடை உற்பத்தி அபிவிருத்தித் திணைக்களம் வடமாகாண உணவு விவசாய நிறுவனத்தின் அனுசரணையுடன் இவற்றை வழங்கியது.

தொழுவங்களுடன் கூடிய ஆடு வளர்ப்புத் திட்டத்துக்கு வடமராட்சி கிழக்கில் மீள்குடியமர்வு இடம்பெற்றுள்ள கிராமங்களான கேவில், போக்கறுப்பு, முள்ளியான், கட்டைக்காடு ஆகிய கிராமங்களில் இருந்து 25 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டன.

இந்தக் குடும்பங்களுக்கு ஆட்டுத் தொழுவங்கள் அமைப்பதற்காக உதவிகள் வழங்கப்பட்டிருந்தன. இவர்களில் 11 குடும்பங்கள் ஆட்டுத் தொழுவங்களை அமைக்கத் தவறிவிட்டன. தொழுவங்களை அமைத்த 14 குடும்பங்களுக்கு தலா 85 ஆயிரம் ரூபா பெறுமதியான யமுனாபாரி கலப்பின மறி ஆடுகள் வழங்கப்பட்டுள்ளன. ஆட்டுத் தொழுவங்களை குறிப்பிட்ட காலத்தில் அமைத்து முடிக்காத 11 குடும்பங்கள் ஆடுகள் பெறும் வாய்ப்பை இழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-8)

# இருளில் மூழ்கியது டில்லி

## மன்மோகன் வீட்டுக்கு பூட்டானில் இருந்து மின்சாரம்



டில்லிக்கு மின்சாரம் வழங்கும் மின்தொகுப்பு நேற்று முடங்கியது. இதனால் மொத்த நகரமுமே இருளில் மூழ்கியது. மெட்ரோ ரயில், மத்திய டில்லியில் உள்ள பிரதமர் அலுவலகம், ஜனாதிபதி மாளிகை மற்றும் முக்கியஸ்தர்களின் வீடுகளில் மின் தடை ஏற்பட்டது. இதைச் சமாளிக்க பூட்டானில் இருந்து நீர் மின்னுற்பத்தித் திட்டம் மூலம் கிடைக்கும் மின்சாரத்தை அவசரமாகப் பெற்றனர்.

இதனால் ஏறக்குறைய 2 மணி நேர மின்தடைக்குப் பின்னர் பிரதமர் இல்லத்தில் மீண்டும் மின்சாரம் வந்தது.

மின் உற்பத்தி நிலையங்களில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் மின் தொகுப்பு மண்டலங்கள் மூலம் விநியோகம் செய்யப்படுகிறது. இதை 'பவர் கிரிட்' கூட்டுறவு நிறுவனம் நிர் வகிக்கின்றது. மாநில மின் வாரியங்கள் இதில் இருந்து தங்களுக்குத் தேவையான மின்சாரத்தைப் பெற்றுக் கொள்ளும்.


மின் தொகுப்பில் மாநிலங்கள் இவ்வளவு மின்சாரம்தான் எடுக்க வேண் டும் என்று முன்கூட்டியே திட்டமிடப்பட்டு விடும். அதை அந்தந்த மாநிலங்கள் பின்பற்ற வேண்டும். அப் படி இல்லாமல் அதிகமாக மின்சாரத்தை உறிஞ்ச முற் படும் போதுதான் மின் தொகுப்பு முடங்கிபோய் விடுகிறது. அதன் பின்னர் யாருக்குமே மின்சாரம் கிடைக்காது.

இந்தியாவில் இதற்கு முன் 2001ஆம் ஆண்டில்தான் இதுபோன்று மின் தொகுப்புகள் முடங்கி பெரியளவில் மின் தடை ஏற்பட்டது. அப்போது உத்தரப் பிரதேசத்தில் உள்ள மின் நிலையம் பழுதானதால் வடக்கு மண்டல மின் தொகுப்பு முடங்கியது. இதனால் ஏற்பட்ட மின் தடை நீங்க 24 மணி நேரம் ஆனது. ஆனால் கடந்த திங்கட்கிழமை ஏற்பட்ட மின் தடை 6 மணி நேரத்தில் சரியானது.

இந்தியா முழுவதும் மின் தடை ஏற்பட்டாலும் மும்பையில் பாதிப்பு இருக்காது. குறிப்பாக தெற்கு மும்பையில். அங்குதான் பங்குச் சந்தை, சர்வதேச விமான நிலையம், உயர் நீதிமன்றம், ஆளுநர், அமைச்சர்கள் என முக்கியஸ்தர்களின் வீடுகள் இருக்கின்றன. (வ)

## 60 கோடி மக்களை இருளில் தள்ளிவிட்டுள்ளது இந்திய அரசு

### மோடி பாய்ச்சல்



ஆமதாபாத், ஓக2

கடந்த இரு தினங்களாக 19 மாநிலங்களில் வசிக்கும் 60 கோடி மக்களை இருளில் தள்ளிவிட்டுள்ளது மத்திய அரசு என்று மோடி குற்றம் சாட்டியுள்ளார்.

நாட்டின் வடக்கு, கிழக்கு மற்றும் வட கிழக்குப் பகுதிகளில் உள்ள மாநிலங்களுக்கு மின்சாரம் வழங்கும், மின் தொகுப்புகளில், ஒரே நேரத்தில் கோளாறு ஏற்பட்டதால் கடந்த இரு தினங்களாக டில்லி, மேற்கு வங்கம் உட்பட, 19 மாநிலங்கள் இருளில் மூழ்கின. இதனால் மெட்ரோ உள்ளிட்ட ரயில்களின் சேவை, அலுவலகங்கள் உட்பட பல முடங்கின. டில்லியில் கடும் போக்குவரத்து நெரிசலும் ஏற்பட்டது. மின்வெட்டால் இந்த மாநிலங்களில் வசிக்கும் சுமார் 60 கோடி மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப் பட்டது.

இந்நிலையில் வடக்கு மற்றும் வடகிழக்கு மாநிலங்கள் இருளில் மூழ்கியதற்கு மத்திய அரசின் தவறான பொருளாதார கொள்கைதான் காரணம் என்று குஜராத் முதல்வர் நரேந்திர மோடி குற்றம் சாட்டியுள்ளார். இதுகுறித்து மோடி தனது டுவிட்டர் வலைத்தளத்தில் தெரிவித்துள்ளதாவது:-

மத்திய அரசின் தவறான பொருளாதாரக் கொள்கையால் ஏற்கனவே சாமான்ய மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். விலைவாசி உயர்வு, பணவீக்கம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் தலைவிரித்து ஆடுகின்றன. விலைவாசி உயர்வு என்ற பெயரில் சாமான்ய மக்களின் பணத்தைப் பிடுங்கி ஏழைகளின் வயிற்றில் அடித்து வருகிறது மத்திய அரசு. இதுபோதாதென்று, தற்போது மின்வெட்டும் ஏற்படுத்தி மக்களை இருளில் தள்ளிவிட்டுள்ளது காங்கிரஸ் அரசு. கடந்த இரு தினங்களாக 19 மாநிலங்களில் வசிக்கும் சுமார் 60 கோடி மக்களை, மத்திய அரசு இருளில் தள்ளியுள்ளது. இதற்கெல்லாம் பிரதமர் என்ன சொல்லப் போகிறார் என்று மத்திய அரசை கடுமையாகத் தாக்கிப் எழுதியுள்ளார். (வ)

## மீண்டும் நிதியமைச்சரானார் சிதம்பரம்



டில்லி, ஓக 2

மத்திய அமைச்சர்களின் பதவிகள் நேற்றுமுன்தினம் மாற்றம் செய்யப்பட்டன. உள்துறை அமைச்சராக இருந்த சிதம்பரம் மீண்டும் நிதி அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். மத்திய மின் துறை அமைச்சராக இருந்த சுஷில் குமார் ஷிண்டே, உள் துறை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். நிறுவனங்கள் விவகாரத்துறை அமைச்சர் வீரப்ப மொய்லிக்கு, மின் துறை அமைச்சகப் பொறுப்பு கூடுதலாக வழங்கப்பட்டுள்ளது.

மத்திய நிதி அமைச்சராக இருந்த பிரணாப் முகர்ஜி, அந்தப் பதவியை விட்டு விலகி, ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்று, நாட்டின் 13ஆவது ஜனாதிபதியாகவும் பதவி யேற்றார். இதையடுத்து, பிரதமர் மன்மோகன் சிங், நிதி அமைச்சக் பொறுப்புகளை தற்காலிகமாக கவனித்து வந்தார். இந்த நிலையில், மத்திய அமைச்சரவையில் நேற்று முன்தினம் சிறியளவிலான மாற்றம செய்யப்பட்டது.



ஒரு காஷ்மீர் வியாபாரி ஒருவர் ஏரியில் தனது படகில் மரக்கறிகளுடன் இளைப்பாறுகிறார்.

## 2-ஜி கொள்கை விவகாரத்தில் இறுதி முடிவெடுத்தவர் ராசாவே

### தொலைத் தொடர்பு முன்னாள் அதிகாரி சாட்சியம்

டில்லி, ஓக 2

2ஜி தொடர்பான கொள்கை விவகாரங்களில், இறுதி முடிவு எடுத்தவர் அப்போதைய தொலை தொடர்புத்துறை அமைச்சர் ராஜா தான் என்று தொலைத்தொடர்புத் துறை முன்னாள் அதிகாரி ஏ.கே.ஸ்ரீவஸ்தவா எதிராகச் சாட்சியம் அளித்துள்ளார்.

2ஜி ஊழல் வழக்கு டில்லியில் உள்ள சிறப்பு நீதி மன்றத்தில் நடைபெற்று வருகிறது. இந்த வழக்கு விசாரணை நேற்றுமுன்தினம் நடைபெற்றபோது ஓய்வு பெற்ற தொலைத்தொடர்புத் துறைத் துணைத் தயாரிப்பாளர் ஜெனரல் ஸ்ரீவஸ்தவா நீதி மன்றத்தில் முன்னிலையாகி சாட்சியம் அளித்தார். அப்போது அவரிடம் சட்டத்தரணி காட்டிய சில ஆவணங்களில் முன்னாள் தொலைத்தொடர்புத்துறை அமைச்சர் ஆ.ராசாவின் எழுத்தையும், கையெழுத்தையும் அடையாளம் காட்டினார்.

அவர் தனது சாட்சியத்தில் தெரிவித்ததாவது:-

நான் சில காலம் வேறு துறையில் பணியாற்றி விட்டு 2007 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் திகதி மீண்டும் தொலைத்தொடர்புத் துறைக்கு வந்தேன். அப்போது சாதாரண மற்றும் செல்போன் சேவை நிறு வனங்கள் 'யுனிபைட் ஒக்சஸ் சர்வீஸ்' முறைக்கு மாறியுள்ளதைக் கண்டேன். அந்தச் சேவையைக் கேட்டுத் தான் நிறைய விண்ணப்பங்கள் வந்திருந்தன. 13-4-2007 அன்று அவற்றுக்கு தொலைத் தொடர்பு ஒழுங்குமுறை ஆணையத்தின் (டிராய்) பரிந்துரையைக் கேட்டு அது நிலுவையில் இருந்தது.

இதற்கிடையே இந்த விவகாரம் குறித்து தொலைத் தொடர்பு ஆணை யம் தனது முடிவைத் தெரிவிக்கும். அது சம்பந்தப்பட்ட அமைச்சரின் ஒப்புதல் பெற அனுப்பி வைக்கப் படும். அமைச்சரின் ஒப்புதல் கிடைத்த உடன் அது அரசு கொள்கையாக ஏற்றுக்கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும். அந்த வகையில் கொள்கை மாற்றம் குறித்த அனைத்து இறுதி முடிவுகள் எடுக்கும் அதிகாரம் ஆ.ராசாவுக்கு தான் இருந்தது - என்றார்.

## மனைவிக்காகத் தாயை மயானத்தில் விட்ட மகன்



மனைவியின் பேச்சை கேட்டு தனது தாயை மயானத்தில் விட்டுச் சென்ற மகனை ஆந்திர மாநிலப் பொலிஸார் தேடி வருகின்றனர்.

ஆந்திர மாநிலம் விஜய நகரத்தைச் சேர்ந்த பைடி தல்லி (வயது 70) என்பவருக்கு சீனு என்ற மகன் உள்ளார். சீனு வீட்டில் அவரது மனைவிக்கும் தாய்க்கும் மத்தியில் அடிக்கடி சண்டை இடம்பெறுவது வழக்கம். இதன் காரணத்தினால் தாயை வேறெங்காவது விட்டு வரச் சொல்லி மனைவி சீனுவை நச்சரித்துள்ளார்.

இந்த நிலையில் சம்பவதினத்தன்று, தாய் பைடி தல்லியை அழைத்துக்கொண்டு சீனு விசாகப்பட்டினம் சென்றார். அங்கிருந்து ஓட்டோவில் ஸ்ரீராம் நகர் என்ற ஊருக்குச் சென்றனர்.

அங்குள்ள மயானத்தில் தாய் பைடி தல்லியை கீழே இறக்கி விட்டு சாப்பாடு வாங்கி வருவதாகச் சொல்லி விட்டு திரும்பி வந்து விட்டார். இதையடுத்து மகன் சாப்பாடுடன் வருவான் என்று நம்பியே பைடி தல்லி கடந்த 10 நாள்களாகக் காத்திருந்துள்ளார்.

பின்னர் மெதுவாக நடந்து அருகிலுள்ள ஊருக்குச் சென்றுள்ளார் பைடி தல்லி. அங்கு நடந்த விடயங்களைக் கூறினார். இதையடுத்து அந்த ஊர் மக்கள் பொலிஸாரிடம் முறைப்பாடு தெரிவித்தனர். இதனையடுத்து சீனுவை பொலிஸார் கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

## மோகன்லாலை கைது செய்க கேரள காங்கிரஸ் கோரிக்கை

வனப் பாதுகாப்புச் சட்டத்துக்கு எதிராக யானைத் தந்தங்களை முறை கேடாகப் பதுக்கி வைத்திருந்த முறைப் பாட்டின் அடிப்படையில் நடிகர் மோகன் லாலை விரைவில் கைது செய்ய வேண்டும் என்று கேரள காங்கிரஸ் கோரிக்கை விடுத்துள்ளது.

கடந்த ஆண்டு இறுதியில் நடிகர் மம்முட்டி, மோகன் லால் வீடுகளில் வருமான வரிச்சோதனை நடைபெற்றது. அப்போது கேரளாவில் உள்ள மோகன்லால் வீட்டில் யானைத் தந்தங்கள் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது.

இந்த நிலையில் இவரின் மீதான கைது நடவடிக்கையைத் தீவிரமாக செயற்படுத்த வேண்டுமென கேரள சட்ட மன்றத்தில் ஆளும் காங்கிரஸ் தலைமை கொறடா பி.சி.ஜார்ஜ் வலியுறுத்தியுள்ளார்.

## லோக்பால் சட்டம் நிறைவேறினால் அரசுடன் பேச்சு



டில்லி, ஓக 2

ஊழலுக்கு எதிரான வலுவான லோக்பால் சட்டம் கொண்டு வரப்படும் வரை எனது போராட்டம் தொடரும். அதுவரை பிரதமருடனோ மத்திய அமைச்சர்களுடனோ எவ்வித பேச்சுக்கும் தயாரில்லை என்று அன்னா ஹஸாரே தெரிவித்தார்.

டில்லி ஜந்தர் மந்தரில் மூன்றாவது நாளாக உண்ணாவிரதம் இருந்த அவர் ஆதரவாளர்களிடையே இதுகுறித்து தெரிவித்ததாவது:-

அன்னா ஹசாரேவுடனோ அவரது குழுவுடனோ பேச்சு நடத்தப் போவதில்லை என்று மத்திய அமைச்சர்கள் கூறுகின்றனர். எங்களுக்கும் எவருடனும் பேச்சு நடத்த வேண்டிய அவசியம் கிடையாது. எங்களுக்கு கோரிக்கைதான் முக்கியம். அது நிறைவேறும் வரை பிரதமருடனோ, மத்திய அமைச்சர்களுடனோ பேச்சு நடத்தமாட்டோம்.

ஊழலுக்கு எதிராகக் குரல் கொடுத்து வரும் என்னையும் சமூக ஆர்வலர்களையும் இழிவுபடுத்தும் வகையில் இந்த அரசு அவதூறுகளைப் பரப்புகிறது. என்னைக் கௌரவித்து மத்திய அரசு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அளித்த 'பத்ம பூஷண்' விருதைத் திருப்பிக் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். என்றார்.

# தலைநகரில் தாக்குதல்

## பாக்தாத்தில் இருவேறு குண்டுவெடிப்புக்களில் 19 பேர் சாவு



பயங்கர சத்தத்துடன் கார் வெடித்து அந்தப் பகுதி முழுவதும் தீப்பற்றியது. அதில் 17 பேர் உயிரிழந்தனர். 40 பேர் காயமடைந்தனர்.

பாக்தாத், ஓக. 2


ஈராக் தலைநகர் பாக்தாத்தின் இரண்டு இடங்களில் நேற்றுமுன்தினம் கார்க் குண்டுவெடிப்புகள் நிகழ்த்தப்பட்டன. இதில் 19 பேர் உடல் சிதறி உயிரிழந்தனர்.

50 பேர் காயமடைந்தனர். குற்றப்பிரிவு பொலிஸ் தலைமையகம் அமைந்துள்ள பகுதிக்குக் காரில் வந்த தற்கொலைப்படையாளி வெடிகுண்டை வெடிக்கச் செய்தார்.

பயங்கரச் சத்தத்துடன் கார் வெடித்து அந்தப் பகுதி முழுவதும் தீப்பற்றியது. அதில் 17 பேர் உயிரிழந்தனர். 40 பேர் காயமடைந்தனர்.

இறந்தவர்களில் 10 பேர் பொலிஸார் என தெரிய வந்தது. பலூஜா என்ற இடத்தில் நடந்த 2ஆவது கார் குண்டு வெடிப்பில் 2 பேர் உயிரிழந்தனர். 10 பேர் காயமடைந்தனர்.

## மனிதனைவிட வேகமாக நீந்தும் ரோபோ



மனிதனைவிட 3 மடங்கு வேகமாக நீந்தும் ரோபோவை ஜப்பான் விஞ்ஞானிகள் கண்டுபிடித்து சாதனை படைத்துள்ளனர். ஒருவேளை அடுத்த ஒலிம்பிக் போட்டியின் நீச்சல் பிரிவில் இந்த ரோபோவை அனுமதித்தால் நிச்சயம் தங்கப்பதக்கத்தை வெல்லும் எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

டோக்கியோ தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் மொடோமு நகஷிமா தலைமையிலான குழுவினரின் ஆராய்ச்சியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள இந்த ரோபோவின் பெயர் 'ஸ்வுமனாய்ட்' ஆகும்.

நீச்சல் வீரரின் உடலமைப்புடன் ஒத்துப் போகும் வகையில் இந்த ரோபோ 3டி ஸ்கேனர் உடன் தயாரிக்கப்பட்டுள்ளது. மனிதர்கள் நீந்துவது போலவே இது நீந்தும் திறன் கொண்டதாக உள்ளது.

நீச்சல் தெரியாமல் தண்ணீரில் தத்தளிப்பவர்களைக் காப்பாற்றுவதற்கு மட்டுமல்லாமல், நீச்சல் தொடர்பான ஆராய்ச்சிக்கும் ஸ்வுமனாய்ட் உதவும் என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். நீர்நிலைகளில், பாதுகாப்புப் பணி மற்றும் ரோந்து பணிகளிலும் இந்த ரோபோவை ஈடுபடுத்தலாம் என்பது அவர்களின் நம்பிக்கை.

நீர்நிலைகளில் இருக்கும் நீச்சல் வீரர்களின் இருப்பிடத்தைக் கண்டறியும் கருவிகளைப் பொருத்துவதும், செயற்பாடுகளை துல்லியமாகக் கணிப்பதும் சிரமம். ஆனால், இந்த ரோபோவில் இது சாத்தியமாகும். நீச்சல் வேகம் உள்பட பல்வேறு இயக்கங்களைத் துல்லியமாகக் கணிக்கவும் உதவியாக அமையும்.

முன்னோக்கியும், பின்னோக்கியும் நீந்திச் செல்லும் வகையில் இந்த ரோபோ வடிவமைக்கப்பட்டுள்ளது.

உலகின் அதிவேக நீச்சல் வீரர் என்ற சாதனை படைத்தவரைப் போல மூன்று மடங்கு வேகத்தில் நீந்தும் திறன் படைத்தது 'ஸ்வுமனாய்ட்' எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

## 224 ஆண்டுகள் பழமையான வாணிபத்துக்கு மூடுவிழா

அமெரிக்காவில், 224 ஆண்டுகளாக செயல்பட்டு வந்த பல்பொருள் வாணிபம் மூடப்பட்டுள்ளது. அமெரிக்காவின் ரூடி தீவில், ஆடம்ஸ் வில்லி கிராமத்தில் கிரேஸ் ஸ்டோர் என்ற பல்பொருள் வாணிபம், 1788ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. சொக்லேட், சிகரெட் மற்றும் சிற்றுண்டிகள் விற்கப்பட்ட இந்த வாணிபம், அமெரிக்காவின் முதல் ஜனாதிபதி ஜோர்ஜ் வொஷிங்டன்பதவியேற்பதற்கு ஓராண்டு முன்னதாகத் திறக்கப்பட்டது.

1879ஆம் ஆண்டுக்குப் பின், வைட் குடும்பத்தார், இந்தவாணிபத்தை நிர்வகித்து வந்தனர். கடைசியாக, வைட் குடும்பத்தைச் சேர்ந்த, கிரேடன் வைட் இதனை நடத்தினார். புற்றுநோயால் பாதிக்கப்பட்ட கிரேடன்வைட் கடந்த மாதம் தனது, 59ஆவது வயதில் இறந்தார். கிரேடனுக்குப் பின் அவரின் மகன் ஜோனா வைட், இந்தக் கடையைத் தொடர்ந்து நடத்த விரும்பவில்லை. 224 ஆண்டுகள் இயங்கி வந்த பழமையான வாணிபத்தை மூடிவிட ஜோனா முடிவெடுத்தார்.

இரண்டு நாள்களுக்கு முன் ஜோனா தலைமையில் ஏராளமான மக்கள் ஒன்று கூடி, வாணிபத்துக்கு மூடுவிழா நடத்தினர்.

## திருமணமின்றி குழந்தை பெற்றோர் அடித்துக் கொலை

ஆபிரிக்க நாடான மாலியில், திருமணம் செய்யாமல் குழந்தை பெற்ற ஜோடி, கல்லால் அடித்துக் கொல்லப்பட்டனர். மாலியின் வடக்குப் பகுதி, இஸ்லாமியக் கிளர்ச்சியாளர்கள் கட்டுப்பாட்டில் உள்ளது. இங்குள்ள மக்கள் மத விதிமுறைகளை மீறினால் கடும் தண்டனைக்கு உள்ளாக்கப்படுவர். அகூயல்ஹோக் என்ற நகரில், இளம் ஜோடி ஒன்று திருமணம் செய்து கொள்ளாமல் குழந்தையைப் பெற்று விட்டனர். இதை அறிந்து கொண்ட கிளர்ச்சிப் பிரிவுத் தலைவர்கள், காதல் ஜோடியைத் துப்பாக்கி முனையில் மிரட்டி, ஊரின் மத்திய பகுதிக்கு அழைத்து வந்தனர். நான்கு அடி ஆழத்துக்கு இரண்டு பள்ளங்களைத் தோண்டி இருவரையும் கழுத்து புதையும் அளவுக்கு மண்ணைப் போட்டு மூடினர். தலை மட்டும் வெளியே தெரியும்படி இருக்குமாறு, அந்தப் பகுதியைச் சேர்ந்த 200இற்கும் அதிகமான மக்கள் கோஷம் இட்டபடி இந்த ஜோடியைக் கல்லால் அடித்தனர். இருவரும் துடிதுடித்து இறந்த பின்னர் சூழ்ந்திருந்த மக்கள் அமைதியாயினர். இந்தப் பகுதியில் மேற்கொள்ளப்படும் கடும் தண்டனைக்குப் பயந்து 2 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் அண்டை நாடான அல்ஜீரியாவுக்கு குடிபெயர்ந் துள்ளமை குறிப்பிடத்தக்கது.




ஸ்பெயினின் தலைநகர் மட்ரீட்டில் உயர் கல்வி கற்கும் மாணவர்கள் அரசிடம் இலவச சலுகை கேட்டு போராட்டம் நடத்துகின்றனர்.

## 140 குற்றச்சாட்டுகள்

அமெரிக்காவின் கொலாரோடோ மாநிலத் துப்பாக்கிச் சூட்டுப் படுகொலைச் சந்தேகநபருக்கு எதிராக 140 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது. 12 பேரைக் கொலை செய்தமை தொடர்பாக 24 குற்றச்சாட்டுக்களும், 58 பேரைக் காயங்களுக்கு உள்ளாக்கியமை குறித்து 116 குற்றச்சாட்டுக்களும் அவர் மீது சுமத்தப்பட்டுள்ளன.

இந்த வழக்கில் அவர் குற்றவாளியாகக் காணப்படும் பட்சத்தில் அவருக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்படலாம் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த 20 ஆம் திகதி அரோரா என்ற பகுதியிலுள்ள திரையரங்கில் குறித்த நபர் மேற்கொண்ட துப்பாக்கிப் சூட்டில் 12 பேர் கொல்லப்பட்டதுடன், 58 பேர் காயமடைந்திருந்தனர். நீதிமன்ற வழக்கு விசாரணைகளைப் புகைப்படம் பிடிப்பதற்கு நீதிபதி அனுமதி மறுத்ததாக அமெரிக்கத் தகவல்கள் குறிப்பிடுகின்றன. இந்த வழக்கு விசாரணைகளை ஊடகங்கள் பதிவு செய்வதற்கு பிரதிவாதித் தரப்பு சட்டத்தரணிகள் எதிர்ப்பு வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அரபாத்தின் இறப்பு குறித்த விசாரணை வேண்டும்: மனைவி

பாலஸ்தீன முன்னாள் ஜனாதிபதி யசீர் அரபாத்தின் இறப்பு குறித்து விசாரணை நடத்துமாறு பிரான்ஸ் அதிகாரிகளிடம் அரபாத்தின் மனைவி சுஹா அரபாத் முறைப்படி கோரிக்கை விடுத்துள்ளார்.

2004 ஆம் ஆண்டு பிரான்ஸ் இராணுவ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் யஸீர் அரபாத் காலமானார். அவர் நஞ்சு கொடுத்துக் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என மீண்டும் சந்தேகம் தெரிவிக்கப்பட்ட நிலையில் சுஹா அரபாத் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

சுஹா அரபாத்தினது, அல் ஜஸீரா தொலைக்காட்சியினதும் கோரிக்கைகளுக்கு இணங்க, சுவிஸர்லாந்திலுள்ள ஆய்வுகூடமொன்று நடத்திய சோதனையின் மூலம் அரபாத்தின் மாதிரிகளில் பொலோனியம் -210 எனும் அரிய உயர் நச்சுப்பொருள் கலந்திருப்பதற்கானத் தடயங்கள் இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது. எனினும் இறுதித் தீர்மானமெதனையும் மேற்கொள்ள முடியாதெனவும் அரபாத்தின் எலும்புகளை ஆய்வுக்குட்படுத்த வேண்டியிருக்கும் எனவும் அந்த ஆய்வுகூடம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், அரபாத்தின் உடலைத் தோண்டியெடுப்பதற்குப் பாலஸ்தீன அதிகாரிகள் இந்த மாத முற்பகுதியில் அனுமதியளித்தமை குறிப்பிடத்தக்கது.

சுஹா அரபாத்தின் கோரிக்கையை ஏற்றுக்கொள்வதா என்பதை பிரான்ஸ் நீதிபதியொருவர் தீர்மானிக்கவுள்ளார்.

## குப்பைத் தொட்டிக் குழந்தைகளை வளர்த்த மூதாட்டி

சீனாவைச் சேர்ந்த, குப்பைகளைச் சேகரிக்கும் மூதாட்டியொருவர்; இதுவரை குப்பைத் தொட்டிக்குள் தூக்கியெறியப்பட்டு அநாதரவாக்கப்பட்ட 30 குழந்தைகளை எடுத்துப் பராமரித்து வரும் செயற்பாட்டில் தொடர்ந்து ஈடுபட்டு வருவது பலரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.

சீனாவில் கிழக்குப் பிராந்தியமான செய்ஜிங் மாகாணத்தைச் சேர்ந்த லூக்யோங் என்ற 88 வயது மூதாட்டியே இந்தச் செயற்பாட்டைத் தொடர்ந்து செய்து வருகிறார்.

தற்போது சிறுநீரகக் கோளாறினால் பாதிக்கப்பட்டுள்ள இந்தப் பெண், குப்பைகளை மறுசுழற்சிக்கு உட்படுத்தி பெறும் வருமானத்தின் மூலம் இந்தக் குழந்தைகளைப் பராமரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



இவரது கணவர் லீசின், 17 வருடங்களுக்கு முன்பு இறந்துள்ளார்.

தனக்கு 82 வயதாக இருக்கும்போது இளைய குழந்தையான சாங்கிலினை தொட்டியொன்றினுள்ளிருந்து எடுத்து வளர்க்கத் தொடங்கினார். அந்தக் குழந்தைக்குத் தற்போது 7 வயதாகிறது.

தற்போது, தனது பராமரிப்பில் இருந்த குழந்தைகளில் நான்கை மட்டும் வைத்துக்கொண்டு ஏனையவற்றைத் தனது நண்பர்கள் மற்றும் உறவினர்களிடம் ஒப்படைத்துள்ளார்.

எப்போதோ நான் முதுமை நிலையை அடைந்துவிட்டேன். "எப்போதும் என்னால் அந்தக் குழந்தைகளை அலட்சியப்படுத்தவோ அல்லது குப்பைத் தொட்டிக்குள் கிடந்த நிலையில் அவை இறந்து போவதைப் பார்த்துக்கொண்டிருக்கவோ முடியவில்லை.

குழந்தைகள் பார்ப்பதற்கு மிகவும் அழகாகவும், எதையோ எதிர்பார்த்த நிலையிலும் இருந்தன. நான் அவற்றை என்னுடன் வீட்டுக்கு அழைத்துச் சென்றேன்'' என அந்தப் பெண் தெரிவித்துள்ளார்.

''எனது வீடு கிராமப் புறங்களில் உள்ள சிறியளவிலான வீடு. நான் அந்தக் குழந்தையை எடுத்து வந்து பராமரித்ததுடன் தேவைக்கேற்ப மருத்துவத் தாதியாகவும் செயற்பட்டேன். தற்போது அந்தச் சிறுவன் ஆரோக்கியமாகவும் மகிழ்ச்சியுடனும் காணப்படுகிறான்'' என்று தனது கடைசிக் குழந்தை பற்றிக் கூறுகிறார்.

# மீண்டும் பொருளாதாரத் தடை

## ஈரான் மீது அமெரிக்கா தொடர்ந்தும் கடும் போக்கு

வொஷிங்டன்,ஓக.2

ஈரான் மீது அமெரிக்கா மேலும் ஒரு புதிய பொருளாதாரத்தடையை விதித்துள்ளது. இதனால் அந்த நாட்டு எண்ணெய் ஏற்றுமதி மற்றும் எரிசக்தித்துறை பெரும் இழப்பீட்டைச் சந்திக்க உள்ளது.

அணு ஆயுதங்கள் தயாரிக்கின்றது எனவும், அணு சோதனை நடத்துகின்றது எனவும் ஈரான் மீது அமெரிக்கா முதல் ஒரு தடவையும் பொருளாதாரத்தடையை விதித்தது.

இதற்கு ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும் ஆதரவளித்துள்ளன. ஈரான் இதனை மறுத்து வருகிறது. ஈரான் தனது நாட்டிலிருந்து கச்சா எண்ணெயினை பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து தனது பொருளாதாரத்தினை வளமாக்கி வருகிறது. இந்த நிலையில், அமெரிக்கா, ஈரானின் எண்ணெய் வர்த்தகம், எரிசக்தித்துறை ஆகியவற்றின் மீது புதிய தடையை விதித்துள்ளது.



அமெரிக்கா, ஈரானின் எண்ணெய் வர்த்தகம், எரிசக்தித்துறை ஆகியவற்றின் மீது புதிய தடையை விதித்துள்ளது.



இது குறித்து அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா கூறுகையில், ஈரான் மீது ஏற்கனவே பொருளாதாரத்தடை விதிக்கப்பட்டுள்ளது. தற்போது இதனை நீட்டித்தும், எண்ணெய் வர்த்தகம் மீதும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் ஈரானின் பெற்றோலியப் பொருள்களை வாங்கவும், இறக்குமதி செய்யவும் நிறுத்தி வைக்கப்படுகிறது என்றார். அமெரிக்காவின் இந்த முடிவு ஈரானுக்கு மேலும் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது


## 10 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரான நிலத்தடி நீர்நிலை கண்டுபிடிப்பு

நமீபியா,ஓக.2

ஆபிரிக்க நாடான நமீபியாவில் 10 ஆயிரம் ஆண்டுகள் பழமையான, பிரமாண்ட நிலத்தடி நீர்நிலை இருப்பதை விஞ்ஞானிகள்கண்டறிந்துள்ளனர். இதன்மூலம் 400 ஆண்டுகளுக்குத் தட்டுப்பாடு இல்லாமல் குடிதண்ணீர் வழங்கலைச் செய்ய முடியும் என்கின்றனர்.

தென்மேற்கு ஆபிரிக்க நாடு நமீபியா. அட்லாண்டிக் பெருங்கடல் ஓரமாக தென் ஆபிரிக்காவை ஒட்டியுள்ளது. இங்கு குடிதண்ணீர் ஆதாரம் தொடர்பாக ஜேர்மன் புவிஅறிவியல்மற்றும்இயற்கை வளங்கள் நிறுவனத்தின் திட்ட மேலாளர் மார்ட்டின் கிங்கர் தலைமையில் ஒரு ஆய்வு நடத்தப்பட்டது. இந்த ஆய்வில், மிகமிகப் பழமையான பிரமாண்ட நீர்நிலை ஒன்று தரைக்கு அடியில் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதுபற்றி மார்ட்டின் கிங்கர் மேலும் கூறியதாவது:- ஆபிரிக்காவின் வறண்ட பகுதிகளில் ஒன்று நமீபியா. பாலைவனங்கள் அதிகம் உள்ள இந்தப் பகுதியில் தரைக்குக் கீழே சுமார் 1000 அடி ஆழத்தில் பிரமாண்ட ஏரி அளவுக்கு நீர்நிலை இருப்பது தெரியவந்துள்ளது. தரையின் அடியில் நிலத்தடி நீர்ப் படுகைகள் இருப்பது சாதாரணம்தான். இது 10 ஆயிரம் ஆண்டுகள் பழமையானது என்பதுதான் சிறப்பம்சம்.



இத்தனை ஆண்டுகளாக் கண்டுபிடிக்கப்படாமல் இருந்தது ஆச்சரியமாக இருக்கிறது. இந்த நீர்நிலை சுமார் 70 கி.மீ. நீளம், 40 கி.மீ. அகலம் என பிரமாண்ட ஏரி அளவுக்கு இருக்கிறது. நிலத்தடி ஏரிக்கு ஓகங்வெனா 2 என்று பெயரிட்டுள்ளோம். அங்கோலாவின் எல்லையை ஒட்டி இது அமைந்துள்ளது.

சமீப ஆண்டுகளாக சுற்றுச்சூழல் பாதிப்பு அதிகம் உள்ளதால், ஆறு, கடல் போன்றவை நிறைய மாசுபட்டிருக்கிறது. ஆனால், 10 ஆயிரம் ஆண்டுகளாக நிலத்தின் மேல் பகுதியுடன் தொடர்பில் இல்லாத தண்ணீர் என்பதால், ஓகங்வெனா ஏரியின் தண்ணீர் மிகவும் சுத்தமாக உள்ளது. சுத்தமான, பாதுகாப்பான குடிதண்ணீர் கிடைக்காமல் ஆபிரிக்காவில் பல பகுதிகளில் மக்கள் அவதிப்படுகின்றனர். நமீபியாவிலும் மக்கள் நல்ல தண்ணீருக்காகவெகுதூரம்செல்லவேண்டி இருக்கிறது - என்றார்.

## அந்நியப் படைகளை அனுமதியோம்

சிரியாவில் அந்நிய படைகள் நுழைவதைப் பார்த்துக் கொண்டிருக்க மாட்டோம் என, ஈரான் எச்சரித்துள்ளது. அந்நிய நாட்டு கூலிப்படையினர் தான் தங்கள் மீது தாக்குதல் நடத்தி வருவதாக சிரிய அமைச்சர் கூறியுள்ளார்.

இந்த நிலையில், ஈரான் ராணுவ துணைத் தளபதி மசூத் ஜசாயெரி குறிப்பிடுகையில், சிரியாவில் வெளிநாட்டுப் படைகள் தலையிடுவதை நாங்கள் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க மாட்டோம்.

எனினும், இப்போதைக்கு நாங்கள் சிரியாவுக்குப் படைகள் எதையும் அனுப்பவில்லை. மனிதாபிமான உதவிகளைமட்டும்அளித்து வருகிறோம். நிலைமையைக் கூர்ந்து கவனித்து வருகிறோம் - என்றார்

## அமெரிக்கத் தூதரகத்தில் வெடிகுண்டுப் புரளி

நோர்வேத் தலைநகர் ஒஸ்லோவில் வெடிகுண்டுப் பீதி ஏற்பட்டதால், அமெரிக்கத் தூதரகம் அமைந்துள்ள பகுதியில் மக்கள் வெளியேற்றப்பட்டனர். பின்னர் அது புரளி எனத் தெரியவந்தது.

அமெரிக்கத் தூதரகம் அருகே உள்ள ஒரு வாகனத்துக்குக் கீழே மர்மப் பொருள் இருப்பதாகத் தெரியவந்தது. இதையடுத்து, வெடிகுண்டு நிபுணர்கள் மோப்ப நாய்களுடன் சம்பவ இடத்துக்குச் சென்று சோதனை மேற்கொண்டனர். முன்னதாக அந்தப்பகுதியில் இருந்தவர்கள்வெளியேற்றப்பட்டனர். ஆனால், அந்த மர்மப் பொருள் வெடிகுண்டு இல்லை என்பது சோதனையின் போது தெரியவந்தது.


### கோழிக்குஞ்சு விற்பனை

தடுப்பு மருந்து போடப்பட்ட " A ' தரமான பிறிமா புறொயிலர் குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் மற்றும் சிவப்பு சேவல் குஞ்சுகள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். முன் கூட்டியே பதிவுசெய்யவும்.

நல்லூர் பாம் சென்ரர், #19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம் தொ.பே : 021 2226944

நல்லூர் பாம் சென்ரர், கனகபுரம் வீதி, கிளிநொச்சி தொ.பே : 077 6225944

சுட்டி பாம் சென்ரர் வட்டுக்கோட்டை தொ.பே 077 8996085

(21061) (6-8.)

### சேவிஸ் ஸ்டேஷன்

கொம்பிரஷர்(Air compressor Indian,Italy)
கிரிஸ் பம்ப் (Grease pumps Japan,Turkey)
நீர் உயர் அழுத்திப்பம்புகள் (Water Highpressor pumps)
வெக்கும் கிளீனர்ஸ் (Vaccum cleaners)
4Ton, 8Ton (single, twinpost), 12,16Ton Hoist
ஓட்டோ லிப்ட் (3wheeler lift), bike lift
1 YEAR WARRANTY
அனைத்து வித திருத்தவேலைகளும் செய்து தரப்படும்
CARTEC TRADING (PVT) LTD
94, 4ஆம் குறுக்குத்தெரு,யாழ்ப்பாணம்
தொடர்பு 077 6872656, 072 1260760
(21198)(6-8)

### சிறுநீரகம் தேவை

60 வயதுடைய ஆண் நபர் ஒருவருக்கு O+ இரத்த வகையுடைய (வயது 18 -60) சிறுநீரகம் உடன் தேவை. கொடுக்க விரும்புபவர்கள் 021 300 6627 எனும் தொலைபேசி இலக்கமுடன் தொடர்பு கொள்ளவும்.

தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(18961)(6-8)

### விற்பனைக்கு உண்டு

T.P. மில் மெசின்
Photocopy - மெசின்
லெமனற்றிங் மெசின்
கொமினிகேசன் பிற்றிங்
காகிதாதிப் பொருள்கள்
போன் பொருள்கள் சாச்சர், கான்பிறி, மல்டிசாச்சர்கள்
மொத்தமாக மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு
மற்றும் பைப் வகைகளும் விற்பனைக்கு உண்டு.
உடன் விரையுங்கள் V.R.T. கரடிப் போக்கு, கிளிநொச்சி
2012.08.02 - 03 - 04 வரை
தொடர்பு: T.P : 077 3017994 (19295)(6-7-8)

### 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 08 ★ 12 ★ 1945



உதிர்வு 03 ★ 08 ★ 2006

அமரர் லடிஸ்லாஸ் மேரி பேர்டினட்

( ஓய்வு பெற்ற ஆசிரியர், சென். பற்றிக்ஸ் கல்லூரி)

ஆறாத் துயரில் ஆறாம் ஆண்டு நினைவு நாள்தனில்
மீளாத்துயரில் மீண்டும் நீண்டு மூழ்கி
கண்ணீர் கலக்க கதறி அழுது - உம்
ஆன்ம சாந்தி வேண்டி நிற்கின்றோம்

நாளை (03.08.2012) வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கு பாசையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

பிரிவால் துயருறும்:
மனைவி,
பிள்ளைகள்,
மருமகள், பேரப்பிள்ளைகள், தாய், சகோதரர்கள்.

முதலாம் குறுக்குத் தெரு, பாசையூர், யாழ்ப்பாணம்.

(21212)(6-8)

### 08ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 21 • 05 • 1926



உதிர்வு 13 • 07 • 2004

அமரர்
பொன்னையா யோகலிங்கம்

மௌனங்கள் நிலையாகிப் போய்விட
சோகமே எம் வாழ்வில் ஆழ்ந்தது
உண்மை அன்பின் உருவமொன்று
எம்மை விட்டுச் சென்ற கணங்கள்
நிதம் நிதம் நெஞ்சை வாட்டுதே ஐயா

### 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 12 • 01 • 1926



உதிர்வு 02 • 08 • 2002

அமரர்
றோசி ஜெயமணி யோகலிங்கம்

ஏழாலை தனில் பிறந்தவளே
வசந்தி வாசா கண்டிவீதி கிளிநொச்சியிலே
ஆயிரத்து தொழாயிரத்து ஐம்பத்து நான்காம்
ஆண்டிலிருந்து வசிப்பிடமாகக்
கொண்டவளே
கிளிநொச்சி கருணாநிலையமதில்
இன்று நடைபெறும் ஆராதனையின்
நித்தம் எம் பணியைத் தொடருகின்றோம்

பிரிவால் துயருறும்
திருமதி வி. யோகவதனி (மகள்-லண்டன்)
0044 742 308 4023

(21191)(5-6)

# சோதனைகள் சாதனைகள் ஆகட்டும்

(12)

எப்படியோ வேலை போய்விட்டது. அதைப் பற்றியே எண்ணிக் கொண்டிருப்பதால் எந்தப் பயனும் விளையப் போவதில்லை. அதைப் பற்றியே எண்ணுவதை விட்டுவிட்டு, அடுத்து என்ன செய்வது, எதைச் சிந்திப்பது என்பது ஆக்கபூர்வச் சிந்தனையாகும். இழந்த வேலையைப் பற்றியே எண்ணிக் கொண்டிருப்பது எதிர்மறைச் சிந்தனையாகும்.

முடிந்து போனதை நினைத்துப் பயனில்லை. இனி நடக்கப் போவதைப் பற்றி எண்ணுவதுதான் விவேகம் உடைய செயல். இனி என்ன செய்ய வேண்டும் என்று எண்ணத் தொடங்குகின்ற போது, நிகழ்ச்சிகள், அதனால் விளைந்த கவலைகள் மனதை விட்டு நீங்கி, புதிய வெளிச்சம் தோன்ற ஆரம்பிக்கிறது.

வேலையை இழந்தது புதிய நன்மை தோன்றுவதற்கான ஆரம்பம். இது இறைவனின் கட்டளை என்று ஏற்றுக் கொண்டு விட்டால் நிம்மதி பிறப்பதோடு, புதிய வழிகளைப் பற்றிய சிந்தனையும் தோன்ற ஆரம்பிக்கும்.

### மாற்றம் தவிர்க்க முடியாதது

பத்து வருஷம் தொடர்ந்து வாழ்ந்தவர்களும் இல்லை. பத்து வருஷம் தொடர்ந்து கெட்டுப் போனவர்களும் இல்லை என்று சொல்லுவார்கள். இது பொதுவர்ன வாசகம் என்றாலும் வாழ்க்கையின் மிக முக்கியமான உண்மை ஒன்றை உணர்த்துகின்ற வாசகமாகவும் அமைந்திருக்கிறது.

நன்மையும், தீமையும் மாறி மாறி வரக்கூடியவை என்பதை இது உணர்த்துவதாகவே கருதவேண்டும். ஆகவே உங்களுக்கு ஒரு சோதனை ஏற்பட்டாலும் அது நிலைத்திருக்கும் என்று நீங்கள் அச்சப்பட வேண்டியதில்லை. அது தற்காலிகமாக ஏற்பட்டுள்ள கஷ்டம் என்று எண்ணவேண்டும். அது விலகிப் போய்விடக் கூடியது என்கிற எண்ணம் உங்களுக்குத் தோன்றினாலே அதைப் பற்றிய அச்சமும் உங்களை விட்டு நீங்கிவிடும்.

சாதாரண அனுபவம் ஒன்றைச் சொல்லுகிறேன். ஒரு நாள் இரவு நான் பயணம் செய்து கொண்டிருந்த ரயில் சென்னைக்குக் காலதாமதமாக வந்து சேர்ந்தது.

இரவு நடுநிசிக்குமேல் ஆகிவிட்டது. அந்த அகால வேளையில் நான் இருக்கும் இடத்துக்குச் செல்ல வாகன வசதி எதுவும் கிடைக்காதோ என்கிற சந்தேகத்துடன் ஸ்டேஷனை விட்டு வெளியே வந்தேன். ஒரே ஒரு ஓட்டோ மட்டும் நின்றுகொண்டிருந்தது. அதன் சாரதி வண்டியில் படுத்தபடியே உறங்கிக் கொண்டிருந்தார். எழுப்பினால் கோபப்பட்டு வர மறுத்துவிடுவாரோ என்று எனக்கு அச்சம். ஆனால் வேறு ஓட்டோ எதுவும் இல்லாததால் அவரை எழுப்புவதைத் தவிர வேறு வழி இருக்கவில்லை.

எழுந்த அவர் கண்களைக் கசக்கி, ''புறப்படலாமா சார், எங்கே போக வேண்டும்'' என்று கேட்டார்.

நான் போக வேண்டிய இடத்தைச் சொன்னேன். அவரும் உற்சாகமாக ஓட்டோவை ஸ்டார்ட் செய்தார். அப்படி அவர் நடந்து கொண்டது எனக்குச் சற்று ஆச்சரியமாக இருந்தது. அதைவிட பெரிய ஆச்சரியம் என்ன என்றால், விசில் அடித்தபடியே அவர் குஷியாக ஓட்டோவை ஓட்டிக் கொண்டிருந்தார்.

அவரைப் பாராட்ட வேண்டும் என எண்ணிய நான் ''இந்த இரவில் சிலர் வர மறுப்பார்கள். நீங்கள் வந்தது எனக்கு ஆச்சரியமாகவும், மகிழ்ச்சியாகவும் இருந்தது'' என்றேன்.

அவர் உற்சாகம் கலந்த குரலில் சொன்னார். ''காலையில் இருந்து ஓட்டோ ரிப்பேர். பாதிநேர வருமானம் போய்விட்டது. அதை எப்படி ஈடுகட்டுவது என்று யோசித்தபடியே படுத்திருந்தேன். நல்லவேளை, நீங்கள் எழுப்பி என்னைச் சவாரிக்கு அழைத்தீர்கள். தூரம் அதிகம்தான். அதற்குத் தகுந்த வருமானம் கிடைக்கத்தானே போகிறது. காலையில் இழந்ததை இரவில் ஈடுசெய்து விடுகிறேன்.

ஒரு விஷயத்தில் எனக்கு எப்போதுமே நம்பிக்கை உண்டு ஒரு சமயத்தில் குறைத்து விடுகின்ற ஆண்டவன் இன்னொரு சமயத்தில் கூட்டிக் கொடுத்துவிடுகிறான். சராசரி கணக்கு எப்போதும் சரியாகவே இருக்கிறது.''- என்றார்.



வீட்டில் போய் இறங்கியபோது மீற்றர் கணக்கைவிட ஐந்து ருபாய் அதிகமாகக் கொடுத்தேன். அன்று இரவெல்லாம் அவர் சொன்ன ஒரு விஷயத்தைப் பற்றியே மனம் சிந்தித்துக் கொண்டிருந்தது. சராசரியில் எல்லாமே சரியாகி விடுகிறது. ஒன்றில் குறைந்தால் இன்னொன்றில் கூடி விடுகிறது. அதாவது ஆண்டவன் ஒரு குறையை வைக்கும்போது இன்னொரு நிறையையும் வைத்துவிடுகிறான். மொத்தக் கணக்கு சரியாகவே இருக்கிறது.

அதனால்தான் சொல்லுகிறேன், எங்கோ ஒரு இழப்பு ஏற்படுவது என்பதற்காக நீங்கள் மனத் தளர்ச்சி அடைய வேண்டியதில்லை. ஒரு வேலை கைவிட்டுப் போனால் இன்னொரு வேலை காத்திருக்கிறது என்று நீங்கள் நம்ப வேண்டும்.

இந்த நம்பிக்கைதான் வாழ்க்கைக்கு ஆதாரம்.

-பி.சி.கணேசன்- (தொடரும்)

# சுயநலத்துக்கு இடம் கொடுக்காமல் கொள்கையுடன் வாழ்ந்தவர் கிருஷ்ணராசா

## நினைவஞ்சலிக் கூட்டத்தில் ஆனந்த கிருஷ்ணன் தெரிவிப்பு

அச்சுவேலி, ஓக.2

சுயநலத்துக்கு இடம் கொடுக்காமல் கொள்கை ரீதியிலான கட்டுப்பாடுகளுடன் சமூக மாற்றங்களுக்கு இடமளித்து, சேவையை நோக்காகக் கொண்டு வாழ்ந்த முன்னோடி அமரர் கிருஷ்ணராசா. ஊடகவியலாளராக, அரசியல் வாதியாக, சமூக வியலாளராக வாழ்ந்து காட்டியவர். பல்வேறு ஆளுமைத் திறன் கொண்டவர். அவரது இழப்பு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். -இவ்வாறு அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் ஓய்வு பெற்ற பொது முகாமையாளர் எம்.ஆனந்த கிருஷ்ணன் தெரிவித்தார்.

மூத்த ஊடகவியலாளர் அமரர். அ.த.க.கிருஷ்ணராசாவுக்கு ஆவரங்கால் மத்திய முன்பள்ளி மண்டபத்தில் அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது. தொழில்நுட்ப அலுவலர் எஸ். தங்கராசா தலைமையில் நடைபெற்ற இந்த அஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஆனந்தகிருஷ்ணன் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

சாதிய கட்டுப்பாடுகள் சமூக மேம்பாட்டுக்குத் தடையாக இருந்த காலப்பகுதியில் தனிமனிதனாக அதற்கு எதிராகப் போராடியதோடு சுயநல நோக்கு எதுவும் இன்றி, பொது நலத்துடன் பணியாற்றியவர். அவரது பணி முன்னெடுப்புக்களுக்கு குடும்ப, சமூக சூழலில் எதிர்ப்புக்கள் காணப்பட்ட போதிலும், இறுக்கமான கொள்கையுடன் தனது பணியைத் தொடர்ந்து வெற்றிகண்டவர்.

கிருஷ்ணராசா ஊடகவியலாளராக, அரசியல்வாதியாக, கிராம சேவையாளராக, சமூகவியலாளராக, இலக்கியப் படைப்பாளியாக பல்வேறுபட்ட பாத்திரங்களை ஒரேகாலப் பகுதியில் வகித்த பன்முகப்பட்ட ஆளுமைத் திறன் கொண்டவர்.

கொள்கையில் உறுதிப்பற்றுக் கொண்ட நேர்மையாளர், சுயநலம் இன்றி தீர்க்க தரிசனம் மிக்க செயற்பாடுகளை முன்னெடுத்து வெற்றி கொண்டவர்.

மாணவனாக இருந்த காலப் பகுதியில் உரிமைப் போராட்டத்தில் ஈடுபட்டு காயப்பட்டவர். அவரது சமூக நோக்கம் உழைப்பு சமூகத்துக்கு வழிகாட்டிகளானது. இளைய தலைமுறையினரால் பின்பற்றக் கூடியவை.

எதையும் தேடி அறிந்தெடுத்து ஆதாரங்களுடன் ஆணித்தரமான கருத்துக்களை முன்வைக்கும் திறன்கொண்ட அமரரின் கடும் உழைப்பு முற்போக்குச் சிந்தனைகள் இன்று பாராட்டப்படுகின்றன. 50 வருடங்களுக்கு முன்னர் அவரது சமூகவியல் கருத்துக்கள் அவர் வாழ்ந்த சமூகச் சூழலில் வரவேற்புக்கு உரியதாக இல்லாமல் இருந்த போதிலும் தனது கொள்கையில் எந்தவிதமான விட்டுக் கொடுப்புக்கும் இடம் இல்லாமல் உறுதியாக நின்று வெற்றி கண்டவர். அவரது கொள்கைப் பிடிப்பும் நேர்மைத் திறனும் செயலூக்கமும் தான் இன்று அவரை நினைவு கூரவைத்துள்ளன.

தான் வாழ்ந்த காலத்தில் சமூகத்துக்கு எந்தவகையில் உதவினாரோ, அதேபோன்று தான் மறைந்த பின்பும், தனது உடலை மருத்துவ பீடத்துக்கு வழங்கி எதிர்கால மாணவர்களின் உயர் கல்வி வாய்ப்புக்கு உதவியுள்ளார். இது அவரது கொள்கை வைராக்கியத்தையும் மனித நேயத்தையும் வெளிப்படுத்துகின்றது.

இந்த வகையில் அவர் இறப்பின் பின்னரும் வாழ்ந்து கொண்டு இருக்கின்றார். அவரது முன்னோடியான செயற்பாடுகள் அவரை நினைவு கூரவைத்திருப்பதுடன், பலரும் பின்பற்றுவதற்கு வழிகாட்டிகளாகவும் அமைந்துள்ளன எனக் கூறினார். (எ-11)



யாழ்.திருக்குடும்பக் கன்னியர் மட பாடசாலை விஞ்ஞான தினமும் 'பரிதிச்சுடர்' மலர் வெளியீடும் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றன. இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக கல்வியியல் பேராசிரியர் மா.சின்னத்தம்பி மலரினை வெளியிட்டு வைக்க யாழ். மாநகரசபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் பெற்றுக் கொள்கிறார். (எ-7)

## இந்தியாவில் ஒலிம்பியாட் போட்டி

ஒன்பதாவது சர்வதேச கணித - விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டி IMSO 2012 எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 27 ஆம் திகதியில் இருந்து 31 ஆம் திகதி வரை இந்தியாவில் உத்தரப் பிரதேச மாநிலத்தின் லக்னோ நகரில் நடைபெறவுள்ளது. இந்தப் போட்டியில் யாழ். இந்துக் கல்லூரி மாணவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

கல்வி அமைச்சால் இவர்களுக்கான வதிவிடப் பயிற்சி நெறி குருதெனிய கல்விவள நிலையத்தில் நடைபெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்தப் பயிற்சி ஒகஸ்ட் 4 ஆம் திகதி தொடக்கம் 7 ஆம் திகதி வரை மற்றும் 18 ஆம் திகதி தொடக்கம் 21 ஆம் திகதி வரை மற்றும் செப்ரெம்பர் 7 ஆம் திகதி தொடக்கம் 10 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. (எ)

# புலன்களைக் கட்டுப்படுத்தப் பழகினால் நல்ல காரியங்களை நிறைவேற்றலாம்

## பிரமசாரி ஜாக்கிர சைத்தன்ய தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக.2

நற்சிந்தனைப் போக்கான காரியங்களை நாம் நிறைவேற்ற வேண்டுமானால் ஆன்மிக ரீதியில் எமது புலன்களைக் கட்டுப்படுத்தப் பழக வேண்டும். எமக்குள் மனக் கட்டுப்பாடு இருக்குமானால் அரிதான மனிதப் பிறவியை இப்பிறவியிலேயே நாம் அனுபவிப்பதுடன், சமூகத்தில் நற்சிந்தனையாளராக எம்மை இனம் காட்ட முடியும் என்று யாழ். சின்மயாமிஷன் பிரமசாரி ஜாக்கிர சைத்தன்ய தெரிவித்தார்.

கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் ''கடவுள் பாதி மிருகம் பாதி கலந்து செய்த கலவை மனிதன்'' எனும் தலைப்பில் ஆன்மிக சொற்பொழிவு நிகழ்த்தும் போதே பிரமசாரி ஜாக்கிரத சைத்தன்ய இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

உயிரினங்களில் மனிதப் பிறவி மிக அரிதான பிறவி ஆகும். இப்பிறவியில் சிறப்பாக பகுத்தறிவு எனும் அறிவை ஒரு படி கூடுதலாக மனிதனுக்கு இறைவன் கொடுத்துள்ளான்.

ஆனால் மனிதன் தனது அறிவுக்கு எட்டிய வகையில் தெய்வீக இயல்புடையவனாகவும் மிருக இயல்புடையவனாகவும் மாற்றமடைந்திருக்கிறான். எனினும் மனிதப் பிறவியின் இயல்பு நிலையை அவன் உணரவில்லை.

இதனை மனிதனின் குணவியல்புகள் மற்றும் வாழ்க்கைப் படிமுறைகள் மூலம் மாற்றியமைக்க முடியும். தெய்வீகத் தன்மையுடைய மனிதனாக எம்மை மாற்றியமைக்க ஆலயத்துக்கு ஆசாரமுறைப்படி சென்று வழிபடல், பிரார்த்தனைகளை மேற்கொள்ளல், அதிகாலையில் எழுந்து இயற்கை அழகை ரசித்தல், சூரிய உதயம் மற்றும் மறைவை வழிபடல், எம்மிடம் இருக்கக்கூடிய பொருள்களை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளல், எந்தவித எதிர்பார்ப்பும் இன்றிய அன்பை இன்னொருவர் மீது செலுத்துதல், போன்ற குணவியல்புகளை எமக்குள் வளர்த்துக் கொண்டால் மட்டுமே முடியும்.

தேவையற்ற விடயங்களுக்கு எல்லாம் இன்னொருவருடன் சண்டைபோட்டு நாயைப் போல் குரைத்தல், சமூகத்தோடு ஒன்றித்து இருக்காமல் பதுங்கிப் பதுங்கித் தனது காரியங்களைப் பூனையைப் போல் சாதித்தல், குரங்கைப் போல் தாவித்தாவி அலைபாய்ந்து எதேச்சையான வாழ்க்கை நடத்துதல், எருமை மாட்டைப் போன்று செய்கின்ற செயல்களில் விருப்பில்லாமல் சோம்பேறிகளாக இருத்தல் போன்றவை அனைத்தும் மிருக குணங்களாகும்.

இத்தகைய மிருகத் தன்மையான குணவியல்பை மாற்ற ஆன்மிகம், தியானம் மூலம் மனக்கட்டுப்பாட்டை வளர்த்து தூய நற்சிந்தனைப் போக்குடைய மனிதராக நாம் வாழ வேண்டும். எமது வாழ்க்கை மற்றவர்களுக்கு எடுத்துக் காட்டாக இருக்க வேண்டும் - என்றார். (எ-14)

உதயன் தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
**தொலைபேசி:**021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789,
021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

# பன்மைப் பண்பாட்டை நிராகரிக்கும் இலங்கை

இலங்கை, வரலாற்றுத் தொடக்க காலத்தில் இருந்து பல்லினப் பண்பாட்டுக் கூறுகளை பேணி வந்த நாடாகக் கணிக்கப்படுகின்றது. ஆனால் இந்த நிலை இப்போது இல்லை. இன்று பௌத்தம் என்ற மேனிலைவாத கலாசாரமே அனைத்திலும் முதன்மை பெற்ற ஒன்றாக இருந்து வருகின்றது. இதனால்தான் இன்று மீண்டும் பல்லின கலாசாரச் சூழலை உருவாக்குவதில் பெரும் சிக்கல் ஏற்பட்டிருக்கின்றது. அது மத விவகாரங்களில் முதன்மையாக தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பதை அண்மைக்காலமாக அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

இந்த நாட்டில் பௌத்தம், இந்து மதம், கிறிஸ்தவம், இஸ்லாம் போன்ற மதப்பிரிவுகள் காணப்படுகின்றன. அந்தந்த மதத்தைப் பின்பற்றுகின்ற தனிக்கலாசாரமுடைய மக்களும் வாழ்கின்றனர். ஆனால் அரசியல் ரீதியில் எப்போதும் பௌத்தம் மேன்நிலைப்பட்ட ஒன்றாகவே இருந்து வருகின்றது. அது பெரும்பான்மையினர் பின்பற்றும் மதமாக இருக்கின்றமையால் அந்த நிலை உருவாகியுள்ளது. இந்தப் பெரும்பான்மைத் தனத்தை பௌத்தம் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு இலங்கையில் இருக்கின்ற ஏனைய மதங்களை கலாசார கலப்புக்கு உட்படுத்த விளைகின்றது.

போர் ஓய்வுக்குப் பின்னர் தமிழர்களின் பாரம்பரிய பூமியான வடக்கு கிழக்கில் பௌத்த கலாசார எச்சங்களை அடாத்தாக நிறுவியதிலிருந்து இந்தக் கருத்து பெரும்பான்மையினரால் உண்மையாக்கப்பட்டது. வரலாறு தெரிந்த காலத்திலிருந்து சிவனும், பிள்ளையாரும், ஐயனாரும், முருகனும் இருந்த இடங்களில் புதிதாக புத்தரும் குடிகொண்டார். சில இடங்களில் இந்து ஆலயங்கள் அகற்றப்பட்டு புத்தர் சிலைகள் வைக்கப்பட்டன. இன்னும் சில இடங்களிலோ இந்து ஆலயத்துக்குள்ளே புத்தரும் குடிவைக்கப்பட்டார்.

இஸ்லாமிய மதத்துக்குரிய இடங்கள் பௌத்த கலாசார மையங்களாகப் பிரகடனப்படுத்தப்பட வேண்டும் எனக் கோரிய ஆர்ப்பாட்டங்களும் பெரும்பான்மை இனத்தவரால் அரசியல் பின்னணியோடு முன்னெடுக்கப்பட்டன. தம்புள்ளை விவகாரம் இன்னமும் முற்றுப்பெறாத ஒரு கலாசார சிதைப்புப் போராட்டமாக தொடர்ந்து கொண்டே இருக்கின்றது.

இது ஒரு புறமிருக்கத் தமிழர் கலாசாரத்தில் பெரிய மாற்றங்களை நிகழ்த்திய கிறிஸ்தவ மதத்தினரும் பெரும்பான்மை இன அரசியல் முனைப்புக்களால் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். குறிப்பாகத் தமிழ் மக்களின் உரிமைகள் பற்றி அக்கறைப்படும் கிறிஸ்தவ மத குருமார் மிக மோசமான மனித உரிமைகள் சார் பிரச்சினைகளையும், நாட்டில் வாழமுடியாத நிலையையும் எதிர்கொள்கின்றனர்.

அல்லைப்பிட்டியில் தமிழ் மக்களை பாதுகாப்பதற்காக போராடிய கிறிஸ்தவ பாதிரியாருக்கு நிகழ்த்தப்பட்ட கொடூரத்தை இன்னும் அந்த மக்கள் மறக்கவில்லை. இறுதிப் போரில் இலங்கை அரசு தமிழ் மக்களுக்கு இழைத்த அநீதிகளுக்கு ஒரு தீர்வு கிடைக்க வேண்டும், அதற்கு சர்வதேச சமூகம் இந்தப் பிரச்சினையில் கரிசனைகாட்டவேண்டும் என்ற எதிர்பார்ப்போடு செயலாற்றிய மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் இப்போது எதிர்கொண்டிருக்கும் பிரச்சினைகள் நாளாந்தம் வெளிவந்த வண்ணமே இருக்கின்றன. அவருக்கு நேற்றும் கூட விடுதலை கோரும் சிறைக் கைதிகளை பார்க்கவும், அவர்களுக்காக இறை பிரார்த்தனை நடத்தவும் அனுமதி மறுக்கப்பட்டிருக்கின்றது.

இவைகள் இலங்கையில் அரசியல் உரிமைகள் மட்டுமன்றி மத உரிமைகள் கூட சமநிலையில் இல்லை, அதையும் பௌத்த மேலாண்மையே தீர்மானிக்கின்றது என்பதை தெளிவுபடுத்தி நிற்கின்றன.

# ஜெனிவாவில் இம்முறை இலங்கை எதிர்நோக்கும் கண்டம்

*தமிழில்: வியெஸ்ரி*

உலக நாடுகள் கடைக்கொள்ளும் மனித உரிமை பேணல்கள் குறித்து எப்போதும் தேடிக் கண்டறிவதற்கான பொறிமுறையொன்று, இன்று உலகளாவிய கணிப்பீட்டில் தன்னை ஈடுபடுத்தி வருகின்றது. இந்தப் பூமியில் பிறந்த சகல மனிதர்களதும் பிறப்புடன் இணைந்த உரிமையென ஐ.நா. சபையால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள மனித உரிமைகள், உலகின் சகல நாடுகளாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரகடன விதிகளுக்கமைய கடைப்பிடிக்கப்படுகின்றனவா என்பதைப் பரிசீலித்தறிந்து உறுதி செய்வதே இந்தப் பொறிமுறையின் செயற்பாடாகும். ஐ.நா. சபையின் கீழ் தொடர்ச்சியாக இயங்கும் இதனை, பூகோள மீளாய்வைக் குறிப்பிட்ட கால ஒழுங்கில் மேற்கொள்ளும் அமைப்பு Universal periodic review - (UPR) என அடையாளப்படுத்துகின்றனர்.

கடன் வாங்கிய உரிமை போன்று, குறிக்கப்பட்ட காலமொன்றுக்குப் பொது மக்களால் வழங்கப்பட்ட ஆட்சி அதிகாரத்தை தம்மிச்சைப் போக்கில் பயன்படுத்தும் அரச நிர்வாகிகளுக்கு ஐ.நா. சபையின், பூகோள மீளாய்வு அமைப்பு பெரும் சவாலாக அமைகின்றது. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்துப் பேணிச் செயற்படும் நாடுகளுக்கு இந்த அமைப்பால் சிரமம் எதுவும் ஏற்பட வாய்ப்பில்லை.

ஐ.நா. அமைப்பின் சட்ட ரீதியான செயற்பாடு தொடர்பாக 2006 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட விதி மாற்றம், இந்தப் பூகோள மீளாய்வு அமைப்பு நிறுவப்பட வழி வகுத்தது. நான்கு ஆண்டுகளுக்கு ஒரு தடவை உலகநாடுகளின் மனித உரிமை பேணல் நிலைமை இந்த அமைப்பால் ஆய்வு செய்யப்படும்.

அந்த வகையில் எதிர்வரும் ஒக்ரோபர் 22 ஆம் திகதி முதல் நவம்பர் 05 ஆம் திகதி வரை இந்த அமைப்பின் 14 ஆவது அமர்வுத் தொடர் இடம்பெறவுள்ளது. அதில், நான்கு ஆண்டுகளுக்குப் பின்னர் இலங்கையின் மனித உரிமை நிலைப்பாடு குறித்து ஆய்வு செய்யப்படவுள்ளது.

ஐ.நா.சபையின் பொது அமர்வின் போது மனித உரிமைகள் தொடர்பான சிக்கலை எதிர்கொள்ளும் நாடுகளால் கட்டாயமாகப் பரிசீலனைக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய தத்தமது சுய மதிப்பீட்டு அறிக்கையை இலங்கை அரசு கடந்த வாரம் கையளித்துள்ளது.

2008 ஆம் ஆண்டிலேயே இலங்கையும் மனித உரிமைகள் பேணல் தொடர்பான சுயமதிப்பீட்டு அறிக்கையை ஐ.நா. சபையின் உப பிரிவான பூகோள மீளாய்வு அமைப்புக்குக் கையளிக்க வேண்டிய நிலை உருவானது. நாட்டில் மனித உரிமை மீறல்கள் பெருமளவில் இடம்பெறுவதான குற்றச்சாட்டின் காரணமாகவே இந்த நிலை ஏற்பட்டது. அதற்கமைய 2008 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் 2012 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரையான காலப்பகுதியில் இலங்கையில் நிலவிய மனித உரிமைகள் பேணல் நிலைப்பாடு குறித்து இந்த முறை ஆராயப்படவுள்ளது.

2008 ஆம் ஆண்டில் இடம்பெற்ற ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில், மனித உரிமைகள் பேணல் தொடர்பாகப் பேரவையால் இலங்கைக்கு 87 ஆலோசனைகள் வழங்கப்பட்டிருந்தன. அவற்றில் 52 ஆலோசனைகளை நடைமுறைப்படுத்த இலங்கை அரசு ஒப்புக்கொண்டதுடன் 25 யோசனைகளை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டது. ஏனையவை தொடர்பாக உறுதியான முடிவு எதுவும் எட்டப்படவில்லை.

சட்டத்தை மீறிச் செயற்படுதல், கொடூரக் கொலைகள், ஏனைய பாரதூரமான குற்றங்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளவும், சர்வதேசசட்ட பிரகடனங்களுக்கமைய குற்றவாளிகளை நீதிமன்றத்தில் நிறுத்த நடவடிக்கை மேற்கொள்ளவும் பூகோள மீளாய்வு அமைப்பு அதிகாரம் கொண்டுள்ளது.

அவ்விதம் இலங்கை தொடர்பாக இந்த அமைப்பு மேற்கொண்ட பரிசீலனைக்கு அமைய, இலங்கையின் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் பேரவை ஆணையாளர் அலுவலக அதிகாரிகள் நேரில் வந்து ஆய்வு மேற்கொள்ள இலங்கை அரசு அனுமதி வழங்க மறுத்திருந்தது.

மனிதஉரிமை மீறல்கள் குறித்து இலங்கை அரசுக்கு எதிராக கடந்த மார்ச்சில் ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் 19 ஆவது கூட்டத் தொடரில் அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானம் மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. ஆயினும் இலங்கை அரசு நாட்டின் மனித உரிமை நிலைவரத்தை மேம்படுத்தவும், கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தவும் மனித உரிமைகள் பேரவை, இலங்கை அரசுக்கு, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் அடுத்த கூட்டத் தொடர் வரை கால அவகாசம் வழங்கியது.

எதிர்வரும் பூகோள மீளாய்வுக் கூட்டத் தொடரின்போது, மனித உரிமைகளை மேம்படுத்தல் தொடர்பான சிக்கல் நிலையின் பின்னணியுடனேயே இலங்கை அந்தக் கூட்டத் தொடரில் பங்குபற்ற உள்ளது. இலங்கையின் மனித உரிமை மீறல் தொடர்பாக அமெரிக்காவால் கொண்டுவரப்பட்ட பிரேரணை ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்டுள்ளதால், இலங்கை அரசு மனித உரிமைகள் மீறல் தொடர்பான சில நிபந்தனைகளை செயற்படுத்தியாக வேண்டிய இக்கட்டு நிலைக்கு முகம்கொடுக்க நேர்ந்துள்ளது.

அதேசமயம் இறுதிப்போரின் போது அரச படைகளால் பொது மக்கள் பெருமளவில் கொல்லப்பட்டதாகப் புலம்பெயர் தமிழர் அமைப்புகள் தொடர்ச்சியாக இலங்கை அரசு இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுவதாக மேற்குலக நாடுகளும் அடிக்கடி குற்றஞ்சாட்டி வருகின்றன. அண்டை நாடான இந்தியாவும்கூட இலங்கைக்கு எதிராக அமெரிக்காவால் கொண்டு வரப்பட்ட பிரேரணையை ஆதரித்து வாக்களித்தது மட்டுமன்றி இனப்பிரச்சினைக்கு விரைவான தீர்வொன்றைக் காணுமாறு அழுத்தம் கொடுத்து வருகின்றது.

இதற்கு மேலதிகமாக ஜெனிவா பிரேரணையின் போது இலங்கைக்கு எதிராக வாக்களித்த இந்தியாவுக்கு ஐ.நா. சபை தற்போது பலமான ஆயுதமொன்றையும் வழங்கியுள்ளது. மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கு உள்ளாகும் உறுப்பு நாடொன்றின் மனித உரிமை நிலைவரம் தொடர்பாக ஆராய்ந்தறிந்து அறிக்கை சமர்ப்பிக்கும் பணியை, ஐ.நா. சபை தனது ஏனைய மூன்று உறுப்பு நாடுகளிடம் ஒப்படைப்பது வழக்கம். அந்தவகையில் இலங்கையின் மனித உரிமைகள் நிலவரம் தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும் பணி இந்தியா, ஸ்பெயின் மற்றும் பெனின் ஆகிய நாடுகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் 2008 ஆம் ஆண்டு முதலான நான்கு ஆண்டுகள் கால இடைவெளியில் இலங்கையின் மனித உரிமைகள் நிலவரம் குறித்து இந்த மூன்று நாடுகளும் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளன.

இலங்கைக்கு எதிரான அமெரிக்காவின் பிரேரணையை இந்த மூன்று நாடுகளுமே ஆதரித்தன. அத்துடன், இந்தியா, இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் இலங்கை அரசுடன் கடும்போக்கைகடைப்பிடித்து வருகின்றது. எனவே இந்த நாடுகள் இல்ங்கை மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பாகச் சமர்ப்பிக்கவுள்ள அறிக்கை, இலங்கை அரசுக்கு சாதகமானதொன்றாக அமையப்போவதில்லை எனக் கருத முடிகிறது.

இலங்கை அரசு தனது மனித உரிமை பேணலை மேம்படுத்தும் செயற்பாடுகள் குறித்து என்னதான் வாயடித்துக் கொண்டாலும், உண்மை நிலை குறித்து நாட்டின் கீழ் மட்ட, சாதாரண பொதுமக்களே தெளிவாக அறிந்துள்ளனர். கசப்பான மருந்துக் குளிகையை மேற்புறம் தேன் தடவி விழுங்குமாறு கொடுத்தாலும், அதனை விழுங்கும் நோயாளி எப்படியும் கசப்பான சுவையை உணரவே நேரும். அது போன்று மனித உரிமை மீறலால் பாதிக்கப்பட்ட பொதுமக்கள் அதன் தாக்கத்தை அனுபவ பூர்வமாக உணர்ந்து கொள்கின்றனர். மனித உரிமை மீறல்கள் குறித்த தகவல்கள் உலகைச் சென்றடைய தற்போது வாய்ப்பற்றுப்போய்விடவில்லை. ஐ.நா.சபை, ஐ.நா. மனித உரிமைகள் பேரவை என்பவற்றின் உறுப்பு நாடுகளில் பெரும்பாலானவை தற்போது இலங்கையுடன் ராஜதந்திர தொடர்புகளைப் பேணி வருவதால், அந்த நாடுகளின் தூதரகங்கள் இலங்கையில் இயங்குகின்றன.

இலங்கையில் மிரட்டல், கடத்தல், அச்சுறுத்தல் போன்ற ரூபங்களில் எத்தகைய மனித உரிமை மீறல் சம்பவங்கள் இடம்பெற்றாலும் அவை குறித்து குரல் எழுப்ப அரச சார்பற்ற நிறுவனங்கள், ஊடக அமைப்புகள், ஊடக நிறுவனங்கள் போன்ற தரப்புகள் காத்திரமான பங்களிப்பு வழங்கிச் செயற்படுகின்றன. இதன் காரணமாக சரியான தகவல்கள் சென்றடைய வேண்டிய சரியான இடங்களுக்கு உடனுக்குடன் சென்றடையும் வாய்ப்புக் கிட்டுகிறது.

கடந்த மார்ச் மாதத்தில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில், அமெரிக்காவினால் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணை இறுதிப் போரின் போது இடம்பெற்ற மனிதப் படுகொலைகளை முன்னிலைப்படுத்திய குற்றப் பிரேரணையாக அமைந்தது. ஆனால் இந்த முறை பூகோள அமைப்பின் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட இருப்பது, முழு நாட்டிலும் கடந்த நான்கு ஆண்டுகள் காலமாக நிலவிய மனிதஉரிமைகள் நிலவரம் குறித்த சம்பவங்களாகும். ஆகவே இந்த முறை இலங்கை முழுவதும் நிகழ்த்தப்பட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுகளுக்கு இலங்கை அரசு பதிலளிக்க வேண்டிய நிலை உருவாகியுள்ளது.

# பழைய மொந்தையில் புதிய கள் வேண்டாம்

## இந்தியாவிடம் இப்படி ஒரு வேண்டுகோள்

**ஆங்கிலேயருக்கு இந்தியாவில் "யூலியன்வாலா"**
**அமெரிக்காவுக்கு வியட்னாமில் "மைலாய்"**
**இந்தியாவுக்கு இலங்கையில் "வல்வை"**

**வல்வைப் படுகொலை நாளின் நினைவில் நனைந்து**

■ வல்வை ஜெயம்

"ஈழத்தமிழரை இனி தெய்வம்தான் காப்பாற்ற வேண்டும்'' என்று கூறியவர் வேறு யாருமல்லர். ஈழத்து காந்தி என்று அகிம்சை வழியில் வாழ்ந்த அமரர் தந்தை எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்களே. அவர் தமது தள்ளாத வயதிலும் ஈழத் தமிழருக்காகக் குரல் கொடுத்தவர். இலங்கை நாடாளுமன்றில் அவர் அவ்வாறு குரல் கொடுத்தபோது அவரது பேச்சுக்கும், அவர்து குணத்துக்கும் மதிப்பளித்து மௌனம் காத்த இலங்கை நாடாளுமன்றம், இதுவரை ஈழத் தமிழருக்காக ஏதுவுமே செய்யவில்லை. ஈழத் தமிழர் பலத்தை நிரூபிப்பதற்காகத் தமது நாடாளுமன்ற பதவியைத் துறந்து, மீண்டும் காங்கேசன்துறைத் தொகுதியில் இடைத் தேர்தல் நடத்தி அதில் அமோக வெற்றியீட்டியவர்.

அகிம்சை வழியில் ஈழத் தமிழர் சுயநிர்ணய உரிமை பெற்று மானத்துடன் வாழ வேண்டும் என்று தமது தள்ளாத வயதிலும் எத்தனையோ சத்தியாக்கிரக அமைதிவழிப் போராட்டங்களை நடாத்தித் தோல்வி கண்டு இறுதியாக நாடாளுமன்ற பதிவேட்டில் பதிவை ஏற்படுத்திய வசனமே ''ஈழத்தமிழரை இனி தெய்வம்தான் காக்க வேண்டும்'' என்பது. அதனைத் தொடர்ந்து தந்தை வழியில் மற்றுமொரு தேர்தலில் ஒட்டுமொத்த தமிழரும் வாக்களித்து எதிர்கட்சித் தலைமை பதவியை அமரர் அமிர்தலிங்கத்துக்கு ஏற்படுத்திக் கொடுத்தனர். அவரும் தமது பதவி மூலம் உலகின் கண்களைத் திறந்து, தமிழர் படும் இன்னல்களை எடுத்துக் கூறி ஈழத் தமிழர்கள் அனைவரும் சுய மரியாதையுடன் வாழ அயராது உழைத்து நின்றார். தமிழர்களின் சாத்வீகப் போராட்டங்களைப் பட்டியலிட்டு அலுத்துவிட்டது.

ஆனாலும், படுகொலைகளும், கற்பழிப்புக்களும், உயிரோடு எரியூட்டும் எம் உறவுகளின் எண்ணிக்கையும் அதிகரித்துச் சென்றதே தவிர, தமிழர் வாழ்வில் பூச்சியமே விடையானது. அதனால் இளைஞர்கள் வெகுண்டு எழுந்தனர். எதிர்ப்பைத் தெரிவிப்பதற்காக வன்முறையைக் கையாண்டு பஸ்களை எரியூட்டியும் அரச கட்டடங்களை அலங்கரித்த பெயர்ப் பலகைகளைத் தாரூற்றி அழித்தும் தீவிர நடவடிக்கைகளில் இறங்கினர். அரசு ஆயுத பலம்கொண்டு இளைஞர்களை அடக்க நினைத்தது. முடிவுகள் மாறாக வரலாற்று நிகழ்வுகளைத் தந்தது. இளைஞர்கள் தமது கையில் ஆயுதம் ஏந்த வேண்டிய கட்டாயச் சூழ்நிலையை ஏற்படுத்தியது. அரச இயந்திரம் முடுக்கி விடப்பட்டு ஈழத்தமிழர் அனைவரும் ஈழத்தின் எந்தப் பாகத்திலும் வாழமுடியாத நிலையை ஏற்படுத்தியது. தென் இலங்கையில் இருந்த எமது உறவுகள் அடி உதைபட்டுச் செய்வதறியாது, உடுத்த உடையுடன் இலங்கையின் வடக்கு நோக்கி வர நேரிட்டது. 1958 ஆம் மற்றும் 1983ஆம் ஆண்டுகளை முக்கியமாகக் குறிப்பிடலாம். இந்தக் காலங்களில் தமிழ் மக்கள் பலர் படுகொலையுண்டனர்.

சுருங்கக் கூறின், இலங்கை சுதந்திரமடைந்த பின், அதாவது தமிழர்களின் சுதந்திரம் பறிபோன பின்னர் அவர்கள் மறைமுகமாகவும் நேரடியாகவும் துன்பங்களை அனுபவிக்கச் செய்யப் பட்டனர். ஈழத்தமிழர்களின் இத்தனைத் துன்பியல் நிகழ்வுகளுக்கும் வியாபார நோக்கத்தில் ''கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனி'' என்ற பெயரில் இங்கு வந்த ஆங்கிலேயரே காரணம். முஸ்லிம், சிங்களக் கலவரம் நடந்த போது கப்பலேறிச்சென்று இங்கிலாந்து மகாராணியிடம் உத்தரவு பெற்றுவந்து கலகத்தை முடிவுக்குக் கொண்டு வந்த சேர் பொன் இராமநாதன் போன்ற தமிழ்த் தலைவர்களையும், அவர்கள் சிங்கள, முஸ்லிம் மக்களால் கௌரவிக்கப்பட்டமையையும், இப்போது எமது நாடாளுமன்ற உறுப்பினர்களின் பரிதாப நிலையையும் மனதில் கொள்ளவேண்டியுள்ளது.

இங்கிலாந்து கூட தான் விட்ட தவறுக்காகத் தன் தர்மீகக் கடமையை இன்றும் செய்யாது இருப்பது பெரும் வேதனைக்குரியது. ஏனெனில் உலகம் இப்போது வர்த்தக மயமாக்கப்பட்டுள்ளது. அதில் இலங்கைத் தமிழர் வியாபாரப் பொருளாகிவிட்டனர்.


1958களில் ஆரம்பமான கொலை வெறி முள்ளிவாய்க்காலில் 2009இல் கோரத்தாண்டவத்துடன், வரலாறு காணாத ரணங்களுடன் அதாவது கருவறையிலுள்ள குழந்தை முதல் கல்லறைக்குப் போகும் முதியோர் வரை கொல்லப்பட்டு தனதுவக்கிரப் பெருமூச்சை நிறுத்திக்கொண்டது; இல்லை தணித்துக்கொண்டது. ஈழத்தில், தமிழராகப் பிறந்த ஒவ்வொருவரும் இவற்றை அனுபவிக்கவேண்டியது, காலத்தின் கட்டாயமோ அன்றி விதியின் விளையாட்டோ தெரியவில்லை. காகம், பூனை, நாய்கள் கூட சுய கௌரவத்தை இழக்க விரும்புவதில்லை. ஆனால் மானிடரான இலங்கைத் தமிழரின் நிலையோ..?!

இந்தக் கட்டுரையை எழுதும் போது 1983இல் பூட்டிய சிறைக்குள் கொலையுண்ட தங்கத்துரை, குட்டிமணி, ஜெகன் போன்றோருடன் கொலையுண்ட தமிழ் இளைஞர்களின் கொடூரமான துன்பியல் நிகழ்வுகள் தொடக்கம் சமீபத்தில் வவுனியாச் சிறையிலிருந்து கொண்டு செல்லப்பட்டு கொலையுண்ட நிமலரூபன் வரையான துன்பியல் நிகழ்வுகள் மனத்திரையில் ஓடிமறைகின்றன.

ஆரம்பத்தில், பூகோள ரீதியில் இலங்கைக்கு அருகில் உள்ள இந்தியா குரல் கொடுத்தது. இந்தியாவால் கண்டனங்களும் வருத்தங்களும் மாறி மாறி தெரிவிக்கப்பட்டதுடன் பின்னர் அன்னை இந்திரா காந்தியால் இளைஞர்களுக்கு ஆயுதப் பயிற்சி வழங்கப்பட்டது. அன்றைய தமிழக முதல்வர் அமரர் எம்.ஜி.ஆர் அவர்களும் தமது பதவிக்கு மேலாக உதவிக் கரம் நீட்டினார். இளைஞர்கள் கை

"

**1989 ஒகஸ்ட் 2ஆம், 3ஆம், 4ஆம் திகதிகளில் அதாவது தொடர்ந்து மூன்று நாள்கள் வல்வையில் 63 பொதுமக்களுக்கு மேல் ஈவிரக்கமின்றி சுட்டுக் கொல்லப்பட்டனர். வல்வைப்படுகொலைகள் என்ற ஆவண நூலின்படி கொலைகள் 63, படுகாயமடைந்தோர் 43, எரிக்கப்பட்ட வீடுகள் 123, கடைகள் 45, எரியூட்டப்பட்ட மீன்பிடி படகுகள் 176, இந்த அழிவுகளின் அர்த்தம் என்ன என்று இன்னும் எமக்குப்புரியவில்லையே!**



மூன்று நாள்களுக்குப் பின்னர் சடலங்களை அகற்றியபோது இரத்தோட்டக் காட்சி.

ஓங்கும் போதெல்லாம் ஒப்பந்தங்கள், பேச்சுவார்த்தைகள் என காலம் இழுத்தடிக்கப்பட்டது. அன்னை இந்திரா காந்தி அம்மையார், தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர் ஆகியோரது மரணத்தின் பின்னர் ராஜீவ் காந்தி பிரதமரான போது, தமிழர் பிரச்சினை நதியில் விழுந்த கல் போல் தடைபட்டு உருண்டோடி இறுதியாக இந்தியாவின் கையில் ஒப்படைக்கப்பட்டது. அமைதி காப்பதற்கு என்ற பெயரில் இந்திய இராணுவமும் இலங்கையில்காலூன்றியது. வரலாறு வளர்ந்து கொண்டே சென்றது. அமைதி காக்கவந்த இராணுவம் தமது ஆயுத பலத்தை ஈழத் தமிழர் பக்கம் நீட்டி வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போன்று ஈழத் தமிழர் நெஞ்சங்களில் குருதியை உறைய வைத்தது.

**இந்தியாவின் நீலிக்கண்ணீர்**

1989 ஒகஸ்ட் 2ஆம், 3ஆம், 4ஆம் திகதிகளில் அதாவது தொடர்ந்து மூன்று நாள்கள் வல்வையில் 63 பொதுமக்களுக்கு மேல் ஈவிரக்கமின்றி சுட்டுக் கொல்லப்பட்டனர். வல்வைப் படுகொலைகள் என்ற ஆவண நூலின் பிரகாரம் கொலைகள் 63, படுகாயமடைந்தோர் 43, எரிக்கப்பட்ட வீடுகள் 123, கடைகள் 45, எரியூட்டப்பட்ட மீன்பிடிப் படகுகள் 176, இந்த அழிவுகளின் அர்த்தம் என்ன என்று இன்னும் புரியவில்லையே!

இலங்கை அரசையும் உலக நாடுகளையும் வியக்க வைத்து, அமெரிக்கா வரை அன்ன பூரணி என்ற பாய்மரக் கப்பலை செலுத்தி சாதனைகள் பல புரிந்த வல்வை மக்களின் மண் அவர்களது செங்குருதியாலேயே நனைந்த பொழுது இந்தியா அதுவரை வடித்த கண்ணீர் நீலிக் கண்ணீரானது என்று எண்ணத் தோன்றியது. அதுவே ஊதிப் பெருத்து இறுதியாக முள்ளிவாய்க்காலில் முடிவுற்றது.

''ஒபரேசன் லிபரேசன்'' எனும் இராணுவ நடவடிக்கை முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் லலித்அத்துலத்முதலி காலத்தில் நடத்தப்பட்ட போது இந்திய வானூர்திகள் இலங்கை வான் எல்லைக்குள் புகுந்து, பாதிக்கப்பட்ட வடமராட்சி மக்களுக்கு உணவுப் பொட்டலங்களை வானிலிருந்து போட்டு ஆபத்பாந்தவனாகதன்னை இனம் காட்டிக் கொண்டமையால், அப்போது இந்தியா மீது ஈழத்தமிழர்களுக்கு இருந்த நம்பிக்கை அசைக்க முடியாத ஒன்றாகவே திகழ்ந்தது.

இப்போதும் கூட இந்தியா எம்மைக் காப்பாற்றும் என்றுதான் நாம் நம்பியுள்ளோம். இந்திய அரசின் நாடாளுமன்ற அங்கத்தவர்களும், அமைச்சர்களும், பிரதிநிதிகளும் பாதுகாப்பு அமைச்சர்களும் அவ்வப்போது இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளும் போதெல்லாம் ஈழத் தமிழர் சம உரிமை பெற்று வாழ இலங்கை அரசு சட்ட திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தி வந்துள்ளனர். உலகப் புகழ் பெற்ற ஒரு தமிழரான அப்துல்கலாம், இரக்கத்திற்கு இலக்கணமான பெண்குலத்தின் பிரதிநிதியாக பிரதீபா பட்டேல் ஆகிய ஜனாதிபதிகளும், பஞ்ச பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் தூது போன கிருஷ்ணா பரமாத்மா போல, பார்த்தசாரதி தொடக்கம் இந்திய வெளியுறவு மந்திரி கிருஷ்ணன் போன்ற தூதுவர்களும், இந்திய அமைச்சரவையின் பலதரப்பட்ட பிரதிநிதிகளும், ராஜதந்திரிகள் பலரும் வந்து போகிறார்கள். ஆனால் எமது ஈழத் தமிழ் மக்களின் நிலைமையோ உலக்கை தேய்ந்து உளிப்படியான கதையாகவே உள்ளது. தமிழ்நாட்டினாலும் சரி, இந்திய வெளியுறவுக்கொள்கையாலும் சரி எங்களைக் காப்பாற்ற முடியாமை மட்டுமல்ல, இருந்ததைக் கூட காப்பாற்ற முடியாத நிலைக்குள்ளாகிப் பரிதவிக்கின்றோம். எமது கண்ணோட்டத்தில் தமிழ்நாட்டு அரசியல் கட்சிகளும், இந்திய மத்திய அரசும், அமெரிக்காவும் கூட தமது சுயநலன்களுக்காக எம்மைப் பகடைக்காயாக்கியுள்ளனவா? என்பது இங்குள்ள ஒவ்வொரு சாதாரண தமிழ்க் குடிமகனும் எழுப்பும் கேள்வியாகி உள்ளது.


பழைய மொந்தையில் புதிய கள் என்பது போலல்லாமல் முதிர்ந்த அரசியல் அனுபவசாலியான புதிய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி அவர்களாவது இந்த விவகாரத்தில் தற்துணிவுடன் சில கொள்கைகளை வகுத்து நடைமுறைப்படுத்தி- ஆகக்குறைந்தது 1987இல் கைச்சாத்தான இந்திய- இலங்கை ஒப்பந்தத்தின் 13ஆம் திருத்த சட்டமூலத்தை அதாவது அவர்களால் ஏற்படுத்தப்பட்ட சட்டத்தை இங்கு நடைமுறைக்கு கொண்டுவர ராஜதந்திர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என இன்னும் ஈழமக்கள் நம்புகின்றனர். இதுவும் பழைய பல்லவியாகிப் பிரிந்த ஆன்மாக்களுக்கு ஆறுதல் கூற முடியாத நிலையை உருவாக்கக் கூடாது என்பதே ஈழத் தமிழ் மக்களின் அவாவாகும்.

எமது உரிமைக்காகப் போராடிய இளைஞர்கள், மரணித்த பொது மக்கள் ஆகியோரது எத்தனையோ தியாகங்கள் வெறும் கானல் நீராகாது, சுய உரிமை பெற்று வாழ இந்தியாவின் வாக்குறுதிகள் அனைத்தும் காற்றில் கலந்து மறைந்த கதையாகாது, இன்னமும் தீர்க்கப்படாமல் இருக்கும் ஈழத் தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதில் இந்தியாவுக்கு ஒரு தார்மீக பொறுப்பு உள்ளது என்பதை வலியுறுத்தியும், இந்திய இராணுவத்தால் இன்றைய நாளில் படுகொலை செய்யப்பட்ட 63 பொதுமக்களின் அஞ்சலி நினைவைப் பகிர்ந்தும் வல்வை மக்கள் இந்தக் கோரிக்கையை முன்வைக்கின்றனர்.

நல்லூர் கந்தனின் 8 ஆம் நாள் வீதியுலா



# தீவுப் பகுதியில் போர்த்துக்கேயரால் அமைக்கப்பட்ட முதலாவது தேவாலயம் அல்லைப்பிட்டி கார்மேல் அன்னை



லக்ஸ்மன்

இலங்கைக்கு 1505 இல் வருகை தந்த போர்த்துக்கேயர், யாழ் குடாநாட்டைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். 1619 ஆம் ஆண்டில் அதன் பாதுகாப்புக்காக அல்லைப்பிட்டியின் கிழக்கு கடற்பகுதியில் நங்கூரமிட்டுக் கொண்டனர். அங்கு தங்கி நின்ற அவர்கள், தமது வழிபாடுகளுக்காக மாதா உருவத்தை கூடாரம் அமைத்து அங்கேயே வைத்துக் கொண்டனர். தம்முடன் கப்பலில் எடுத்து வரப்பட்டது என்பதால் கப்பலாந்தி மாதா என வழங்கப் படலாயிற்று. அது பின்னாளில் கப்பலேந்தி மாதா எனக் கொள்ளப்பட்டது. இதற்கென முருகைக் கல் கொண்டு ஒரு தேவாலயம் அமைக்கப் பட்டதாகவும் அல்லைப்பிட்டியைச் சேர்ந்த கவிஞர் பாலசிங்கம் என அழைக்கப்படும் சேவியர் கூறுகிறார்.

போர்த்துக்கேயரால் தீவுப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தேவாலயம் இது என்று சொல்லப்படுகின்றது. கப்பல் தலைவனே சென்மரியோனின் வேண்டுதலில் மதகுருவாக வந்த பொமிக்கோ திருப்பலி வழிபாட்டுப்பூசைகள் நடத்தி வந்தான். மக்களும் இந்த வழிபாடுகளில் இணைந்து கொள்வதால் இந்தியாவில் இருந்து தமிழ் குருமாரைத் தருவித்துக் கொண்டான். 1657 இல் ஒல்லாந்தர் வருகையை அடுத்து பின்னாளில் இந்த ஆலயம் அழிக்கப்பட்டது.

ஆலயம் அழிக்கப்பட்டதால் அங்கே இருந்த கப்பலேந்தி மாதா உருவச்சிலையை, போத்துக்கீசரால் இந்த ஆலயத்தின் பொறுப்பாளராக நியமிக்கப்பட்ட யாப்பகூணன், பாண்டுவிந்தன் ஆகியோர் பாதுகாப்பாக எடுத்துச்சென்று இப்போது கார்மேல் மாதா ஆலயம் அம்மந்துள்ள இடத்தில் திருக்கொன்றை மரங்களினூடே காணப்பட்ட கொட்டுப்பனை ஒன்றினுள் மறைத்து இலைதழைகளைப்போட்டு மூடி மறைத்துப் பாதுகாத்ததாகவும் கூறப்படுகின்றது.

இந்தப் பகுதியூடாக மீனவர்களில் நடமாட்டம் அதிகரித்துக் காணப்படும்.யாழ்ப்பாணத்தில் இருந்து கடல் மார்க்கமாக அல்லைப்பிட்டி தெற்குக் கடலுக்குச் சென்று தொழில் செய்து வருவது அவர்களின் வழமையாகும். மீனவர்களுடன் அல்லைப்பிட்டியில் உள்ள சிலரும் உதவிக்குச் செல்வதுண்டு. இவ்வாறு செல்லும் மக்கள் அந்தப் பகுதியில் அதிசயங்கள் நிகழ்வதாக உணர்ந்தனர். அல்லைப்பிட்டியைச் சேர்ந்த சிப்பிரியான் என்பவர் ஒருதடவை தான் ஒளிப்பிழம்பை கண்டதாகவும் அதனைப் பொருட்படுத்தாது வெறுமனே பார்த்த போது திருக்கொன்றை மரங்கள் உள்ள பகுதியில் இருந்து திடீரெனக் கிளம்பிய கரும்புகை, தன்னைச் சூழ்ந்து கொண்டதாகவும், அதனைக் கருத்தில் எடுக்காது சென்று கொண்டிருந்ததால் அந்தப் பகுதியில் தினமும் சிப்பிரியான் என்று பெயர் சொல்லிக் கூக்குரலிடும் சத்தம் கேட்பதால் அவர் தனக்கு உதவியாக மேலும் இருவரைக் கூட்டிக் கொண்டு சத்தம் கேட்ட பகுதிக்குள் சென்றுள்ளார். மாதாவின் உருவச்சிலை மறைத்து வைக்கப் பட்ட பகுதியில் ஒளிக்கீற்று தென்பட்டதாகவும் அதே சமயம் 'நான் இதற்குள் இருக்கின்றேன்' என மெல்லிய குரல் ஒலித்தது. அதைத் தொடர்ந்து கப்பலேந்திமாதா எனக் கூறப்படும் தாயார் காட்சியளித்ததாகவும் சிப்பிரியானும் உடன் வந்தவர்களும் வழிபாடு செய்து திரும்பிச் சென்றதாகவும் முன்னோர்கள் கூறுவதாகவும், தனது தந்தையார் இது குறித்த விவரங்களைப் பதிவு செய்து வைத்திருந்ததாகவும் சேவியர் தெரிவித்தார்.

அன்றிரவு உறக்கத்தில் இருந்த சிப்பிரியானின் கனவில் தோன்றிய கப்பலேந்தி மாதா, ''நான் இருக்குமிடத்தில் நீ எனக்கொரு சிறிய குடிசை அமைக்க வேண்டும்'' எனவும் 'அந்தக் குடிசையில் நான் வாசம் செய்ய விரும்புகின்றேன்' என்று கூறக் கேட்டதும், ஆலயம் அமைப்பது குறித்து சிந்தித்து துரிதமாகச் செயற்படத் தொடங்கினார். சில தினங்களாக தமது தொழிலுக்குச் செல்லாது குடிசை அமைக்கும் பணியில் ஈடுபட்டு பீடம் அமைத்து அதில் மாதாவின் உருவச்சிலையை வைத்ததுடன், தினமும் வழிபாடுகளும் மேற்கொள்ளப்பட்டன. இது நடந்தது 1780 இல் எனத் தெரிகின்றது

1780 இல் இந்த ஆலயம் மக்கள் இருந்து வழிபாடு செய்யக்கூடியதான மண்சுவரினாலான கோயிலாகஅமைக்கப்பட்டது .கூடவே மணிக் கோபுரமும் அமைக்கப்பட்டது. இக் கோவிலைப் பராமரிப்பதற்கு 'தைலாசி' என்ற முதுமையான பெண் நியமிக்கப்பட்டார். கோயிலைப் பராமரித்து வந்தமையால் 'தைலாசி கோயிலார் மகள்' என மக்களால் மரியாதையுடன் அழைக்கப்பட்டார்.

ஆலயம் அமைந்த வரலாறு குறித்து அறிந்த ஊர்காவற்றுறை வேலணை பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள், புதுமை மிக்கவரான கப்பலேந்தி மாதாவை வழிபடுவதில் ஆர்வம் காட்டினார்கள். விசேட தினங்களில் மக்கள் இங்கு வந்து வழிபாடு செய்து திரும்புவதாகச் சொல்லப்படுகின்றது. அல்லைப்பிட்டி, வேலணைப் பங்கின் கீழ் உள்ளது என்பதால் சாட்டி பங்குத் தந்தை வழிபாடுகளை நிகழ்த்தி வைப்பதாகவும் தெரிகின்றது.

ஆரம்பத்தில் இந்த ஆலயம் இருந்த கட்டடம் சிதைவடைந்து காணப்படுகின்றது. இதனால் இடிந்த மாதா கோயில் என இந்தப் பகுதியைச் சொல்கின்றனர். சிலர் இதனை அல்லிராணிக் கோட்டை என்கிறார்கள். மன்னாரில் இருந்து வந்த அல்லிராணிக்கும் இந்த இடிந்த கட்டடத்துக்கும் தொடர்பு உண்டெனவும் கூறப்படுகின்றது. இந்த வரலாறுகள் குறித்து உரிய சான்றுகள் பெறமுடியாத நிலையில் யதார்த்தம் எது என்பது நிச்சயப்படுத்த முடியாதிருப்பதாகவும் அல்லைப்பிட்டி வாசிகள் தெரிவிக்கிறார்கள்.

தற்போது உள்ள ஆலயம் அல்லைப்பிட்டி பெரிய மண்குழி குளத்திற்கு முன்பாக அமைந்துள்ளது. மூப்பர் யாக்கூ தலைமையில் 1815 இல் ஆலயத்தை மாற்றியமைக்கத் திட்டமிட்டு இது கட்டப்பட்டது. அப்போது ஆயராக இருந்த பொன்சீன் கியோமயர் ஆகியோருடன் தொடர்பு கொண்டு பங்கு தந்தை ஒருவரை வரவழைத்து வழிபாடுகள் நடத்தப்பட்டன. வழிபாடுகள் லத்தீன் மொழியிலேயே இடம் பெற்றன.

1990 இல் ஏற்பட்ட இடம்பெயர்வு காரணமாக ஆலயம் பொலிவிழந்த போதும், மீண்டும் பொது மக்களின் உதவியுடன் மெருகூட்டப்பட்டு அல்லைப்பிட்டிக்கு பெருமை சேர்க்கும் ஆலயமாக இன்று கார் மேல் அன்னையின் ஆலயம் திகழ்வதாக மக்கள் பெருமையுடன் கூறுகின்றனர்.

(முற்றும்)

> 1990 இல் ஏற்பட்ட இடம்பெயர்வு காரணமாக ஆலயம் பொலிவிழந்த போதும், மீண்டும் பொது மக்களின் உதவியுடன் மெருகூட்டப்பட்டு அல்லைப்பிட்டிக்கு பெருமை சேர்க்கும் ஆலயமாக இன்று கார் மேல் அன்னையின் ஆலய்ம் திகழ்வதாக மக்கள் பெருமையுடன் கூறுகின்றனர்.

## குஞ்சரியுடன் மஞ்சம் ஏறிவா



மயில் வீரன் மயூரன்
மஞ்சத் தேரேறி
மான்மகள் குஞ்சரி
இருவரோடிணைந்து
அயில் வேலைக் கரம் தாங்கி
அடியார் வினை தீர்க்க
அழகனெனப் பவனி வரும்
திரு நல்லை வீதி!

**தேவி கணேஸ்**

## யருசதத'ுபல 'வபய வருவாய் முருகா!



அன்பருக்கு அன்பனாய்
வந்திடுவாய் முருகா
ஆறுமுக வேலனாய்
ஆடி வா முருகா
இன்பமுடன் மஞ்சமதில்
வலம் வந்திடுவாய் முருகா
ஈவதற்கு இன்னருளை
தந்திடுவாய் முருகா
உன்னடியார் உன்புகழ்
பாடிடவே முருகா
ஊன்று கோலாகிடுவாய்
உத்தமனே முருகா
என்றும் உன்னருளால்
இன்புறவே முருகா
ஏறிடுவாய் மஞ்சமதில்
இன்பமாக முருகா
ஐங்கரனின் அருமைத்
தம்பியே முருகா
ஒன்றும் பலவுமானவே
ஓய்யாரி பாகனே முருகா
ஓங்காரப் பொருளுரைத்தவனே
அப்பனே முருகா
ஔவைக்கு சுட்டபழம்
தந்தவனே முருகா
ஆடி வா நீ ஓடிவா நீ
மஞ்சமதில் முருகா

**தெல்லியூர்த்தேவி**

**நல்லூர் பாம் சென்ரர்**
19, முருகேசர் ஒழுங்கை,
நல்லூர் யாழ்ப்பாணம்.
தொ.பே : 021 2226944
(சி/1924)(6-8)

## வரம் தா முருகா



மஞ்சம்தனில் வரும்
மரகத வேல் முருகா
மங்கையர் இருவருடன்
வரும் வடிவேல் அழகா
மக்கள் குறைகேள்
மயில் வேல்முருகா
மாறாத அன்பு உன்மேல்
கொண்டோம் முருகா
மானிடர் குறைதீர்
முத்துக்குமரா
மண்ணில் நாம்
நிம்மதியாய் வாழ
வரம்தா முருகா

**சாயி ஆனந்தன்**

**சரவணா ரெக்ஸ்**
நல்லூர், யாழ்ப்பாணம், நெல்லியடி

# மீண்டும் போட்டியிடுகின்றமை பிள்ளையானுக்கே வெட்கம்

## கூட்டமைப்புக்கு அல்ல என்கிறார் லோகநாதன்

**உருப்படியான நிர்வாகக் கட்டமைப்பின்றி தமிழ் பேசும் மக்களின் உரிமைகளைப் பறித்தெடுக்கவே முன்னாள் முதலமைச்சர் வழிவகுத்தார்.**

அம்பாறை, ஓக.2

கிழக்கு மாகாணசபைத் தேர்தலை 2008 ஆம் ஆண்டில் புறக்கணித்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பு துளியளவும் வெட்கமின்றி இம்முறை போட்டியிடுவதாக கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சந்திரகாந்தன் கருத்து வெளியிட்டுள்ளார். அவர் மீண்டும் கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கு வெட்கித் தலைகுனிய வேண்டும் என்று அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத் தலைவர் எஸ்.லோகநாதன் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் அம்பாறை மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர் முருகேசு இராஜேஸ்வரனின் தேர்தல் பரப்புரை ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

**தாரைவார்ப்பு**

கிழக்கு மாகாண சபையில் முதலமைச்சராகப் பொறுப்பேற்று சந்திரகாந்தன் நடத்திய நான்கு வருட ஆட்சியில் உருப்படியான எந்தத் திட்டங்களும் மக்களுக்காக செயற்படுத்தப்படவில்லை.

சிங்கள பேரினவாதத்தின் கரங்களுக்குள் சிக்கி, தமிழ் மண்ணைத் தாரை வார்க்கவும், உருப்படியான நிர்வாகக்கட்டமைப்பின்றியும், தமிழ்பேசும் மக்களின் உரிமைகளை, மதகலாசார உரிமைகளைப் பறிகொடுக்கவுமே அவர் வழிவகுத்தார்.

அவரது ஆட்சியின் கீழிருந்த விவசாய அமைச்சு வவுணதீவுப் பிரதேசத்தில், தமிழ் மண்ணில் அத்துமீறிக் குடியேறிய சிங்கள ஊர்காவல் படையினருக்கு 25 ஆயிரம் ஏக்கருக்கு முட்கம்பி வேலியிட்டுக் கொடுத்து தாரை வார்க்கப்பட்ட சம்பவங்களை எல்லாம் தமிழ் மக்கள் மறந்துவிடவில்லை.

**இதுதான் சாதனை**

கிழக்கு மாகாண சபையின் உள்ளூராட்சி அமைச்சுப் பொறுப்பை தன்னகத்தே கொண்டிருந்த முன்னாள் முதலமைச்சர் தமிழ்ப் பிரதேசங்களில் புதிய பிரதேச சபை உருவாக்கத்துக்கு ஏதாவது செய்தாரா?

எமது தொழிற்சங்கம் தொழிலாளர்கள் மற்றும் மக்கள் பிரச்சினைகள் தொடர்பாக ஒரு வருடத்தில் பதின்மூன்று கடிதங்களை அனுப்பியது. ஆனால் அவரிடமிருந்து பதில்கூட வரவில்லை. இத்தகையவைதான் அவரது சாதனைகள்.

இவ்வாறான நிலைமை இருக்கும்போது கூட்டமைப்பைப் பார்த்து இவர் வெட்கம் பற்றிப் பேசுவது வேடிக்கையானது. உண்மையில் முன்னாள் முதலமைச்சர் தான் துளியும் வெட்கமின்றி இம்முறையும் போட்டியிடுகின்றார்.

இவரது ஆட்சியில் தாரை வார்க்கப்பட்ட தமிழ் பேசும் மக்களின் உரிமைகள், நிலங்களை மீட்கவும் பாதுகாக்கவும் தமிழ் பேசும் மக்களுக்கான தன்னாட்சி அதிகார தீர்வொன்றை எட்டுவதற்கான உந்து சக்தியை ஏற்படுத்தவுமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மக்கள் விருப்புக்கு ஏற்ப மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுகின்றது.

**முதலமைச்சர் கனவு**

எந்தவித வெட்கமில்லாமல் மீண்டும் முதலமைச்சராக வருவேனென்ற கனவிலேயே சந்திரகாந்தன் லயித்திருக்கின்றார்.

தேர்தலில் கிழக்குத் தமிழ் பேசும் மக்கள் அளிக்கவிருக்கும் தக்க பாடம் அவரது கனவைப் பகற்கனவாக மாற்றும் என்பது உண்மையாகும். இந்தமுறை தேர்தலில் மக்கள் அளிக்கும் வாக்கு மூலம், எதிர்காலத்தில் கிழக்கில் சிறந்த நிர்வாகக் கட்டமைப்பொன்று உருவாக்கப்பட வேண்டும். இதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் ஒன்றிணைந்து வழிவகுக்க வேண்டும்- என்றார்.

(ச-30)



காத்தான்குடி பரீனாஸ் குறுக்கு வீதியை பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை திறந்துவைத்துள்ளார். அருகில் கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் கே.எல்.எம்.பரீட் உட்பட பல பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

# கிழக்குத் தேர்தல் வெற்றிக்காக அனைவரும் ஒன்றிணைவோம்

## கூட்டமைப்பின் வேட்பாளர் அழைப்பு

எருவில்,ஓக.2

கிழக்கு மாகாணத் தேர்தலை இன விடுதலையின் ஒரு புரட்சியாக மாற்றி எம் கட்சியின் வெற்றிக்கு உரமாக நிற்கவேண்டும் என்பதே ஒட்டுமொத்த தமிழ் பேசும் மக்களின் முடிவாக இருக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளராக போட்டியிடும் கோவிந்தன் கருணாகரன் தெரிவித்தார்.

பட்டிருப்பு, குருமண்வெளியில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முள்ளிவாய்க்கால் உரிமைகளின் புதைகுழியல்ல. தமிழர்களின் உணர்வுகளின் விதைநிலம். அதற்குள் இருந்து அரசியல் ரீதியான தமிழினத்தின் விடுதலை விருட்சம் தழைத்தெழுகின்றது. அதனைப் புரிந்து கொள்ள முடியாது எக்காளமிட்ட பேரினவாதிகளுக்கும் அவர்களுக்குத் துணைபோகும் அடிவருடிகளுக்கும் தற்போது அச்சம் ஏற்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணசபைத் தேர்தலானது தமிழ் மக்கள் மீது வலிந்து திணிக்கப்பட்டுள்ளதை நீங்கள் அறிவீர்கள். அரசால் திணிக்கப்பட்டுள்ள இத்தேர்தலில் காலத்தின் தேவை கருதி நாங்கள் இறங்கியுள்ளோம்.

கடந்த காலத்தில் தமிழ் மக்களின் வாக்களிப்பு வீதம் மிகவும் குறைந்திருந்தது. இது கவலைக்குரிய விடயம். இந்தத் தேர்தலானது தமிழ் மக்களுக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகவுள்ளது. இதில் நீங்கள் உங்களது வாக்குப்பலத்தைக் கட்டாயம் பயன்படுத்த வேண்டிய தேவையுள்ளது.

இதனை நாங்கள் சாதாரண நிகழ்வாகக் கருதி கவனயீனமாக இருப்போமானால் எமது தமிழினம் இந்தக் கிழக்கு மண்ணில் பின்னடைவை எதிர்கொள்ளும் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். அதற்காகத் தமிழ் மக்கள் தமது வாக்குகளை 100 வீதம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வழங்கவேண்டும்.

வடக்கு, கிழக்கு இணைந்த தாயகம் என்ற கோட்பாட்டை நாங்கள் கொண்டிருந்தாலும் இன்று கிழக்கு மாகாணசபையை இலங்கை அரசு தனது பொய்ப் பிரசாரத்துக்கான களமாகப் பயன்படுத்த முனைகின்றது. இந்த நிலையை அனைத்து தமிழ் பேசும் மக்களும் உணர்ந்து என்ன இடர் வரினும் எதிர்கொள்ள வேண்டும். - என்றார்.

(ச-31)

# நுவரெலியாவில் காணிகளை சுவீகரிப்பதற்கு அரசு திட்டம்

நுவரெலியா, ஓக.2

நுவரெலியா நகரத்தை அண்மித்த மாநகரசபை கட்டுப்பாட்டிலுள்ள தோட்டங்களில் தேயிலைக் காணிகளை சுவீகரிக்க அரசு திட்டமிட்டுள்ளது.

இவ்வாறு சுவீகரிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ள தோட்டப்புறக் காணிகளில் அரசு எவ்வா றான வேலைத்திட்டங்களை மேற்கொள்ளப் போகின் றது என்பதை அரசு தெரிவிக்க வேண்டும் என்று நுவரெலியா விவசாயிகள் சங்கத் தலைவர் டிமாதவன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நுவரெலியா மாநகர சபையின் கட்டுப்பாட்டிலுள்ள பம்பரகலை மற்றும் பீற்ருஸ்ராப் தோட்டங்களில் இடம்பெறப் போகின்ற தேயிலைக் காணி சுவீகரிப்புத் தொடர்பாக விளக்கம் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நுவரெலியாவில் தமிழ் மக்கள் செறிந்து வாழும் தோட்டத் தொழிலாளர்களின் தேயிலை காணிகளை அரசு அபிவிருத்தி என்ற போர்வையில் சுவிகரித்து அவற்றில் வெளியாள்களை குடியமர்த்த நடவடிக்கையை மேற்கொள்ளப் போவதாக தெரிவிக்கப்படுகிறது.


இதனால் நுவரெலியா வாழ் தமிழர்களின் பலமும், உரிமையும் பாதிக்கப்படுவதோடு தமிழினத்தின் பலத்தைக் குறைக்கும் செயலாக அது அமையும்.

வடக்கு, கிழக்கு போன்றே மலையகத்திலும் இவ்வாறு கணிகளை சுவீகரிக்கும் திட்டத்தில் அரசு செயற்படுவது தமிழ் மக்களுக்கும், அவர்கள் நம்பிக்கைக்கும் அரசு இழைக்கும் துரோகம்.- என்றார்.

(ச)

# கிண்ணியா வளைவை கட்டாது தடுக்க முயற்சி

## பிரதேச மக்கள் கண்டனம்



திருகோணமலை,ஓக.2

கிண்ணியா நகர சபையின் அனுமதியுடன் கிண்ணியா பாலத்துக்கு அண்மையில் நிர்மாணிக்கப்பட்டு வரும் வரவேற்பு வளைவின் நிர்மாணிப்புப் பணிகளை இடைநிறுத்துமாறு பேரினவாத அதிகாரிகள் கோரியுள்ளனர் என்று பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

இதுகுறித்து மேலும் தெரிவிக்கப்படுவதாவது:-

கிண்ணியா பாலத்துக்கு அண்மையில் இவ்வரவேற்பு வளைவில் முஸ்லிம் கலாசாரத்தை வெளிப்படுத்தும் அம்சங்கள் இடம்பெற்றுள்ளன. அவ்வப் பிரதேசங்களில் வாழும் மக்களின் கலாசாரத்தைப் பயன்படுத்தியே வரவேற்பு வளைவு அமைக்கப்படுவது வழமை. தற்போது அமைக்கப்பட்டு வரும் வளைவிலுள்ள முஸ்லிம் கலாசாரத்தை அகற்றினாலேயே நிர்மாணிப்புப் பணிகள் தொடரும் என அதிகாரிகளால் அறிவுறுத்தப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சீனன்குடா பிரதேசத்திலுள்ள பேரினவாத மத குரு ஒருவரின் தலையீடு இச்சம்பவத்தில் இருக்கிறது. அண்மைக்காலமாக இவர் இப்பிரதேசத்தில் காணப்படும் தமிழ் எழுத்துகளைக் கொண்ட அலுவலக உத்தியோகபூர்வப் பெயர்ப்பலகைகளை அழித்துவருகிறார் என்று மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் முயற்சியால் 50 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுவரும் வளைவை உடனடியாக நிறுத்துமாறு தெரிவிக்கப்பட்டமை தொடர்பில் பிரதேசவாசிகள் கண்டனத்தை வெளியிட்டுள்ளனர். சமூக நல்லிணக்கத்தில் அக்கறை கொண்ட ஜனாதிபதியின் கவனத்துக்கும், ஏனைய அமைச்சர்கள் மற்றும் கட்சித் தலைமைகளின் கவனத்துக்கும் இந்தவிடயம் கொண்டுவரப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

(ச-சி)

# கல்முனையில் அறுவர் கைது

கல்முனை, ஓக.2

கல்முனை பிரதேசத்தில் இறைச்சிக்காக சட்டவிரோதமாக பசு மாடுகளை வெட்டிய ஆறு பேர் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

கழுத்து வெட்டப்பட்ட நிலையில் மூன்று பசு மாடுகளும் மீட்கப்பட்டுள்ளதாக கல்முனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இரகசிய தகவல் ஒன்றினையடுத்து கல்முனை பிரதேசத்தில் பொலிஸார் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதன் போதே சட்டவிரோதமான முறையில் இறைச்சிக்காக பசு மாடுகளை வெட்டிய ஆறு பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களை கல்முனை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கல்முனை பொலிஸார் தெரிவித்தனர்.(ச)

# வடக்கு - கிழக்கு இணைப்பு ஒருபோதும் சாத்தியப்படாது

## அதாவுல்லா தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஓக.2

வடக்கு, கிழக்கை இணைப்பதற்கு சதி நடக்கிறது. அதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது என்று உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லா தெரிவித்தார்.

அக்கரைப்பற்று அனைத்துப் பள்ளிவாசல் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற நோன்பு திறக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கில் முஸ்லிம்கள் இருக்கமுடியாதுள்ளது. ஆனால், கிழக்கை வடக்குடன் இணைக்கவேண்டும் எனக் கூறுகிறார்கள். அதற்கு ஒரு போதும் இடமளிக்க மாட்டோம். முஸ்லிம் என்ற பெயரை வைத்துக் கொண்டு முஸ்லிம் காங்கிரஸ்காரர்கள் வடக்கு, கிழக்கை இணைக்க வேண்டும் என்ற வலைக்குள் இருந்துகொண்டு, முஸ்லிம்கள் தமிழர்களிடம் அரசியல் கற்கவேண்டும் என்று சொல்கிறார்கள். ஆனால், அவர்கள்தான் அரசியல் கற்கவேண்டும் என்று நாங்கள் சொல்கிறோம். நாங்கள் அரசியல் கற்றிருக்கிறோம் - என்றார்.

(ச)

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** உற்சாகம் கூடியபோதும் கோபம் சற்று அதிகமாக இருக்கும். சில விடயங்களில், பிறரை உதாசீனப்படுத்தும் தன்மை அதிகரிக்கும். குறைத்துக்கொள்ளுங்கள். நண்பர் ஒருவர், உங்களுக்காகக் காத்திருந்து ஏமாற்றம் அடையலாம்.

**இடபம்:** வெற்றிச் சிந்தனைகள் அதிகமாகும். சமுதாயத்தில் உயர்ந்த அந்தஸ்தில் உள்ளவர்களின் தொடர்பும், நட்பும் கிடைக்கும். வீட்டில், நண்பர்கள் மற்றும் உறவினர்களின் வருகைகள் அதிகமாக இருக்கும்.

**மிதுனம்:** ஒவ்வொரு விவகாரங்களிலும் காரணமற்ற பிடிவாதம் கூடுதலாகக் காணப்படும். சற்று குறைத்துக் கொள்ளுதல் நல்லது. அலுவலகப் பணியாளர்களுக்கு எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். தொலைபேசித் தகவல் ஒன்று மகிழ்ச்சியை தரும்.

**கடகம்:** நீண்டநாள் தடைப்பட்ட காரியங்களை இன்று செய்து முடித்தே ஆக வேண்டும் என்ற வைராக்கியம் உங்களிடம் ஏற்படும். பழைய நண்பர்களின் சந்திப்புக்களால் மன மகிழ்ச்சி ஏற்படும். குடும்ப விடயம் ஒன்றுக்காக, உணவைப் பொருட்படுத்தாது செயற்படுவீர்கள்.

**சிங்கம்:** சில விடயங்களைக் குழப்பிக் கொள்வீர்கள். சில விடயங்களில் குழம்பிப் போவீர்கள். வெளிவட்டாரங்களில் நன் மதிப்பும், மரியாதையும் கூடியபோதும், மனநிறைவு என்பது குறைவாகவே இருக்கும். குடும்பத்துக்கு உள்ளேயும் உங்களுக்கு எதிர்ப்புகள் உருவாகலாம்.

**கன்னி:** உங்களின் செயற்பாடுகளால் குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். நண்பர்களின் ஆலோசனை மிகுந்த உதவிகரமாக இருக்கும். புதிய முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். சொத்து சம்பந்தப்பட்ட விவகாரம் ஒன்றை, சுமுகமாக முடிவுக்குக் கொண்டு வர முயற்சிப்பீர்கள்.

**நாளை**

ஆடி 19 வெள்ளிக்கிழமை 03.08.2012
திதி: பிரதமை சித்தம் மு.ப 08.34 வரை
நட்சத்திரம்: அவிட்டம், மரண மு.இ. 10.52 வரை சித்தம்
சுபநேரம்: 06.04 - 07.34 வரை
ராகு காலம்: 10.34-12.04 வரை

**துலாம்:** எடுத்துக்கொள்ளும் காரியங்களின் தன்மைக்குத் தகுந்தவாறு செயற்படுவீர்கள். கனிவான பேச்சுக்களால் எதிர்ப்புக்களை வலுவிழக்கச் செய்வீர்கள். பெரிய மனிதர்களின் தொடர்புகளால் பணவசதி கூடும். திடீர் சிந்தனைகளால் பாராட்டப்படுவீர்கள்.

**விருச்சிகம்:** உங்களின் யதார்த்தமான செயற்பாடுகள் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தலாம். எதிலும் எச்சரிக்கையோடு செயற்படுங்கள். சில வகையில் உதவிகளும் கிடைக்கப் பெறுவீர்கள். கலைஞர்களுக்கு புதிய வாய்ப்புகள் தேடிவரும்.

**தனுசு:** புகழ் அதிகரிக்கும், செல்வாக்கு அதிகரிக்கும். முற்றிலும் தெரியாத நபர் ஒருவர், உங்களுக்கு உதவி செய்வார். எதிர்பார்த்த வரவுகள் தாமதப்பட்டபோதும், சேமிப்பிலிருந்து செலவுகள் மேற்கொள்வீர்கள். பொதுநலப் பணிகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு பாராட்டுக் கிடைக்கும்.

**மகரம்:** உங்களின் வார்த்தைகளிலும், செயல்களிலும் நேர்த்தி வெளிப்படும். கூடுதலான மன நிறைவு ஏற்படும். தொலைபேசி மூலம் நல்ல தகவல் கிடைக்கப் பெறுவீர்கள். உறவுகளால் ஏற்பட்ட தொல்லை ஒன்று நீங்கும்.

**கும்பம்:** எதிர்பாராத நிகழ்வுகள் அதிகம் இருந்தபோதும், எதனையும் வெளிப்படுத்திக் கொள்ளாது செயற்படுவீர்கள். தொழில் சார்ந்த விடயங்களுக்காக பயணம் இருக்கும். தாய் மற்றும் பிற பெண்களால் ஒரு நல்ல காரியத்தைச் செய்து முடிப்பீர்கள்.

**மீனம்:** இடையூறுகளுக்கு இடையே பணிகளை முடிக்க வேண்டியிருக்கும். எதிர்பார்த்த வரவுகள் தாமதப்படும். குடும்பத்தில் உறவினர் வருகையால் மகிழ்ச்சி அதிகரிக்கும். வழக்குகள் சாதகமாகும். அலுவலகத்தில் மற்றவர் விடயங்களில் தலையிடுவது அவ்வளவு நல்லதல்ல.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | | 2 | 3 | | 6 | | | |
| | 5 | 7 | 4 | | | | | |
| 3 | | | | 1 | 2 | | 9 | |
| | | 3 | | 7 | | | | 4 |
| 9 | | | 6 | 3 | 4 | | | 8 |
| 8 | | | | 2 | | 3 | | |
| | 8 | | 1 | 4 | | | | 3 |
| | | | | | 3 | 7 | 4 | |
| | | | 9 | | 5 | 8 | | 2 |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 8 | 3 | 6 | 4 | 5 | 7 | 9 |
| 6 | 9 | 7 | 2 | 5 | 8 | 4 | 1 | 3 |
| 5 | 4 | 3 | 9 | 1 | 7 | 8 | 2 | 6 |
| 3 | 1 | 9 | 6 | 7 | 5 | 2 | 8 | 4 |
| 7 | 5 | 4 | 8 | 2 | 9 | 3 | 6 | 1 |
| 2 | 8 | 6 | 4 | 3 | 1 | 9 | 5 | 7 |
| 4 | 3 | 2 | 7 | 8 | 6 | 1 | 9 | 5 |
| 9 | 6 | 1 | 5 | 4 | 2 | 7 | 3 | 8 |
| 8 | 7 | 5 | 1 | 9 | 3 | 6 | 4 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3 X 3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


Aircom E
Travelss & Tours

**பதவி வெற்றிடம்**

எமது நிறுவனத்திற்கு Ticketing Officer பதவிக்கு பெண் வேலை ஆள்கள் தேவை. அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

சுயவிவரக்கோவையுடன் நாளை(03.08.2012) வெள்ளி மு.ப. 10.30 மணிக்கு நேரில் சமுகமளிக்கவும்.

Air Com Travels &Tours
No.:06, Sirambiady Lane,
Off Stanly Road,
Jaffna.
T.P. : 021 221 9113

(21217)(6-5)





**மகளிருக்கான ஓகஸ்ட்**
**விடுமுறைகால 20 நாள் வகுப்புகள்**



பாடசாலை ஆசிரியைகள், வெளிநாடு செல்ல விரும்புபவர்கள், வெளிநாடுகளிலிருந்து வந்து நிற்பவர்கள், உள்ஊரிலேயே தொழில் புரிய விரும்புபவர்கள், மற்றும் ஆர்வமுள்ள அனைவருக்கும் உகந்த பயன்மிகு பயிற்சிகள்!

- முக அழகுக் கலை (Facial):-(B)பஞ்சாறாஸ் Saffron, Papaya, Neem மற்றும் Gold, சொக்கலேற், Jovees தமக்குத் தாமே Facial செய்தல் உட்பட பலவகை.
- Pedicure, Manicure (கைகள், கால்கள், விரல்கள், நகங்கள் அழகுபடுத்துதல்)
- இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் முறைகளில் மணப்பெண் அலங்காரம், வித்தியாசமான 6 முறைகளில் சேலை அணிதல்,

அழகு சாதனப் பொருள்களின் அறிமுகப்படுத்தல், செய்முறை தொடர்பான குறிப்புகள் (Notes) மற்றும் போதிய விளக்கங்களுடனான செயன்முறைப் பயிற்சிகள்.

**முடி சீராக்குதலும் கூந்தல் வடிவமைப்புகளும் (HAIR DRESSING & STYLING)**

- 50 வகையான கொண்டைகள் போடுதல், முடி அயன் செய்தல், (Straightening) முடி சுருட்டுதல், முடி நிறமூட்டுதல், 5 விதமான முடி வெட்டுதல்கள். தமக்குத்தாமே முடி வெட்டுவதற்கான பயிற்சி, Perming, தலைக்கு எண்ணை மசாஜ் செய்தல்.

மேற்படி பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

- தையல் தெரிந்தவர்களுக்கான சாறிபிளவுஸ், சுரிதார், தைக்கும் பயிற்சிகள்

மேற்படி பயிற்சிகளுக்கு வயதெல்லை கிடையாது

**ஆரம்பம் - 06-08-2012 திங்கள் காலை 9.30 மணி**

யாழ் **கலாலயா** பயிற்சியகம் 1985-2012
பெருமாள் கோயிலுக்கு அண்மையில் – யாழ்ப்பாணம்
Yaarl **Kalaalayah** Academy, Jaffna.

மேலும் விபரங்களை பி.ப 4.00 மணி வரை நேரில் அறிந்து கொள்ளலாம்.


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அன்னை மடியில்
21 ★ 04 ★ 1947



ஆண்டவன் மடியில்
03 ★ 07 ★ 2012

## திருமதி பரம்சோதி வள்ளிப்பிள்ளை

கடந்த (03.07.2012) செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவி திருமதி பரம்சோதி வள்ளிப்பிள்ளை அவர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நேற்றுமுன்தினம் (31.07.2012) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் கீரிமலை நகுலேஸ்வர ஆலய புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (02.08.2012) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மரணச் செய்தியறிந்து நேரில் வருகை தந்து ஆறுதல் மொழி கூறியோருக்கும், கண்ணீர் அஞ்சலிகள் வெளியிட்டோருக்கும், தொலைபேசி மூலம் ஆறுதல் கூறிய அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இக்கிரானை
கந்தரோடை.

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(21139)(45-6)



பட்டதாரி ஊழியர்களின் பிரச்சினைகளை தீர்க்கக் கோரி பட்டதாரி ஊழியர் சங்கத்தினர் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டப் பேரணியில் ஈடுபட்டனர். பொரளை கெம்பல் பார்க்கிலிருந்து ஆரம்பமான குறித்த பேரணி பொதுநிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு வரை இடம்பெற்றது.

# தகுதி பெற்ற மாணவர்களுக்கு பல்கலை. அனுமதி வழங்கவும்

## இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் வேண்டுகோள்

அம்பாறை, ஓக. 2

ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பான இரண்டு இஸற் புள்ளிகளிலும் தகுதி பெற்ற சகல மாணவர்களுக்கும் பல்கலைக்கழக அனுமதி வழங்கப்பட வேண்டும். இதற்கு கல்வி அமைச்சு, அரசு, ஆணைக்குழு ஆகியன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இஸற் புள்ளி விவகாரம் தொடர்பாக குறித்த சங்கம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றிலேயே இந்தக் கோரிக்கையை வலியுறுத்தியுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

2011ஆம் ஆண்டுக்கான ஜி.சீ.ஈ உயர்தரப்பரீட்சை பெறுபேற்றில் தோற்றுவிக்கப்பட்ட சர்ச்சை முடிவில்லாமல் நீண்டுகொண்டிருக்கின்றது.

இந்தப் பரீட்சையின் பெறுபேறுகள் வெளியிடுவது தாமதப்படுத்தப்பட்டபோது கொடுக்கப்பட்ட அழுத்தம் காரணமாக வழமைக்கு மாறாக சட்டமா அதிபரின் ஆலோசணையுடன் பெறுபேறுகள் வெளியிடப்பட்டன.

**புதிய இஸற் புள்ளிக் கணிப்பீட்டுக்குப் பிரயோகித்த சூத்திரம் என்ன என்பது குறித்து உடனடியாகப் பகிரங்கப்படுத்தப்பட வேண்டும்.**

ஆயினும் மாவட்ட மட்ட, தேசிய மட்டத் தரப்படுத்தலில் பரவலாகத் தவறுகள் இருப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டபோது, இப்பரீட்சையின் முடிவுகள் அவசரமாக வெளியிடப்பட்டதால் ஏற்பட்ட தவறென 12மணி நேரத்தில் திருத்தி வெளியிடப்பட்டது.

திருத்தங்களில் திருப்தி கொள்ளாத மாணவர்கள் ஆசிரிய தொழிற் சங்கங்களுடன் இணைந்து வழக்குத் தொடர ஆயத்தமாகிக் கொண்டிருக்கையில், பெறுபேற்றின் மீள்பரிசீலனைக்கு விண்ணப்பங்கோரிய பரீட்சைத் திணைக்களம் என்றுமில்லாதவாறு மிக அதிகளவில் விண்ணப்பித்த மாணவர்களிடமிருந்து பாடம் ஒன்றுக்கு 250 ரூபா வீதம் அறவிட்டுக் கொண்டது.

திருத்திய முடிவுகளில் திருப்தி கொள்ளாத மாணவர்களில் 16 பேர், இலங்கை ஆசிரியர் சங்கத்துடன் இணைந்து தொடுத்த வழக்கை விசாரித்த உயர்நீதிமன்றம் ஒன்றிணைந்த இஸற் புள்ளியை இரத்துச் செய்து, பழைய, புதிய பாடத்திட்டங்களுக்கு தனித்தனி இஸற் புள்ளிகளை வெளியிடுமாறும், மாணவர்களின் அடிப்படை உரிமையை பல்கலைக்கழக ஆணைக்குழு மீறியுள்ளது என்றும் அறிவித்தது.

இஸற் புள்ளிப் பிரச்சினையைத் தட்டிக்கழிப்பதற்கும், அதனை மூடி மறைப்பதற்குமென ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழு, குறுகிய காலத்தில் வரையறுக்கப்பட்ட தகவல்களை, பெறுபேறுகளைத் தவிர வேறு எதனையும் அறிந்திராத மாணவர்களிடமிருந்து தொலைநகல் மற்றும் மின்னஞ்சல் மூலம் கோரிப் பெற்ற மனுக்களை வைத்து பெறுபேற்றில் தவறில்லை என்ற அறிக்கையை 10 நாள்களில் ஜனாதிபதியிடம் கையளித்தது.

இஸற் புள்ளிகளை வெளியிடுவதில் காலதாமதம் ஏற்படுத்தப்பட்டு வருவதை அவதானித்த மாணவர்களும், ஆசிரியர் தொழிற் சங்கமும், நீதிமன்றத் தீர்ப்பை அவமதிப்பதற்கு எதிராக வழக்குத் தொடர்ந்த போது வெளிவந்த மீள் திருத்தப்பட்ட இஸற் புள்ளிகள் பத்தாயிரத்துக்கும் அதிகமான மாணவர்களுக்கு பேரிடியாக அமைந்தன. இதில், இரண்டாவது அல்லது முன்றாவது தடவையாக பழைய பாடத்திட்டத்துக்குத் தோற்றிய மாணவர்களின் மாவட்ட, மற்றும் தேசியமட்ட நிலைகள் நம்பமுடியாத அளவுக்கு பின்னடைவு கண்டிருக்கின்றது.

புதிய இஸற் புள்ளிக் கணிப்பீட்டுக்கு பிரயோகித்த சூத்திரம் என்ன என்பது பற்றி உடனடியாகப் பகிரங்கப்படுத்தப்படல் வேண்டும். அதன் மூலமே இந்த நடவடிக்கைகளில் வெளிப்படைத் தன்மை கடைப்பிடிக்கப்பட்டிருக்கின்றது என்பதை உறுதிப்படுத்த முடியும்.-என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ச-30)

# வர்த்தக முதலீட்டை அதிகரிக்க கண்காட்சி

கொழும்பு, ஓக.2

இலங்கை - இந்திய நாடுகளிடையே வர்த்தக முதலீட்டை அதிகாரிக்கச் செய்யும் நோக்கில் இரு நாடுகளும் இணைந்து வர்த்தகக் கண்காட்சி ஒன்றை நாளை வெள்ளிக்கிழமை கொழும்பில் நடத்துகின்றன.

இன்று இலங்கை வரும் வர்த்தக கைத்தொழில் மற்றும் புடைவைக் கைத்தொழில் அமைச்சர் ஆனந்த ஷர்மா இந்தக் கண்காட்சியை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவுடன் இணைந்து ஆரம்பித்து செய்து வைப்பார்.

இலங்கை வர்த்தக சபையுடன் இணைந்து இந்திய கைத்தொழில் சம்மேளனத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் இக்கண்காட்சி மூன்று நாள்கள் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறும்.

இரு நாடுகளினதும் முதலீடுகளை அதிகரிக்கச் செய்து பொருளாதாரத்தை மென்மேலும் பலப்படுத்துவதே இக்கண்காட்சியின் நோக்கமாகும்.

இந்திய நிறுவனங்கள் இலங்கையிலும் இலங்கை நிறுவனங்கள் இந்தியாவிலும் முதலீட்டைச்செய்வதற்கான ஊக்குவிப்பை வழங்கி பல இந்திய நிறுவனங்கள் இக்கண்காட்சியில் தமது திறமையையும் காண்பிக்கவுள்ளன.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் மிக நீண்டகாலமாக உறுதியான வர்த்தக உறவு இருந்து வருகின்றது. இதனை மேலும் பலப்படுத்தும் வகையில் இந்தக் கண்காட்சி அமையும் என்று கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப் பிட்டுள்ளது.

# புதிய இஸற் பெறுபேற்றை ரத்துச் செய்யக் கோரி மனு

கொழும்பு, ஓக.2

புதிய இஸற் புள்ளிப் பெறுபேறுகளை ரத்து செய்யுமாறு கோரி உயர் நீதிமன்றில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த 22ஆம் திகதி புதிய பழைய பாடத் திட்டங்களின் கீழ் தோற்றிய மாணவர்களுக்கான இஸற் புள்ளிகள் தனித் தனியாக கணிப்பீடு செய்யப்பட்டு வெளியிடப்பட்டிருந்தன.

இந்தப் பேறுபேறுகளை ரத்துச் செய்யுமாறு கோரி 33 மாணவர்கள் உயர்நீதிமன்றில் மனுவொன்றை தாக்கல் செய்துள்ளனர். கொழும்பு, களுத்துறை மற்றும் கம்பஹா போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த மாணவர்களே இவ்வாறு வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு உயர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவுக்கு அமைய வெளியிடப் பட்ட புதிய இஸற் புள்ளிகளினால் தமக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக மாணவர்கள் தெரிவித்தனர். மனு தொடர்பான விசாரணைகள் முடிவடையும் வரையில் மாணவர்களை பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கும் நடவடிக்கைகளை ஒத்தி வைக்குமாறு குறித்த மனுவில் கோரப்பட்டுள்ளது.

(ச)

# மதுபோதை உயிரைப் பறித்தது

கொழும்பு,ஓக.2

வெலிக்கடை, புதிய கொலன்னாவ வீதியில் இருவருக்கு இடையில் ஏற்பட்ட மோதலில் ஒருவர் கத்தியால் குத்தி கொலை செய்யப்பட்டுள்ளார்.

மதுபோதையில் இருந்த இருவருக்கும் இடையில் நேற்று புதன்கிழமை மோதல் ஏற்பட்டுள்ளது.

மோதலில் கத்திக் குத்துக்கு இலக்காகி கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட 44 வயதுடைய நபர் உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் காயமடைந்த நபர் பொலிஸாரின் பாதுகாப்பின் கீழ் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

வெலிக்கடை பொலிஸார் மேலதிக விசாரணைகளைமேற்கொண்டு வருகின்றனர். (ச)

# உயர்கல்வி குறித்து தெளிவற்ற நிலை

## பல்கலை விரிவுரையாளர்கள் சங்கம்

கொழும்பு, ஓக.2

உயர் கல்வி அமைச்சருக்கும், அரசுக்கும் நாட்டின் உயர்கல்வித்துறையின் முக்கியத்துவம் புரியவில்லை எனப் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்கங்களின் சம்மேளனம் குற்றம் சுமத்தியுள்ளது.

தமது பிரச்சினைக்கு தீர்வை வழங்குவதற்கோ, கலந்துரையாடல்களை மேற்கொள்வதற்கோ அரசு நடவடிக்கை எடுக்கவில்லை என்று குறித்த சங்கத்தின் தலைவர் நிர்மால் ரஞ்சித் தேவசிறி தெரிவித்தார்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்களினால் ஆரம்பிக்கப்பட்ட தொடர்ச்சியான பணிப் புறக்கணிப்புக்குக் கிடைத்த தீர்வு என்னவென்று செய்தியாளர்கள் அவரிடம் எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டின் உயர்கல்வி அமைச்சர் என்ற வகையில் அவர் தெரிவிக்கும் விடயங்கள் உயர்கல்வித்துறையைச் சேர்ந்த எங்களுக்கும், ஏனைய தரப்பினருக்கும் அவதானிக்க வேண்டிய காரணங்களாக இருக்கின்றன.

இந்தப் போராட்டத்தை நடத்தி நாங்களே வேண்டா வெறுப்புடன் அதனைக் கைவிட்டு விடுவோம் என்று அவர்கள் நினைக்கிறார்கள்.

ஆனால் நாங்கள் அதனை அவ்வளவுஇலகுவாககைவிடப் போவதில்லை- என்றார்.

(ச)

# நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை; வெளிநாட்டு தூதர்களுக்கு விளக்கம்

கொழும்பு, ஓக.2

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை தொடர்பில் வெளிநாட்டு தூதர்களுக்கு விளக்கமளிக்கும் செயலமர்வு நடைபெற்றுள்ளது.

இலங்கைக்கான வெளிநாட்டுத் தூதர்கள் உள்ளிட்ட பல பிரமுகர்களுக்கு இவ்வாறு விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. இந்த விசேட செயமர்வு நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை வெளிவிவகார அமைச்சில் நடைபெற்றுள்ளது.



வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோரால், கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் இறுதி அறிக்கை பரிந்துரைகள், தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் பரிந்துரைகள் போன்றன தொடர்பில் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளன.

நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தும் நடவடிக்கைகளை இலங்கை அரசு தொடங்கியுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் தெரிவித்தார்.

குறுகிய காலத்தில் நடைமுறைப்படுத்தக்கூடிய பரிந்துரைகள், நீண்டகாலத்தில் நடைமுறைப்படுத்தக் கூடிய திட்டங்கள் என்று பிரிக்கப்பட்டு பணிகள் தொடங்கியுள்ளதாக அவர் கூறினார்.

இலங்கையில் இராணுவத்துக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் 2009ஆம் ஆண்டில் நடை பெற்ற இறுதிக்கட்டப் போரில் இரு தரப்புமே போர்க் குற்றங்களில் ஈடுபட்டதாக ஐ.நா. மனித உரிமைகள் சபையின் அறிக்கை குற்றஞ்சாட்டியது.

இதுகுறித்து விசாரித்து நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை அரசை உலக நாடுகள் வலியுறுத்தி வந்தன. போரின்போது நிக்ழ்ந்த மனித உரிமை மீறல்கள் தொடர்பான அனைத்துக் குற்றச்சாட்டுகளையும் விசாரிக்குமாறு இலங்கையிடம் ஐக்கிய நாடுகள் பொதுச்செயலர் பான் கி-மூனின் நிபுணர் குழு வும் வலியுறுத்தியது.

இந்த நிலையில் குறித்த பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தும் நடவடிக்கைகளை இலங்கை அரசு தொடங்கியுள்ளதை இலங்கைக்கான வெளிநாட்டுத் தூதர்களுக்கு அரசு விளக்கி உள்ளது.

(ச)

# கைத்தொலைபேசிப் பாவனையால் அதிகம் பாதிக்கப்படுவது...

# ஆண்களா? பெண்களா?



(சென்றவாரத் தொடர்ச்சி)

பெண் தன் கன்னித்தன்மையை, கல்வியை, சகலதையும் இழந்து நிற்க, ஆண் தொலைபேசித் தொடர்போடு சேர்த்து சகல உறவையும் துண்டித்து விடுவான்.

மற்றொரு வகையில், பெண்ணுக்கு ஆசை வார்த்தைகள் காட்டி பூங்காவிற்கோ, வேறு தனி இடத்துக்கோ அழைத்துச் சென்று ரகசியமாக அவள் உரையாடலைப் பதிவு செய்வது, அந்தரங்கமாக அவளை ஒளிப்படம் எடுப்பது மட்டுமல்லாது, அவற்றைத் தனது நண்பர்களின் கைத்தொலைபேசிக்கு அனுப்புவதும், இணையத் தளத்தின் முகப்புத்தகத்தில் தரவேற்றம் செய்வதுமான கீழ்த்தரமான செயற்பாடுகளும் நடைபெறுகின்றன.

அது மட்டுமல்ல, குறித்த பெண்ணிடமோ அவள் பெற்றோரிடமோ ஒளிப்படங்களைக் காட்டி, மிரட்டி பணம் பறிக்கும் மோசடியோடு, அந்தப் பெண்ணின் வருங்காலக் கணவனிடம் அவற்றைக் காண்பித்து, அவள் எதிர்காலத்தையே சூனியமாக்கும் நிகழ்வுகளும் நடைபெறுகின்றன.

சிலர், தனிப்பட்ட குரோதம் காரணமாக பெண்ணைத் தொலைபேசியில் தனி இடத்துக்கு அழைத்து, கொலை கூட செய்து விடுகிற நிலையையும் அறிகிறோம். கைத்தொலைபேசியை ஒரு சில ஆண்கள் விளையாட்டுப் பொருளாக பாவித்து, தமக்கு வேண்டாத பெண்களுக்கும், குடும்பத்தவர்களுக்கும், வேண்டாத வேளைகளில், வேண்டாத செய்திகளை குறுஞ்செய்திகளாக அனுப்பி, விபரீத விளைவுகளை ஏற்படுத்தி பல பேர் வாழ்க்கையோடு விளையாடுகின்றனர். மாணவிகள் இளம் வயதில் இந்த கைத்தொலைபேசி மாயையில் மூழ்கி ஒருவாறு காதலில் வெற்றியடைந்தாலும், குபேர வாழ்வை வாழ்ந்தாலும்கூட, ஒரு காலகட்டத்தில் தாம் இழந்து விட்ட கல்விக்காக வருந்தாமல் இருக்கப் போவதில்லை.

அடுத்தவர் நாட்குறிப் பேட்டை, கடிதத்தை மற்றவர் படிப்பது அநாகரிகம் என்ற ஒரு நல்ல பண்பு நம்மிடையே பேணப்பட்டு வந்தது. ஆனால் இன்று இந்தப் பண்பு காலாவதியாகி, கைத்தொலைபேசியில் ஒருவருக்கு வரும் செய்திகளை, இன்னொருவர் திருட்டுத்தனமாகப் படிப்பதும், அடுத்தவரின் நெருக்கமான தொலைபேசி இலக்கங்களைத் திருடி அவர்களுடன் தொடர்பு வைத்து, மற்றவரின் அந்தரங்கங்களை அறிவதும் வழக்கமாகி, இதன் மூலம் பல விபரீத விளைவுகளை ஏற்படுவதையும் அறியக் கூடியதாக உள்ளது. இன்று பெரும்பாலான குடும்பங்க ளில் சிக்கல்கள் ஏற்படவும், பல இளம் தம்பதியினர் விவாகரத்துக் கோரி நிற்பதற்கும் சூத்திரதாரிகள் இந்த கைத்தொலைபேசிகளே! மொத்தத்தில் இன்று இந்த கைத்தொலைபேசி இளம் சமூகத்தினருக்கு ஒரு தொல்லை பேசியாகவே மாறியிருக்கிறது. ஆண்கள் இதன் பாவனையால் பாதிக்கப்பட்டாலும் நாளடைவில் திருந்தி வாழ இடமுண்டு. ஆனால் பெண்கள் பாதிக்கப்பட்டால் அது அவர்களின் எதிர்காலத்தையே பாதிப்பதோடு எமது சமூக அமைப்பில் பெரும் சீரழிவுகளுக்குள்ளாகி நிற்கவும் நேரிடும்.

எனவே இந்த நிலை மாறுவதற்கு கைத்தொலைபேசியின் தவறான பாவனை பற்றிய விழிப்புணர்வு சமூகத்தில் வாழும் அனைவருக்கும் அவசியமானது. குறிப்பாக பெண்களும் பெண்களைப் பெற்றவர்களும் மிக மிக அவதானமாக இருக்க வேண்டும். பெண்கள் பெரிதும் தங்களுக்குத் தாங்களே ஒரு எல்லை வகுத்து வாழ வேண்டும் இல்லாவிடில் வேலி கூட பயிரை மேய்ந்து விடும் நிலைக்கு ஆளாக நேரும். பெண்களின் பலவீனம்தான் ஆண்களின் பலமாகிறது என்பதைப் பெண்கள் கவனத்தில் எடுக்க வேண்டும் .

இன்னும், ஆண்கள் ஒவ்வொருவரும் பெண்களிடத்தில் தவறிழைக்க முற்படும்வேளை, அந்த இடத்தில் தன் தாயையோ, சகோதரியையோ நினைத்துப் பார்த்து அந்த தீய செயலைக் கைவிட வேண்டும். இல்லையேல் ஆண்கள் கைகளில் கைத் தொலைபேசிகள் மட்டுமல்ல, பெண்களும் கூட குரங்கின் கைப் பூ மாலைகள்தான். ✱

ஜானா
யாழ்ப்பாணம்.

## முயற்சி செய்...

சாதனைகள் புரிய
சோகங்களை களைந்து கொள்!
உனது வெற்றிக்கான
படிகளை நீயே
அமைத்துக் கொள்!
முட்களைக் கடந்து செல்
பூக்கள் உனக்காக மலரும்
சிந்திப்பதை நிந்தித்து விடாதே!
நாளைய உன் வெற்றி
இன்றே மழுங்கடிக்கப்பட்டு விடும்
தேடல்கள் உனக்கு புதிது
தேடலை விருத்தி செய்!
கனவுகள் கூட நனவாகலாம்
நாளை அல்ல
இன்றே முயற்சி செய்!

க.லக்ஸனா,
கெற்பேலி மத்தி,
மிருசுவில்.



## விமர்சனம்

நீங்களும்
எழுதலாம்....

கைத்தொலைபேசி
பாவனையால்
அதிகம் பாதிகப்படுவது
ஆண்களா?
பெண்களா?

உங்கள் காரணங்களை
விமர்சனப் பகுதியில்
முன் வைத்து
விமர்சியுங்கள்.

தரமான விமர்சனங்கள்
பிரசுரமாவதோடு சிறந்த
விமர்சனங்களுக்குப்
பரிசுகளும் வழங்கப்படும்.



## மக்கள் நலம் பேணி வாழ்வோம்

சமூகமானது பல மனிதர்கள் சேர்ந்து வாழ்தலைக் குறிப்பதாகும். அதாவது பல மனிதர்கள் ஒன்று சேரும்போது ஏற்றத்தாழ்வுகள், பகைமை, பொறாமை, எரிச்சல் போன்றவை ஏற்படுகின்றன. சில மனித சமூகங்களில் நட்பு, மகிழ்ச்சி, அன்பு, பற்று, பாசம், நல்லெண்ணம், ஒற்றுமையுணர்வு, விட்டுக் கொடுத்தல் போன்றனவும் காணப்படுகின்றன. இவ்வாறு மனித சமூகங்களில் பல பிரச்சினைகளைச் சந்திக்க வேண்டிய சூழ்நிலைகள் ஏற்படுகின்றன. எனவே ஒவ்வொரு மனிதர்களும் தம் தேவைகளை நிறைவு செய்து திருப்தியாகவும், மகிழ்ச்சியாகவும் வாழ்தல் சமூகமாக கூடி வாழ்வதில்தான் தங்கி உள்ளது. எனவே ஒவ்வொருவரும் தமக்காக மட்டும் அல்ல பிறரின் நன்மைக்காகவும் வாழும் போதுதான் இவ்வாறான பிரச்சினைகளைச் சமூகத்தில் தீர்க்க முடிகின்றது.

சமூக வாழ்வு சீராக நடைபெற, தியாகங்கள் முக்கிய இடம் வகிக்கின்றன. அதாவது ஆற்றல் படைத்த மனிதனைத் தவிர, வேறு எந்த உயிரினத்தினாலும் தியாகம் செய்ய முடியாது. இத்தகைய பண்புகள் இன்று எமது சமுதாயத்தில் அருகிக் கொண்டு போவதைக் காணக் கூடியதாகவுள்ளது.

அயலவர்களுடன் நல்லுறவு பேணுவது குறைவு, தங்களுடைய வீட்டுக் கழிவுகளை முன்வீட்டு வாசலில் கொண்டு போய்க் கொட்டுதல், இரவில் சத்தம் போட்டு அமைதியை சீர்குலைப்பது என்று பலவற்றைச் செய்கின்றோம். கல்வி பயிலும் மாணவர்கள், தூக்கம் இன்றித் தவிக்கும் நோயாளிகள், வயோதிபர்கள் போன்றவர்கள் இந்த சமூகத்தில் உள்ளார்கள் என்பதை மறந்து பல வழிகளில் இடையூறு தரும் செயல்களைச் செய்வதால் அவர்கள் அல்லல் படுவதை அவர்கள் உணர்வதில்லை. எனவே இத் தகைய செயல்களை ஒரு கணம் சிந்தித்து செயல்படுவார்களாயின் சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகளை சுலபமாக தீர்க்க முடியும். ஒவ்வொரு வரும் தம்மைப் போல, பிறரையும் நேசிக்கும் மனப்பாங்கினைப் பெற்றுவிட் டால் சமுதாயத்தில் பல கோடி நன்மை கள் உண்டாகும் என்பதில் ஐயமில்லை.

சி. கங்கானந்தி
5 ஆம் வட்டாரம்
நயினாதீவு.

## அண்ணனின் பாசத்துக்கு ஏங்கும் தங்கை நான்...

தாய் என்னும் கோயிலில்
நாம் இருவரும் - பிறந்தோம்
அன்னை என்னும் கருவறையில்
சிசுவாய் வளர்ந்தோம்....
அண்ணன் என்னும் பாசத்தை
நான் உன்னிடம் கண்டேன்
தங்கை என்னும் பாசத்தை
நீ என்னிடம் கண்டாயா?
அண்ணன் என்று கூப்பிட
உரிமை இருந்தும் தயக்கம்
அடைந்து கூப்பிட முடியாமல்
ஏங்கித் தவிக்கின்றேன்!
தங்கை செய்யும் பணியாக
நாள்தோறும் - நான் செய்கின்றேன்
அண்ணன் செய்யும் பணியாக
நீ எது செய்கின்றாய்...
யார் வைத்த கண்ணோ - நாம்
இருவரும் கதைக்காமல் இருக்கின்றோம்
யார் செய்த வேலையோ - நம்
பாசத்தை இழந்தோம்
இன்னும் ஒரு பிறவி - பிறக்க
வேண்டும் இந்த - தாயின்
வயிற்றிலே நாம் அண்ணன் தங்கையாக
வாழ்ந்து காட்ட வேண்டும்
பாசத்தையும் உறவையும் உரிமைகளையும்
இழந்து அண்ணா என்னும்
பாசத்திற்காக ஏங்கித் தவிக்கும்
உன் அன்புத் தங்கை நான்

சரண்யா குவேந்திரன்
யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி
12 $A_2$(2013)

## சாதனை படைத்திடுவோம்

காரியத்தில் இறங்கிடுவோம்
தீவிரமாய் செயற்படுவோம்
அச்சத்தை அகற்றிடுவோம்
ஆணவத்தை விரட்டிடுவோம்
அயராது உழைத்திடுவோம்
ஆற்றலை வளர்த்திடுவோம்
சுயநலம் பேணாமல்
இதயத்தை கவர்ந்திடுவோம்
இன் முகம் காட்டிடுவோம்
தன் மானம் காத்திடுவோம்
சோதனைகளை தாண்டிடுவோம்
சாதனைகள் படைத்திடுவோம்
சிரமத்தை தான் மறந்து
சிகரத்தை தொட்டிடுவோம்!



சா.ஜிந்துஜா
கோண்டாவில்

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.


பெயர் :-........................

முகவரி :- ........................

........................................

........................ ........................
திகதி கையொப்பம்

'இளவல்கள் வட்டம்',
'உதயன்', 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன்கூடிய காலநிலை நிலவும்.

# பாடசாலை வளவைப் புனரமைக்கும் திட்டப் பணிகள் நாளை ஆரம்பம்

யாழ்.மாவட்டத்தில் பாடசாலைகள் புனரமைத்தல் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் பிரதேச ரீதியான ஆரம்ப நிகழ்வுகள் நாளை மு.ப. 10 மணிக்கு நடைபெறவுள்ளன.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மஹிந்த சிந்தனை எதிர்கால நோக்குக்கு இணங்க எதிர்கால இலங்கையின் அறிவை மையமாகக் கொண்ட அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக 5 ஆயிரம் ஆரம்பப் பாடசாலைகளையும் ஆயிரம் இடைநிலைப் பாடசாலைகளையும் புனரமைத்தல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வலய ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் ஆரம்ப நிகழ்வுகள் நடத்தப்படவுள்ளன.

நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ள புனரமைப்பு வேலைகள் எதிர்வரும் ஒகஸ்ட் 31 ஆம் திகதிக்குள் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். ஒவ்வொரு பாடசாலையின் புனரமைப்பு வேலைகளுக்கும் தலா 5 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரின் தலைமையில் ஆரம்ப நிகழ்வுகள் நடத்தப்படவுள்ளது.

நிகழ்வில் பிரதேச செயலர், வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் பெற்றோர், பாடசாலை அபிவிருத்திச் சபையினர், கிராம அலுவலர் உட்பட பொதுமக்களை கலந்துகொள்ள ஏற்பாடுகள் செய்யுமாறும் அன்றையதினம் தோட்டப் பாடசாலைகளை உருவாக்கவும் பாடசாலை வேலி மற்றும் பாடசாலையைத் துப்புரவு செய்யவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளுமாறு பொருளாதார அமைச்சின் செயலர் அறிவித்துள்ளார். (வ-9)

## பணி செய்வதற்கு ஞானமே அடிப்படை

கர்மம் அதாவது, பணி செய்தலுக்கு ஞானம் அல்லது அறிவே அடிப்படையாகும். அறிவு பெறுதலுக்கும் கர்மம் செய்தல் அடிப்படையாகும். இவை இரண்டும் இணைந்தே சேவையாகப் பரிணமிக்கிறது. சித்த சுத்தியுடன் செய்யப்படும் நற்பணியே ஆத்மானந்தத்தைத் தரவல்லது. செய்ய வேண்டிய கடமையைச் செய்தே தீரவேண்டும். நல்ல நோக்கத்துடனே நல்ல முறையிலே பணி செய்தல் வேண்டும். இந்தப் பணி என்னால் செய்யப்பட்டது என்ற அகங்கார உணர்வு கூடாது. இந்தப் பணியினால் வரும் லாபத்தை அல்லது நற்பயனை நானே பெறவேண்டும் என்று நினைப்பதும் கூடாது. இந்தச் சுயநல உணர்வு மனிதனைப் பற்றுதலில் பிணைத்து விடும்.

நன்றி
தெய்வீகம் மலரும் பொழுது



சாயி சிந்தனை

## வீதிகள் புனரமைப்பு

வலி.தென்மேற்கு பிரதேச சபையினரால் பிரதேச சபைக் குட்பட்ட வீதிகளை அபிவிருத்தி செய்யும் பணிகள் துரித கதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மாதகல் புக்கப்புலோ வீதி, பிரான்பற்று ஆஸ்பத்திரி வீதி, வரகு சாட்டி வீதி என்பன பிரதேச சபையின் சொந்த நிதி மூலம் புனரமைக்கப்பட்டுவருகின்றன. கட்டுடை கேலன் காம வீதி மீளெழுச்சித்திட்டத்தின் மூலமும், உந்துசாந்தை வீதி நெல்சிப்திட்டத்தின்மூலமும், உந்து பாலக்கட்டை வீதி யு.என்.டிபி நிறுவன நிதி அனுசரணையுடனும் புனரமைக்கப்பட்டு வருகின்றன. (வ-130)

## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் 'சோலைமலையில் நின்ற பெருமாள்' எனும் தலைப்பில் சைவப் புலவர் நித்தியதசிதரனின் சிறப்புச் சொற்பொழிவு நடைபெறும். கலை நிகழ்வுகளில் சித்தங்கேணி சிவசக்தி அறநெறிப்பாடசாலை, மருதனார்மடம் ஆஞ்சநேயர் அறநெறிப்பாடசாலை, வேலணை ஐயனார் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் நிகழ்வுகளும், சிறப்பு நிகழ்ச்சியாக கலாவித்தகர் விதுஷா கோபிநாத்தின் வீணைக் கச்சேரியும் நடைபெறும். (3-7)

* * *

நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நடத்தும் தெய்வீக இசையரங்கின் பத்தாம் நாள் நிகழ்வு மாலை 6.45 மணிக்கு நல்லூர் துர்க்காதேவி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதில் ஆர். ராதாகிருஷ்ணன், திருமதி சைந்தவி நிஸாகரன், எஸ் துரைராஜா, பிரமஸ்ரீ சிவசுந்தர சர்மா, சதாவேல் மாறன் ஆகியோர் இணைந்து நடத்தும் வயலின் கச்சேரி நடைபெறும். (3-14-86)

* * *

நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு நல்லூர் சைவ மகா சபை நடத்தும் தெய்வீக தொடர் இசை பேருரையில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 6.30 மணிக்கு பிரம்மஸ்ரீ நித்தியானந்த சர்மா நிகழ்த்தும் 'கந்த புராணம்' சொற்பொழிவு நல்லை ஆதின குருமூர்த்த ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (வ-13)

## உற்சவ காலத்தை முன்னிட்டு புதிய நடைமுறை

நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு அடியார்களின் நலன் கருதி தனியார் பாதுகாப்பு நிலையங்களை நடத்துபவர்களிடமிருந்தோ, காணி உரிமையாளரிடம் இருந்தோ எவ்வித கட்டணமும் அறவிடப்படமாட்டாது. அதேநேரம் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் சைக்கிள் பாதுகாப்பு நிலையங்களில், தலைக்கவசம் உட்பட மோட்டார் சைக்கிளுக்கு பத்து ரூபாவும் அறவிடப்படும். மேலதிகமாகப் பணம் அறவிடும் சைக்கிள் பாதுகாப்பு நிலையங்களின் அனுமதி உடனடியாக ரத்துச் செய்யப்படுமென யாழ்.மாநகர சபை முதல்வர் அறிவித்துள்ளார். (3)

## ரோட்டரிக்கழகத்துக்கு ஐ.நா.சபையில் நிரந்தரப் பிரநிதித்துவம்



சர்வதேச ரோட்டரிக்கழகம் ஐக்கிய நாடுகள் சபையின் நிரந்தர உறுப்புரிமையுடைய தன்னார்வத்தொண்டு நிறுவனமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

ஐ.நாவின் சமூக பொருளாதாரச் சபையில் சர்வதேச ரொட்ரிக்கழகத்துக்கு இந்த நிரந்தரப்பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டுள்ளது.

ஐ.நா. சபையின் வரலாற்றில் தொண்டு நிறுவனம் ஒன்றுக்கு நிரந்தர உறுப்புரிமை வழங்கப்பட்டிருப்பது இதுவே முதன்முறையாகும்.

சர்வதேச ரீதியில் சமாதனத்துக்கான செயற்றிட்டங்களை முன்னெடுத்து சமூகங்களுக்கு இடையேயான புரிந்துணர்வுகளை வலுப்படுத்தும் வகையில் ஒவ்வொரு நாட்டிலும் அதன் மாவட்ட ரீதியான செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தி வருகின்றமையைக் கௌரவித்தே சர்வதேச ரோட்டரிக்கழகத்துக்கு இந்த உயரிய அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## தீர்த்தத் திருவிழா

யாழ்ப்பாணம், ஒக2

நவாலி கதிர்காம முருகன் ஆலய தீர்த்தத் திருவிழா இன்று காலை 7 மணிக்கு இடம்பெறும். மறுநாள் காலை வைரவர் பூசையும் மடையும் இடம்பெறும். அன்றைய தினம் இரவு ஆலய பிரதம குரு கந்த சிரோன் மணி மா.பத்மநாதன் தலைமையில் ஆலயத் தொண்டர்களும் பஜனை குழுவினரும் சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர். (3-50)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் மலர்வு
17 ★ 01 ★ 1935

விண்ணில் மலர்வு
26 ★ 07 ★ 2010

திதி : 02.08.2012

அமரர் **செல்லையா வேலும்மயிலும்**

(அல்வாய் தெற்கு, யாழ்ப்பாணம்)

எங்கள் அன்பு அப்பாவின் விட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நோர்வேயில் மகனின் இல்லத்தில் நடைபெறும்.

இன்றையதினம் அல்வாய் குமிழடிப்பிள்ளையார் ஆலயத்தில் இடம்பெறும் எங்கள் அன்பு அப்பாவின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அன்னதான நிகழ்விலும் இணைந்து சிறப்பிக்கும் வண்ணம் உற்றார், உறவினர், அயலவர்கள், நண்பர்களை அன்புடன் வேண்டுகின்றோம்.

எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்,
மக்கள், மருமக்கள், பேரமக்கள்

(சி/1840)(6-8)

## கடை விற்பனைக்கு

மன்னார் நகரில் பொலிஸ் நிலைய வீதியில் அமைந்துள்ள 3 மாடிக்கடை விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு :
077 8421359,
023 3231216
(சி/1780)(6-8)

## திருமண சேவை

83 பூரட்டாதி - 2 சூரியச் செவ்வாய் பாவம் 57
MSC, ஆஸ்திரேலியா P.R.
74 பூராடம் 6 இல் சூரியன் செவ்வாய் பாவம் 7½, கனடா P.R.
78 பூரம் சூரியச்செவ்வாய் 4இல் பாவம் 29, லண்டன் P.R.
மணமகன்களுக்கு உயர்குல மணமகள்கள் தேவை.
துர்க்கா திருமணசேவை
021 321 1814, 077 8185 978
Thurka 32 @ gmail .com
(21213) (45.6)

## காணி விற்பனைக்கு

நாவற்குழி - கைதடி A-9 வீதியில் தென்னம்பிள்ளை, நன்னீர்க் கிணற்றுடன் 8 பரப்பு உறுதிக் காணி விற்பனைக்குண்டு.
பிரித்தும் கொடுக்கப்படும்.
தொடர்பு : 021 2223385, 077 3101274
(21214)(6-8)

## மரண அறிவித்தல்

### குமாரசாமி கமலநாதன்



காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும், குப்பிளானை வசிப்பிட மாகவும் கொண்ட குமாரசாமி கமலநாதன் நேற்றுமுன்தினம் (31-07-2012) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பண்டிதர் குமாரசாமி -சுகிர்தம் தம்பதியரின் அன்பு மகனும் சாரதாதேவியின் அன்புக் கணவரும் சண்முகநாதன், மதிவதனி, வைகுந்தநாதன், ஜெயவதனி, கைலைநாதன், கமலவதனி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுதர்சன்(கனடா), சுதர்சினி(ஜேர்மனி), பிருந்தினி (கனடா), சுகந்தினி(லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காயத்திரி, ஜெயா, ஸ்ரீதன், ஜெனார்த்தனன், ஆகியோரின் மாமாவும், சஜித், ஜீவித், ஆர்த்திகா, குமரன், ஜெனிஸ், சுபேஷ் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03-08-2012) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12 மணிக்கு தகனக்கிரியைக்காக காடாகடம்பை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குரும்பசிட்டி வீதி,
குப்பிளான் வடக்கு,
குப்பிளான்.

தகவல்
குடும்பத்தினர்

(21219)(5-6)

**கோழிக்குஞ்சு விநியோகம்**

BAHIRA No -1 புறொயிலர் குஞ்சுகள், நல்லின சிவப்பு, வெள்ளை பேட்டுக்குஞ்சுகள் விற்பனைக்குண்டு.
ராஜீவ், நவாலி வீதி, ஆனைக் கோட்டை.
T.P : 077 6090926
(21225)(6-8)

**Promotional Field Officers**
**சந்தைப்படுத்தல் பிரதிநிதிகள் தேவை**

சந்தைப்படுத்தலில் அனுபவம் உள்ளோர் மற்றும் காப்புறுதி முதலானவற்றில் தற்போது பணிபுரிபவர்கள் பகுதி நேரமாகவும் பணி புரியலாம்
நிலையான ஊதியமும் ஊக்குவிப்பு தொகையும் உண்டு
இன்றும் நாளையும் காலை 9 முதல் 10 வரை நேரில் வரலாம்

**Jaffna Directory**
182, Stanley Road, Jaffna
077 520 2747
(21215)(6-8)


# கீரிமலை மயானம் மக்கள் பாவனைக்கு 22 வருடங்களின் பின் திறக்கப்பட்டது

யாழ்ப்பாணம்,ஓக.2

கீரிமலை செம்பொன் வாய்க்கால் மயானம் 22 வருடங்களின் பின்னர் தகனக் கிரியைகளுக்காகத் திறக்கப்பட்டுள்ளது.கீரிமலை நகுலேஸ்வர தேவஸ்தான ஆதீன கர்த்தா ராஜராஜஸ்ரீ கு.நகுலேஸ்வரக் குருக்களின் துணைவியார் வேதநாயகி அம்பாளுடைய இறுதிக் கிரியைகளுக்காகவே இம்மயானம் திறக்கப்பட்டுள்ளது.இதற்கென நேற்றுமுன்தினம் இரவு புல்டோசர்களின் உதவியுடன் படையினர் மயானப் பகுதியைத் துப்புரவு செய்ததுடன் மயானத்துக்குச் செல்லும் பாதையையும் செப்பனிட்டனர்.

மறைந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவதாசனின் இறுதிக்கிரியைகளுக்காக இம்மயானம் திறக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்ட போதும் படையினர் அதற்கு அனுமதி வழங்கவில்லை.இதனால் கீரிமலை அந்தியேட்டி மடத்துக்கு அருகில் கடற்கரையில் அவரது உடல் தகனம் செய்யப்பட்டது.அதன் பின்னர் பொதுமக்கள் இருவரது உடல் இறுதிக் கிரியைக்காக கடற்கரை வழியாக எடுத்துச் செல்லப்பட அனுமதிக்கப்பட்டதுடன் இம்மயானத்துக்கு அருகில் கடற்கரையில் தகனம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மறைந்த வேதநாயகி அம்பாளுக்கு அரசியல்வாதிகள்,படையினர்,சமயத் தலைவர்கள், சமூகத் தலைவர்கள் எனப் பலரும் தமது அஞ்சலிகளைச் செலுத்தினர்.(16 38)


**வீடு விற்பனைக்கு**

உரும்பிராய் - கோப்பாய் வீதியில், ஞான வைரவர் கோயிலுக்கு அருகில் நான்கு பரப்புக்காணியில் அமைந்துள்ள வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு : 077 1618361
(சி/2049)(6-8)


# பருத்தித்துறையில் வீதி அகலிப்பு பணிகள் விரைவில்

வடமராட்சி, ஓக.2

பருத்தித்துறை-யாழ்ப்பாணம் பிரதான வீதி அகலிக்கும் திட்டத்தின் கீழ் பருத்தித்துறை நகரப் பகுதியில் உள்ள வீதி அகலிக்கும் பணிகள் எதிர்வரும் 19 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக யாழ். வீதி அபிவிருத்தி அதிகாரசபையினர் தெரிவித்துள்ளனர்.

கடந்த இரண்டரை ஆண்டுகளுக்கு முன் ஆரம்பமான பருத்தித்துறை-யாழ்ப்பாணம் பிரதான வீதி அகலமாக்கும் பணியில் நெல்லியடி தொடக்கம் கோப்பாய் பிரதேச செயலகம் வரையான 11 மைல் நீளமான வீதி அகலிக்கப்பட்டு 'காப்பெற்' இடப்பட்டுள்ளது.

பருத்தித்துறை நகரப் பகுதியில் துறைமுகம் தொடக்கம் ஓராங்கட்டைச் சந்தி வரையான ஒரு மைல் நீளமான வீதியை அகலிக்க எல்லைகள் அடையாளப் படுத்தப்பட்டுள்ள போதிலும், அந்த எல்லைகளுக்கு அமைய வீடுகளையும், கடைகளையும் பின்நோக்கி நகர்த்தாமையினால் அகலிப்புப் பணி தாமதமடைவதாகவும் அவற்றை பின்நோக்கி நகர்த்தித் தந்து உதவுமாறு யாழ். வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் நடைபெற்ற வீதி அகலிப்புத் தொடர்பான வர்த்தகர்களுடனான கலந்துரையாடலின் போது கோரிக்கை விடுத்துள்ளனர். (3-8)

# மரண அறிவித்தல்

## பொன்னம்பலம் கந்தையா

(நுவரெலியா இராஜலக்ஷ்மி ஸ்டோர் உரிமையாளர்)



தாவடி வடக்கைப் பிறப்பிடமாகவும் நுவரெலியாவை வாழ்விடமாகவும் தற்போது கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் கந்தையா 31.07.2012 அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - முத்துப்பிள்ளை தம்பதியரின் அருமை மகனும், காலஞ்சென்றவர்களான கனகசபை-ராசம்மா தம்பதியரின் மருமகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், தாவடி வடக்கு காலஞ்சென்றவர்களான இராசம்மா, தருமலிங்கம், கனகம்மா ஆகியோரின் சகோதரனும், ராஜலட்சுமி(இளைப்பாறிய ஆசிரியை, தெ/மகாஜன கல்லூரி), சண்முகலிங்கம், காலஞ்சென்ற சுந்தரலிங்கம், பிரேமலட்சுமி(கொ/நல்லாயன் ம.ம.வி.) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ் சென்ற கங்காதரன், சத்தியவதனி, பத்மாவதி, கணேசநாதன் ஆகியோரின் அன்பு மாமனாரும், வானதி, தாரணி, சுகந்தினி, துர்கா, கேதீசன், தரங்கினி, மயூரதி, மயூரி, பவதாரணி, சாகித்தியன் ஆகியோரின் பாசமிகு பேரனும், ரிஷி, மயிலன், கணன், கௌதம் ,ராம்,யாழ்ஸ்ரீ ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் இறுதி அஞ்சலிக்காக இன்று (02.08.2012) வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் பிற்பகல் 2.00மணிக்கு ஆரம்பமாகி பி.ப.4.00 மணிக்கு தகனக்கிரியைக்காக கல்கிசை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

திருமதி இ.கங்காதரன்,
இல.: 28-6/2, மாதங்கஹறவத்தை ஒழுங்கை,
கொழும்பு-06

(சி/1841)(5-6-7)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

# கண்ணீர் அஞ்சலி



ஆத்மஜோதி தியான மணிமண்டபம், ஏழாலை.

E.S.P நாகரட்ணம் அவர்களின் அன்புத்தாயார்

**திருமதி மாணிக்கம் பேரம்பலம்**

அவர்களது மறைவினால் துயரடைந்திருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா எல்லாம் வல்ல ஈழத்துச்சிதம்பரதில்லைக் கூத்தன் திருவடிகள் சேரப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நா. முருகையா, ஊரெழு கிழக்கு, சுன்னாகம்.

(21226) (45.6.7)

# கண்ணீர் அஞ்சலி



**ஸ்ரீமதி வேதநாயகியம்மா நகுலேஸ்வரக்குருக்கள்**

சிவத் தோன்றல் வழிகாட்டியாக, வணங்கும் தலமாக விளங்கும் நகுலேஸ்வரர் புகழ் பரப்பும் நகுலைக்குருவின் அன்புத் துணைவியார் ஸ்ரீமதி வேதநாயகி அம்மா அவர்களின் ஆத்மா சாந்தியடைய ஈழத்துப் பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றான கீரிமலை நகுலாம்பிகா சமேத நகுலேஸ்வரப்பெருமான் கழல்களை 'ஓம் நமசிவாய, சொல்லிப் பிரார்த்திப்போமாக.

(21227) (45-6) ஆத்ம ஜோதி தியான மணிமண்டபம், ஏழாலை.

# கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் விளையாட்டுப் பொறுப்பாசிரியரும், விசேட கல்வி ஆசிரியருமாகிய த.தாசன் அவர்களின் அன்புத்தந்தை

**செல்லப்பா தருமலிங்கம்**

அவர்களின் பிரிவுத் துயரில் மூழ்கியிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

கல்லூரிக்குடும்பம்
யா/ புனித ஹென்றியரசர் கல்லூரி, இளவாலை.

(21218) (45-6)

# கைகலப்பில் ஈடுபட்டவர் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், ஓக.2

கோயில் திருவிழாவில் கைகலப்பில் ஈடுபட்ட இரு கோஷ்டியினரில் ஒருவர் தலையிலும் மார்பிலும் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

மற்றைய தரப்பைச் சேர்ந்த 6 பேர் ஊர்காவற்றுறை நீதிமன்ற உத்தரவுக்கமைய நாளை வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் அனலைதீவு நயினாகுளம், கூழாவடியுறை பூர்ணாதேவி புஸ்பகலாதேவி ஆலய சப்பரத்திருவிழாவான கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

பழைய பகை காரணமாக இரு தரப்பினரிடையே ஏற்பட்ட கைகலப்பில் பொல்லால் தாக்கப்பட்டு காயமடைந்தவரே வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவரும் அனலைதீவைச் சேர்ந்த 6 பேரையுமே விளக்க மறியலில் வைக்க ஊர்காவற்றுறை நீதிவான் ஆர்.எஸ்.மகேந்திரராஜா உத்தரவிட்டார். (4)


**புலமைச்சுடர் நடத்தும்**

**யாழ். வடமராட்சியில்...**
யா / உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

உதயன் சுடர் ஒளி
நாளிதழ்களின் ஊடக அனுசரணையுடன்

**தரம் 5 மாணவர்களுக்கான இலவசக் கருத்தரங்கு**

வளவாளர்கள்
திரு. N. S. தீபன் (வவுனியா)
B.A, PG Dip in Edu, Dip in Teach
திரு. Y. தயாளன் (கண்டி)
Dip in Teach

காலம் 05.08.2012 (ஞாயிற்றுக்கிழமை)

நேரம் காலை 9 மணி தொடக்கம் பி. ப 4.00 மணி வரை

புலமைசாலி அங்கத்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

மேலதிக தொடர்புகளுக்கு :
071 6850005,
071 6182182

அனைத்து மாணவர்களும் பங்கேற்று பயனடையுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.
(சி/1835)(6-8)

### கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில்

# 35 ஆயிரத்து 953 பொதுமக்கள் இதுவரை மீளக்குடியமர்ந்தனர்

*வவுனியா, ஓக.2*

*முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கரைதுறைப் பற்று பிரதேச செயலர் பிரிவில் கடந்த ஜூன் 30 ஆம் திகதி வரை 11 ஆயிரத்து 348 குடும்பங்களைச் சேர்ந்த 35ஆயிரத்து 953 பேர் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர். இந்தத் தகவலை முல்லைத்தீவு மாவட்ட செயலக புள்ளி விவரங்கள் வெளிப்படுத்தி உள்ளன.*



இறுதிப் போரின் போது இடம்பெயர்ந்து உறவினர்கள், நண்பர்கள் மற்றும் நலன்புரி நிலையங்கள் ஆகியவற்றில் இருந்த மக்கள் கரைதுறைப்பற்று பிரதேச பிரிவிலுள்ள 43 கிராம அலுவலர் பிரிவுகளில் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

வற்றாப்பளையில் 583 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 841 பேரும், முல்லைத்தீவு நகரில் 224 குடும்பங்களைச் சேர்ந்த 733 பேரும், முல்லைத்தீவு மத்தியில் 153 குடும்பங்களைச் சேர்ந்த 466 பேரும், முல்லைத்தீவு தெற்கில் 234 குடும்பங்களைச் சேர்ந்த 699 பேரும், கள்ளப்பாடு வடக்கில் 189 குடும்பங்களைச் சேர்ந்த 578 பேரும், கள்ளப்பாடு தெற்கில் 499 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 453 பேரும், வண்ணான் குளத்தில் 236 குடும்பங்களைச் சேர்ந்த 715 பேரும், முள்ளியவளை மேற்கின் ஒரு பகுதியில் 574 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 768 பேரும், புதலிக்குடாவில் 205 குடும்பங்களைச் சேர்ந்த 617 பேரும், செல்வபுரத்தில் 446 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 356 பேரும்,-

முள்ளியவளை கிழக்கில் 400 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 231 பேரும், உப்புமாவெளியில் 366 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 248 பேரும், மணற்குடியிருப்பில் 113 குடும்பங்களைச் சேர்ந்த 292 பேரும், முள்ளியவளை தெற்கில் 147 குடும்பங்களைச் சேர்ந்த 462 பேரும், தண்ணீரூற்று மேற்கில் 276 குடும்பங்களைச் சேர்ந்த 821 பேரும், குமுழமுனை மேற்கில் 162 குடும்பங்களைச் சேர்ந்த 455 பேரும், கணுக்கேணி கிழக்கில் 460 பேரும், கணுக்கேணி மேற்கில் 239 குடும்பங்களைச் சேர்ந்த 681 பேரும், முள்ளியவளை வடக்கில் 341 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 68 பேரும், அலம்பில் வடக்கில் 147 குடும்பங்களைச் சேர்ந்த 487 பேரும் அலம்பில் தெற்கில் 285 குடும்பங்களைச் சேர்ந்த 968 பேரும்-

செம்மலையில் 322 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 4 பேரும், கிச்சிராபுரத்தில் 679 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 582 பேரும், கோயில் குடியிருப்பில் 79 குடும்பங்களைச் சேர்ந்த 219 பேரும், சிலாவத்தையில் 442 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 357 பேரும், முள்ளிவாய்க்கால் கிழக்கில் 198 குடும்பங்களும் கொக்கிளாய் கிழக்கில் 174 குடும்பங்களைச் சேர்ந்த418 பேரும், கொக்கிளாய் மேற்கில் 208 குடும்பங்களைச் சேர்ந்த 595 பேரும், சிலாவத்தை தெற்கில் 145 குடும்பங்களைச் சேர்ந்த 431 பேரும், நீராவிப்பிட்டி கிழக்கில் 554 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 968 பேரும், நீராவிப்பிட்டி மேற்கில் 374 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 494 பேரும், மதவள சிங்கன் குளத்தில் 181 குடும்பங்களைச் சேர்ந்த 603 பேரும், மாமூலையில் 352 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 117 பேரும்-

கருநாட்டுக் கேணியில் 224 குடும்பங்களைச் சேர்ந்த 697 பேரும், குமிழமுனை கிழக்கில் 255 குடும்பங்களைச் சேர்ந்த 775 பேரும், குமிழமுனை மத்தியில் 247 குடும்பங்களைச் சேர்ந்த 761 பேரும், தண்ணீரூற்று கிழக்கில் 107 குடும்பங்களைச் சேர்ந்த 357பேரும், செம்மலை கிழக்கில் 67 குடும்பங்களைச் சேர்ந்த 210 பேரும், குமாரபுரத்தில் 332 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 101 பேரும், தண்ணிமுறிப்பில் 86 குடும்பங்களைச் சேர்ந்த 283 பேரும், கொக்குத்தொடுவாய் தெற்கில் 70 குடும்பங்களைச் சேர்ந்த 203 பேரும், கொக்குத் தெடுவாய் வடக்கில் 133 குடும்பங்களைச் சேர்ந்த 416 பேரும், கொக்குத் தொடுவாய் மத்தியில் 118 குடும்பங்களைச் சேர்ந்த 381 பேரும் மீளக் குடியமர்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை புதுக்குடியிருப்பு கோப்பாவில் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக நலன்புரி நிலையத்தில் கரைதுறைப் பற்று பிரதேச செயலகத்தைச் சேர்ந்த முள்ளிவாய்க்கால் கிழக்கு, மேற்கு கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட 206 குடும்பங்களைச் சேர்ந்த 667 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.(ங-க-400)

# செம்மண் குன்றில் இன்று மீள்குடியமர்வு

வவுனியா ஓக.2

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கரைதுறைப் பற்று உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள செம்மண் குன்றுப் பகுதிக்கான மீள்குடியமர்வு இன்று வியாழக்கிழமை இடம் பெறவுள்ளதாக முல்லைத்தீவு மாவட்டச் செயலக வட்டாரங்கள் அறிவித்துள்ளன.

இறுதிக்கட்ட போரின் போது இடம்பெயர்ந்து மனிக்பாம் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள அம்பலவன்பொக்கணை கிராம சேவையாளர் பிரிவிலுள்ள செம்மண்குன்று பகுதியிலேயே மக்கள் மீள்குடியமர்த்தப்படவுள்ளனர்.

மெனிக்பாம் ஆனந்த குமாரசாமி, கதிர்காமர் நலன்புரி நிலையங்களிலுள்ள 38 குடும்பங்களைச் சேர்ந்த 127 பேர் இவ்வாறு மீள்குடியமர்த்தப்படவுள்ளனர்.

இவர்களை மீள்குடியமர்த்துவதற்கான பதிவுகள் தற்போது நலன்புரி நிலையங்களில் மேற்கொள்ளப்படுகின்றன.

இன்று காலை நலன்புரி நிலையங்களில் இருந்து அழைத்துச் செல்லப்படும் இவர்கள் இரணைப்பாலை மகாவித்தியாலயத்தில் தங்கவைக்கப்பட்ட பின்னர் தமது சொந்த இடங்களுக்குச் செல்ல அனுமதிக்கப்படுவர் என்றும் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

(க-400)

# 73 ஆவது ஆண்டில் இலங்கை வங்கி

வவுனியா ஓக.2

இலங்கை வங்கியின் 73 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வுகள் இன்று வியாழக்கிழமை வவுனியா நகர்ப் புறக் கிளையில் காலை 8.00 மணிக்கு இடம்பெறவுள்ளன.


வவுனியாநகர்ப்புறக்கிளையின் முகாமையாளர் எம். றோய் ஜெயக்குமார் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா பொலிஸ் நிலையத் தலைமைப் பொலிஸ் அதிகாரி ரி.எச்.எரிக் எல். பெரேராவும், சிறப்பு விருந்தினராக வவுனியாக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ம.நடராசாவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதேவேளை இலங்கை வங்கியின் 73 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இம்மாதம் முதலாம் திகதி முதல் 31 ஆம் திகதி வரையில் பிறக்கும் குழந்தைகளுக்கு பெற்றோரால் வைப்புச் செய்யப்படும் தொகையைப் போன்று இரண்டு மடங்கு தொகை இலங்கை வங்கியால் குழந்தைகளின் பெயரில் வைப்புச் செய்யப்படவுள்ளது. இதற்கான ஆகக் கூடுதலான வைப்புத் தொகை 5 ஆயிரம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(க-400)


## ஜே.வி.பியின் நேற்றைய பேரணியின் போது...

கிளிநொச்சியில்





வவுனியாவில்





# றைசிங்ஸ்ரார் முதற்தெரிவில் யாழ். மாவட்ட வீரர்கள் மூவர்




யாழ்ப்பாணம், ஓக. 02

எயார்ரெல் நிறுவனத்தினால் 'றைசிங்ஸ்ரார்' என்னும் தொனிப்பொருளிலான உதைபந்தாட்டப் பயிற்சி முகாம் நேற்று யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெற்றது. குறித்த பயிற்சி முகாமில் திறமையை வெளிப்படுத்தும் மூவர், இங்கிலாந்திலுள்ள மான்செஸ்ரர் யுனைட்டெட் அணியின் பயிற்சிகளில் கலந்துகொள்ள வாய்ப்புப் பெறவுள்ள அணிக்கு யாழ். மாவட்ட ரீதியில் தெரிவாகியுள்ளனர். இந்த அணியில் இலங்கையிலுள்ள 13 மாவட்டங்களிலிருந்து 3பேர் வீதம் தெரிவுசெய்யப்பட்டு பின்னர் அவர்களிலிருந்து 12 வீரர்கள் இறுதியாக பயிற்சியில் கலந்துகொள்ளும் வாய்ப்பைப் பெறுவர்.

நேற்றைய பயிற்சி முகாமில் 350க்கும் மேற்பட்ட வீர வீராங்கனைகள் கலந்துகொண்டனர். இவர்களுக்கான பயிற்சிகளை இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் அதிகாரிகள் வழங்கினர். இந்தப் பயிற்சிமுகாமில் யாழ். மாவட்டத்திலிருந்து மானிப்பாய் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த ச.அகிலன், இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியைச் சேர்ந்த மொறிசன் கரிசன், நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தைச் சேர்ந்த அ.ஜெனற் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். (ங-23)

# இறுதிக்குள் சென்றலைட்ஸ்



காலிறுதியில் பல்கலை அணியையும், அரையிறுதியில் ஜொனியன்ஸ் அணியையும் வீழ்த்தி குறித்த சுற்றுப் போட்டியில் தொடர்ச்சியாக மூன்றாவது முறையாகவும் இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது சென்றலைட்ஸ்.

பண்டத்தரிப்பு, ஓக.2

யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கத்தினரால் பிரிவு அங்கத்துவ கழகங்களுக்கிடையில் நடத்தப்படும் 50 பந்துப்பரிமாற்றங்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுத் தொடரின் இறுதி ஆட்டத்தில் விளையாட யாழ்.சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம் தகுதி பெற்றுள்ளது.

சுற்றுத்தொடரின் அரையிறுதி ஆட்டம் ஒன்றில் சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகமும் ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழகமும் மோதிக்கொண்டன. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொனியன்ஸ் அணியினர் 48.1 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 213 ஓட்டங்களுக்கு அனைத்து இலக்குகளையும் இழந்தனர். துடுப்பாட்டத்தில் ஜொனியன்ஸ் அணி சார்பாக லவேந்திரா 62 ஓட்டங்களையும், குமணன் 38 ஓட்டங்களையும், காருண்யன் 31 ஓட்டங்களையும் பெற்றனர்.

சிறப்பாக பந்து வீசிய சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக அணியின் தலைவர் பிரசாத் 29 ஓட்டங்களை மட்டுமே விட்டுக்கொடுத்து 5 இலக்குகளை கைப்பற்றியிருந்தார்.

214 என்றவெற்றிஇலக்கை நோக்கி பதிலளித்தாடிய சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகத்தினர் 47.2 பந்துப் பரிமாற்றங்களில் ஏழு இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தனர். போட்டி இறுதிவரை விறுப்பானதாக அமைந்திருந்தது. சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம் சார்பாக இறுதிவரை ஆட்டமிழக்காமல் ஆடிய யுலியஸ் கனிஸ்ரன் 43 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்து தமது அணியின் வெற்றியை உறுதிப்படுத்தினார். மேலும் சென்றலைட்ஸ் அணி சார்பாக ஜேம்ஸ் ஜான்சன் 42 ஓட்டங்களையும், ஜெனோசன் 38 ஓட்டங்களையும், ஜெரிக் றிசாந் 23 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

ஜொனியன்ஸ் சார்பாக பந்து வீச்சில் காண்டீபன் 3 இலக்குகளையும், லவேந்திரா இரு இலக்குகளையும், விதுசன் இரு இலக்குகளையும் வீழ்த்தினர்.

முன்னதாக காலிறுதிப் போட்டியில் யாழ்.பல்கலை அணியை எதிர்த்தாடிய சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம் 61 ஓட்டங்களால் வெற்றி பெற்று அரையிறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்றிருந்தது.

இந்தப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம் 43.4 பந்துப் பரிமாற்றங்களில் 217 ஓட்டங்களுக்கு அனைத்து இலக்குகளையும் இழந்தது. இதில் பிரசாத் 5 சிக்ஸர்கள் இரண்டு பவுண்டரிகள் அடங்கலாக 49 ஓட்டங்களையும், யுலியஸ் கனிஸ்ரன் ஆட்டமிழக்காமல் 30 ஓட்டங்களையும், சௌமிதரன் 32 ஓட்டங்களையும், சுதர்சன் 30 ஓட்டங்களையும் பெற்றனர். பல்கலை அணியின் பந்து வீச்சில் சிறப்பாக பந்து வீசிய ஜெயரூபன் 5 இலக்குகளை வீழத்தினார்.

பதிலளித்தாடிய யாழ். பல்கலை அணியினர் 43.4 பந்துப்பரிமாற்றங்களில் 156 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்துதோல்வியைத் தழுவினர். பல்கலை சார்பில் ஜெயருபன் 28 ஓட்டங்களையும், லவன் 23 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். சென்றலைட்ஸ் அணியின் பந்து வீச்சில் ஜெனோசன் மற்றும் ஜெரிக் றிசாந் ஆகியோர் தலா 3 இலக்குகளை வீழ்த்தியிருந்தனர்.

இந்தச் சுற்றுத்தொடரின் இறுதி ஆட்டத்துக்கு தொடர்ச்சியாக மூன்றாவது தடவையாகவும் சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம் தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (ங-130)

## திக்கம் இளைஞர் வெற்றி

யாழ்ப்பாணம், ஓக.2

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழகம் அல்வாய் மனோகரா சனசமூக நிலையத்தின் 85 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தும் 11 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச்சுற்றுப் போட்டி தொடரின் முதலாவது ஆட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம் மோதிக் கொண்டது.

ஆட்டம் முடிவடையும் வரை இரண்டு அணியினரும் எதுவித கோல்களையும் பெறாததினால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. எனவே வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. இதில் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழக அணி 4:2 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது.

## ஆவரங்கால் இந்து சம்பியன்



யாழ்ப்பாணம் ,ஒகஸ்ட் 2

சாவகச்சேரி, மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகத்தின் 47ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வட மாகாண ரீதியில் நடத்தப்பட்ட கரப்பந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் வெற்றிபெற்று கிண்ணத்தை சுவிகரித்துள்ளது.

இறுதிப் போட்டியில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

ஐந்த சுற்றுக்கள் கொண்ட இந்தப் போட்டியில் முதல் சுற்றுக்களிலும் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம் முன்னிலை வகுத்து தொடந்து நடைபெற்ற சுற்றுக்களின்போது ஆவரங்கால் இந்து இளைஞர் அணி தனது ஆதிக்கத்தை செலுத்தத்தொடங்கியது.

மிகவும விறுவிறுப்பான முறையில் நடைபெற்ற போட்டியின் அடுத்த சுற்றுக்களில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணி வெற்றி பெற்று கிண்ணத்தை தனதாக்கியது.

இந்தச் சுற்றுப்போட்டியின் சிறந்த ஆட்டநாயகனாக ஆவரங்கால் இந்து இளைஞர் அணியைச் சேர்ந்த ஜெனகன் தெரிவு செய்யப்பட்டார். (23)

# பிரமந்தனாறு மாணவிக்கு இரட்டைத் தங்கப் பதக்கம்



கிளிநொச்சி, ஓக.02

யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் அண்மையில் நடைபெற்ற வட.மாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான தடகளப் போட்டியில் கிளிநொச்சி பிரமந்தனாறு மகாவித்தியாலய வீராங்கனையான விற்றாலிஸ் கிறிஸ்ரினா இரண்டு தங்கப்பதக்கங்களைப் பெற்று சாதனை படைத்துள்ளார்.

இவர் 21 வயதுப் பிரிவு பெண்களுக்கான தட்டு எறிதல், ஈட்டி எறிதல் போட்டிகளில் முதலாம் இடத்தினைப் பெற்றே இந்தத் தங்கப் பதக்கங்களைச் சுவீகரித்துக் கொண்டார்.

அடிப்படை வசதிகள் மற்றும் போக்குவரத்து வசதிகள் மிகக் குறைவாகவுள்ள பிரமந்தனாறு மகாவித்தியாலய மாணவி இவ்வாறு இரட்டைப் பதக்கம் பெற்று சாதனை படைத்து பாடசாலைக்கும், கிராமத்துக்கும் பெருமை சேர்த்துள்ளார்.

இவர் கடந்த வருடமும் மாகாண மட்டப் போட்டிகளில் வெற்றி பெற்று தேசிய மட்டப் போட்டிகளில் பங்கு பற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ங-403)

## யாழ். இந்து பழைய மாணவர் சங்க சிட்னி கிளையினரால்

# விளையாட்டு உபகரணங்கள் கையளிப்பு



யாழ்ப்பாணம், ஓக.2

யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவர்கள் சங்க, சிட்னி கிளையினர் வட மாகாண பாடசாலைகளுக்கு 5 லட்சத்து 60 ஆயிரம் ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள் வழங்கியுள்ளனர்.

வட. மாகாண பாடசாலைகளுக்கு இடையே உறவுகளை வளர்த்தல், பாடசாலை பழைய மாணவர் சங்கங்களுக்கிடையே சிட்னியில் தொடர்புகளைப் பேணுதல் என்பவற்றை கருத்தில் கொண்டும், மற்றும் விளையாட்டுத்துறையினை வளர்ப்பதன் மூலம் வடமாகாணத்தில் அரிய வீர, வீராங்கனைகளை உருவாக்க வேண்டும் என்ற குறிக்கோளை மனதில் வைத்தும் இந்தச் செயல் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் பரியோவான் கல்லூரி, கொக்குவில் இந்து கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி ஆகியவற்றுக்கு 2 லட்சத்து 10 ஆயிரம் ரூபா பெறுமதியான கிரிக்கெட் உபகரணங்கள் அடங்கிய பொதியும், வன்னி மாவட்ட பாடசாலைகளுக்கு 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான உதைபந்து, கரப்பந்து, வலைப்பந்து ஆகியனவும் கடந்த வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டன.

கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், யாழ். பரியோவான் கல்லூரி அதிபர் அருட் திரு ஞான பொன்ராஜா , கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் அகிலதாஸ், யாழ். மத்திய கல்லூரி அதிபர் எழில்வேந்தன், மற்றும் வடக்கு மாகாண விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் அண்ணாத்துரை ஆகியோர் கலந்து கொண்டனர்.

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்குரிய உபகரணங்களை பாடசாலை அதிபர்கள் பெற்றுக் கொண்டதுடன், வன்னிப் பாடசாலைகளுக்கான உபகரணங்கள் வட மாகாண விளையாட்டுத் துறைப் பணிப்பாளரிடமும் கையளிக்கப்பட்டன. (ங-5)

# ஆச்சரியப்பட வைக்கும் சீன வீராங்கனை

லண்டன் ஒலிம்பிக்கின் மகளிர் 200 மீற்றர் மெட்லே நீச்சல் போட்டியில் சீன வீராங்கனை ஷிவான் யே தங்கப்பதக்கம் வென்றார்.

லண்டனில் நடைபெற்று வரும் ஒலிம்பிக்கின் மகளிர் 200 மீற்றர் மெட்லே நீச்சல் போட்டிகள் நேற்று நடைபெற்றன. இந்தப் போட்டியில் 200 மீற்றர் தூரத்தை 2:07 செக்கன்களில் கடந்து ஷிவான் யே தங்கப்பதக்கம் வென்றார். இந்தப் போட்டியில் ஆஸ்திரேலிய வீராங்கனை அலிஷியா கவுட்ஸ் வெள்ளிப்பதக்கமும், அமெரிக்க வீராங்கனை கெயிட்லின் லெவரன்ஸ் வெண்கலப்பதக்கமும் வென்றனர். 16 வயதேயான சீன வீராங்கனை ஷிவான் 400 மீற்றர் மெட்லே பிரிவிலும் தங்கம் வென்று அனைவரையையும் ஆச்சரியத்தில் மூழ்கடித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (5)

# 6 முறை வென்றவர் தோல்வி

ஒலிம்பிக் போட்டியில் 6 முறை தங்கம் வென்ற சுவிடன் ரேபிள் ரென்னிஸ் வீரர் ஜோர்ஜென் பெர்சன் இம்முறை தோல்வியடைந்து வெளியேறினார்.

சுவீடன் நாட்டின் பிரபல ரேபிள் ரென்னிஸ் வீரரான ஜோர்ஜென் பெர்சன் 1988 ஆம் ஆண்டு முதல் ஒலிம்பிக் போட்டியில் விளையாடி வருகிறார். இதுவரை தொடர்ந்து 6 முறை தங்கப்பதக்கம் வென்ற பெருமைக்குரியவர் ஆவார்.

இந்த நிலையில் லண்டன் ஒலிம்பிக்கில், நேற்று நடைபெற்ற இரண்டாவது சுற்றில் குரோஷியா நாட்டின் அண்ட்ரே காசினாவுடன் ஜோர்ஜென் மோதினார். அந்தப் போட்டியில் 0-4 என்ற செட் கணக்கில் ஜோர்ஜென் அதிர்ச்சித் தோல்வியடைந்தார். (5)

# ஒலிம்பிக் பதக்கப் பட்டியல்

01.08.2012

LONDON 2012

| நாடுகள் | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| சீனா | 15 | 8 | 4 | 27 |
| அமெரிக்கா | 10 | 8 | 9 | 27 |
| பிரான்ஸ் | 5 | 3 | 4 | 12 |
| தென.கொரியா | 5 | 2 | 4 | 11 |
| வட.கொரியா | 4 | 0 | 1 | 5 |
| ஜேமனி | 3 | 8 | 2 | 13 |
| இததாலி | 3 | 4 | 2 | 9 |
| கஜக்ஸ்தான் | 3 | 0 | 0 | 3 |
| யப்பான் | 2 | 4 | 10 | 16 |
| ரஷ்யா | 2 | 3 | 5 | 10 |

# ஒலிம்பிக் சாதனையுடன் தங்கம்

லண்டன் ஒலிம்பிக் பளுதூக்குதல் போட்டியில் 58 கிலோ எடைப்பிரிவில் சீன வீராங்கனை லீ ஜுவேயிங் 2 ஒலிம்பிக் சாதனைகளை நிகழ்த்தியதுடன் தங்கப்பதக்கமும் வென்றார்.

இதற்கு முன்னர் 2 முறை உலக சம்பியன் வென்ற லீ, இந்தப் போட்டியில் ஸ்னாட்ச் பிரிவில் 108 கிலோ மற்றும் மொத்தம் 246 கிலோ பளு தூக்கி அசத்தினார்.

இதன்மூலம் தனது நாட்டைச் சேர்ந்த சென் யான்கிங் என்பவர் கடந்த ஒலிம்பிக்கின் போது நிகழ்த்திய சாதனையை முறியடித்தார். அவரைவிட இப்போது 2 கிலோ அதிக பளுவை லீ தூக்கியிருக்கிறார்.

லீயைத் தொடர்ந்து 236 கிலோ தூக்கிய தாய்லாந்து வீராங்கனை பீம்சிரி வெள்ளிப் பதக்கமும், 235 கிலோ தூக்கிய உக்ரைன் வீராங்கனை யுலியா கலினா வெண்கலப் பதக்கமும் வென்றனர்.

(5)

# தகர்க்கப்படும் சாதனைகள்

லண்டன் ஒலிம்பிக் போட்டிகளின் ஆண்களுக்கான 62 கிலோ உடல் எடைப்பிரிவு பளுதூக்கும் போட்டியில் வட கொரிய வீரர் கிம் உன் குக் தங்கம் வென்றதோடு புதிய உலக சாதனையையும் படைத்துள்ளார்.

லண்டனில் நடைபெற்று வரும் ஒலிம்பிக் போட்டிகளில் ஆண்களுக்கான 62 கிலோ எடைப்பிரிவு பளுதூக்கும் போட்டியின் இறுதிச் சுற்று நடைபெற்றது.

இதில் வடகொரிய வீரரான கிம் உன் குக் 153 கிலோ தூக்கி ஒலிம்பிக் சாதனையை முறியடித்தோடு உலக சாதனையையும் சமன் செய்தார். இதற்கு அடுத்ததாக 174 கிலோ எடை தூக்கி மொத்தம் 327 கிலோ எடை தூக்கியதன் மூலம் ஒலிம்பிக் சாதனை, உலக சாதனை இரண்டையும் முறியடித்தார்.

இந்தப் பிரதான சுற்றுக்கு முந்தைய சுற்றுக்களில் வடகொரிய வீரரான கிம் உன் குக்கிற்கும் சீன வீரர் ஜாங் ஜீயீற்கும் இடையே இறுதியில் கடும் போட்டி நிலவும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் சீன வீரர் ஜாங் 4 ஆம் இடத்திற்கு தள்ளப்பட்டார். கொலம்பிய வீரர் பிகுரா மாஸ்குரா வெள்ளியும், இந்தோனேசியாவின் இரவான் இகோ யுலி வெண்கலமும் வென்றனர்.

கிம் வென்றது வடகொரியாவின் 2 ஆவது தங்கப்பதக்கமாகும். இதற்கு முன்பு 56 கிலோ உடல் எடைப் பிரிவில் வடகொரிய வீரர் ஓம் யுன் சோல் என்பவர் முதல் தங்கம் வென்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இனவெறியால் வீரர் நீக்கம்

சுவிட்சர்லாந்தின் உதைபந்தாட்ட வீரரான மைக்கல் மோர்கனெல்லா, 'டுவிட்டரில்' தென்கொரியாவினர் பற்றிய பகையுணர்வை பகிர்ந்து கொண்டார். இவரது இனவேறுபாட்டுணர்வை அறிந்த ஒலிம்பிக் விளையாட்டுக் குழுவினர் இவரை போட்டியிலிருந்து வெளியேற்றி விட்டனர்.

இது குறித்து சுவிஸ் ஒலிம்பிக் குழுவின் தலைவரான கியான் கில்லி கூறுகையில், மொர்கனெல்லா நாளை மெக்சிகோவை எதிர்த்து நடக்கும் போட்டியில் கலந்து கொள்ள இயலாது. அவர் சுவிட்சர்லாந்துக்கே திரும்பிச் செல்ல வேண்டும் என்றார்.

மோர்கனெல்லா குறிப்பிட்டதாவது, நான் ஒவ்வொரு கொரியனையும் தோற்கடிப்பேன். அவர்கள் அனைவரும் தீயில் எரிந்து போகட்டும். அவர்கள் மங்கலாய்டுகளின் (மூளைவளர்ச்சி இல்லாதவர்கள்) கூட்டம் என்று டுவிட்டரில் தனது கருத்தைப் பகிர்ந்து கொண்டார். கொரிய மக்கள் மீது இவருக்கு இருந்த வெறுப்பு, கசப்பு, அவர்களை அவமரியாதையாக கருதத் தூண்டியது. இவர் தென்கொரிய உதைபந்தாட்டக் குழுவினரை அவமானப்படுத்தி விட்டார் என்பதால் அவரை இந்தப் போட்டியிலிருந்து வெளியேற்றுவதாக கில்லி குறிப்பிட்டார்.

சுவிஸ் நாளிதழ் ஒன்று மோர்கனெல்லாவின் கருத்தை வெளியிட்டிருந்தது. இதன் பின்பு இவர் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். தான் பெரிய தவறு செய்துவிட்டதாகவும் அதன் பலனை அனுபவித்துவிட்டதாகவும் அவர் தெரிவித்தார். மோர்கனெல்லாவுக்கு முன்பு இன்னொருவர் இனப்பகை காரணமாக வெளியேற்றப்பட்டார்.

அவர் கிரீஸ் நாட்டைச்சேர்ந்த வயலா பாபா கிறிஸ்டோவு என்ற பெண் தடகளப்போட்டியாளர் ஆவார். இவர் ஆப்ரிக்கப் புலம்பெயர்ந்தோரைக் கேவலமாகப் பேசியதால் வெளியேற்றப்பட்டார்.

லண்டன் ஒலிம்பிக் குழுவினர் இந்தப் போட்டியில் பங்குபெறும் 10,800 வீர, வீராங்கனைகளையும் சமூக வலைத்தளத்தின் மூலமாக தமது ரசிகர்களோடு கலந்துரையாட அனுமதித்துள்ளது. இந்த நிலையில் இனப்பகை காரணமாக இருவர் வெளியேற்றப்பட்டனர். (5)




# ஒலிம்பிக் துளிகள் சில...







# இலங்கையை வீழ்த்த உதவிய தர்மசேன

இலங்கை அணிக்கும் இந்திய அணிக்குமிடையிலான நான்காவது ஒரு நாள் ஆட்டத்தில் நடுவராக கடமையாற்றிய இலங்கையைச் சேர்ந்த குமார் தர்மசேன வழங்கிய தவறான இரண்டு தீர்ப்புக்கள் இலங்கை அணியின் வெற்றி பறிபோனமைக்கு காரணமாகியுள்ளது.

இந்திய அணி 2 ஆட்டங்களில் வெற்றி பெற்றுள்ள நிலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நான்காவது ஒரு நாள் ஆட்டத்தில் இலங்கை அணி வென்றாக வேண்டிய கட்டாயத்தில் களமிறங்கியது. துடுப்பாட்டத்தில் தட்டுத்தடுமாறி இலங்கை அணி 251 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்த இந்திய அணி ஆரம்பத்தில் சீரான இடைவெளியில் இலக்குகளை இழந்து கொண்டேயிருந்தது. 23.4 ஆவது பந்துப் பரிமாற்றத்தில் திவாரி, ஜீவன் மெண்டிஸின் பந்து வீச்சில் ஆட்டமிழந்து வெளியேறினார். அப்போது இந்திய அணி 109 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. தொடர்ந்து நுழைந்த சுரேஷ் ரெய்னா 2 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஹேரத் வீசிய பந்து வீச்சில் இலக்குக் காப்பாளர் சந்திமாலிடம் பிடிகொடுத்திருந்தார். சந்திமால், ஜெயவர்தன உட்பட சகலரும் ஆட்டமிழப்புக் கோரிய போதும் நடுவராகக் கடமையாற்றிய குமார் தர்மசேன ஆட்டமிழப்பு இல்லை என்று அறிவித்தார். அத்துடன் சந்திமாலுக்கு எச்சரிக்கையும் விடுத்தார். ஆனால் மீள் ஒளிபரப்பின் போது பந்து துடுப்பின் ஓரத்தை உரசிச் செல்வது தெளிவாகத் தெரிந்தது.

அதேபோன்று 34 ஆவது பந்துப் பரிமாற்றத்தை நுவான் பிரதீப் வீசினார். ஹோக்லி 77 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் பிரதீப்பின் பந்து வீச்சில் எல்.பி.டபிள்யூ முறைப்பாடு நடுவர் தர்மசேனவிடம் கோரப்பட்டது. தர்மசேன அதனை உயரத்தைக் காண்பித்து மறுத்து விட்டார். ஆனால் தொலைக்காட்சி மீள் ஒளிபரப்பில் பந்து இலக்கை நேரே தகர்ப்பது தெளிவாகத் தெரிந்தது.

இவ்வாறு இரண்டு முக்கிய ஆட்டமிழப்புக்களை இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரரும் தற்போது ஐ.சி.சி. நடுவருமான தர்மசேன மறுத்தமையானது இலங்கையின் வெற்றிவாய்ப்பை கேள்விக்குறியாக்கியது. இந்த இரண்டு ஆட்டமிழப்புக்களும் வழங்கப்பட்டிருக்குமாக இருந்தால் இந்திய அணியின் வெற்றி நிச்சயம் கேள்விக்குறியாகியிருக்கும்.

இதேவேளை தர்மசேன தனது சக கிரிக்கெட் வீரரான சனத் ஜெயசூரியா 2010 ஆம் ஆண்டு இந்திய அணிக்கெதிரான ஆட்டத்தில் 99 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது தவறான எல்.பி.டபிள்யூ ஆட்டமிழப்பை வழங்கியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (5)


## விற்பனைப் பிரதிநிதி

சந்தைப்படுத்தலில் ஆர்வமுள்ளவர்களையும் ஆங்கிலம் அல்லது சிங்களத்தில் தொடர்பாடக்கூடியவர்களையும் அலுமினியத்துறையில் பிரசித்தி பெற்ற நிறுவனம் எதிர்பார்க்கிறது. இத்துறையில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

மோட்டார் சைக்கிள் அனுமதிப்பத்திரம் வைத்திருத்தல் முக்கியமானதாகும். 10.08.2012 க்கு முன் விண்ணப்பிக்கவும்.

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:-

**நாராயணா கட்டடப் பொருள்கள் வர்த்தகர்,**
**இல.92 சி, ஸ்ரான்லி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(சி/2053) (3.6)

## கருத்தரங்கு

இந்து நாகரிகம்
By:- S.ஜெயக்குமார்
காலம்
03,04/08/2012
வெள்ளி, சனி 9 a.m
வெளி மாணவர்களும் பங்குபற்றலாம்.
யூனிவேர்சல்
கந்தர்மடம் (21066) (3.6.14)

## A/L 2013

கணித, விஞ்ஞான மாணவர் கவனத்திற்கு

முழு இரசாயனவியல் அலகுகளை ஒரேவேளையில் கற்பதற்கான

விசேட பிரிவு
By- அன்பு

- 25 கருத்தரங்கு
- கடந்த கால வினாக்கள்
- பாடக்குறிப்புகள்
- மாதிரி வினாக்கள்
- ஆங்கில மொழிமூல மாணவர்களுக்கு தனிப் பிரிவு
- 2 இடத்தெரிவு

**CHEMISTRY CENTRE**

1.33 அராலி வீதி (ஓட்டு மடம் சந்தி அருகில்)
தொடர்பு:- 0779037351
2. கொக்குவில் மஞ்சவனப் பதி வடக்கு வீதியில்

A/L 2014 மாணவர்கள் பொருத்தமான அலகுகளில் இணையலாம்

இவ்வார ஆரம்பம்
1.Organic
2.Inorganic
3.General
4.Basic
(21166) (3.6)

இவ்வாரத்துடன் அனுமதி நிறுத்தப்படும்.

## மணல் விற்பனைக்கு

பூச்சு மணல், கண்டாவளை சல்லி மணல் விற்பனைக்குண்டு.

தொடர்பு : சண் 0779589718, 077 0194786

(21228) (8.6)

## MyWay இன் விடுமுறைகால இலவச ஆங்கில பயிற்சிநெறி

நாள் : 04.08.2012 சனிக்கிழமை

| | |
|---|---|
| காலை 9 - 10 | ஆசிரியர்கள். அரச. தனியார் அலுவலர். பல்கலைக்கழக. உயர்கல்வி மாணவர் |
| காலை 10 - 11 | 4 முதல் 6 வயதுவரையான சிறுவர்கள் (பெற்றோருடன் வர வேண்டும்) |
| காலை 11 - 12 | A/L எடுத்தோர். இளைஞர். யுவதிகள். |
| மாலை 4 - 5 | இளைஞர். யுவதிகள். A/L எடுத்தோர். பல்கலைக்கழக. உயர்கல்வி மாணவர். |
| மாலை 5 - 6 | அரச தனியார் அலுவலர். ஆசிரியர்கள். மற்றும் பெற்றோர் |

பயிற்சிக்கு வரும் அனைவருக்கும் பயிற்சி புத்தகம், DVD மற்றும் சான்றிதழ் முற்றிலும் இலவசம்

(21215)

MyWay 182, Stanley Rd, Jaffna 077 520 2747

## அறிவித்தல்

மூன்றாம் தவணை வகுப்புகள் யாவும்
**04.08.2012** சனிக்கிழமை
வழமையான நேர அட்டவணையின்படி
ஆரம்பமாகின்றது.
(21231)

**றோயல் அக்கடமி**
யாழ்ப்பாணம் நல்லூர்

**G.A.Q**
**B.A.Part - I**
**B.A Final**
(யாழ்.பல்கலைக்கழகம்)

அனைத்துப் பாடங்களுக்குமான
**துரித மீட்டல்** விரிவுரைகள்
ஆரம்பம்:- 04.08.2012 சனி 8 A.m
**ENGLISH G.A.Q, B.A Part- I**
வகுப்புகள் சனி, ஞாயிறு, 11-12 மணி
பட்டப்படிப்புகள் பிரிவு
**BEACON** யாழ்நகர் (20839) (3.6)

**வினைத்திறன் காண் பரீட்சைகளுக்கான விசேட வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.**

அரசாங்க, மாகாண சேவைகளைச் சேர்ந்த அரச முகாமைத்துவ உதவியாளர் தரம் III இற்கான வினைத்திறன் காண் பரீட்சைகள் மற்றும் தரம் III இலிருந்து தரம் II இற்கான பரீட்சைகள் மற்றும் ஏனைய வினைத்திறன் காண் பரீட்சைகள் என்பவற்றுக்கான வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன. ஆரம்பம்: சனி (4/8) காலை 9.00-12.00வரை.

வளவாளர்: ஆ.சத்திய மூர்த்தி (நிர்வாக உத்தியோகத்தர்)
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புக்கள் பிரிவு
(யாழ். ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கி அருகில்)
(சி/2048) (5)

## விசேட கழிவுடனான தள்ளுபடி விற்பனை

ஆரம்பக்கல்வி முதல் உயர்கல்வி வரையான அனைத்து வகையான நூல்களும் ஸ்ரேசனரிப் பொருள்கள் உட்பட கல்வித்துறை சார்ந்த அனைத்துவகைப் பொருள்களையும் ஒரே கூரையின் கீழ் பெற்றிட நீங்கள் இன்றே நாடவேண்டிய ஒரே இடம்.

**ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்**
**212, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.**

எமது நிறுவனம் தனது வழமையான முகவரியிலேயே இயங்குகிறது என்பதனை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். (சி/2060) (3.6)

## தகவல் தொழினுட்பமாணி பட்டக்கற்கை

BIT கொழும்புப் பல்கலைக்கழகம் BIT

புதிய கல்வியாண்டிற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. 10 வருடங்களாக மாணவர்களை தயார்படுத்துகின்றோம். Call Us: 0718474239 , 0776577359

A/L இல் 3 பாடங்கள் சித்தியடைந்தவர்கள் நேரடியாக விண்ணப்பிக்கலாம். ஏனையவர்கள் FIT சித்தியடைவதன் மூலம் விண்ணப்பிக்கலாம். (சிறந்த வேலை வாய்ப்பினைப் பெறுவதற்காக.....) MIS Open Source College

74, சபாபதி வீதி, யாழ்ப்பாணம்-இராமநாதன் வீதியிலிருந்து 150 m

திருமணம் முடித்து நிரந்தர விசாவில் London செல்பவர்களுக்கு பிரித்தானிய தூதரகத்தினால் கோரப்படும் A-1 exam தற்பொழுது எமது கல்வி நிறுவனத்திலேயே நடத்தப்படவிருக்கின்றது.

**City and Guilds இனால் வழங்கப்படும் A-1 பரீட்சைக்கான புதிய வகுப்புகள் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களினால் இவ்வாரம் ஆரம்பமாகின்றன. தூதரகப் பரீட்சைகளுக்கான German (டொச்) Netherland (டச்), பிரஞ்ச், இத்தாலியன் வகுப்புகளும் இவ்வாரம் ஆரம்பமாகின்றன.**

**Vivekananda Academy**
221, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
Tel- 0212220393, 0213216928, 0774842464
(சி/2029) (2,6,7)

## Vacancy

Receptionist and office Clerk wanted for our Establishment.

**Requirements**
1) Only female.
2) Age limite 30
3) English Knowledge must for Receptionist.

Salary will be decided during the Interview on Friday, 03rd August 2012 at 10.00 am. by Chief executive officer
R. Ajanthini



**Thisaikaddi(Pvt)Ltd.**
**Model Visa Advising Center**
**37, Sivagurunathar lane,**
**Brown Road, Jaffna.**
Contact no: 021 221 9016
(21220) (3.6)


## மரண அறிவித்தல்

### வீரசிங்கம் சந்திரலிங்கம் (நாதன்)



யாழ். குப்பிளானைப் பிறப்பிடமாகவும் (Luzern) சுவிஸில் தற்போது வசித்து வந்தவருமான வீரசிங்கம் சந்திரலிங்கம் (நாதன்) கடந்த (13.07.2012) வெள்ளிக்கிழமை சுவிஸில் காலமானார்.

அன்னார் சுதாஜினியின் (சுசி) பாசமிகு கணவரும், சர்மினி, சுஜீபன், சிந்துஜன் ஆகியோரின் அன்புத் தந்தையும் , காலஞ்சென்ற வீரசிங்கம் மற்றும் செல்வரத்தினம் தம்பதியரின் இளைய மகனும், திருச்செந்தூர்நாதன்- காலஞ்சென்ற இராஜேஸ்வரி தம்பதியரின் மருமகனும், இராசமணி (கனடா), தங்கவடிவேல் (நீர்வேலி), காலஞ்சென்ற சிவமணி மற்றும் சக்திவடிவேல் (கனடா), பரமசிவம் (கொலண்ட்), சுந்தரலிங்கம் (கனடா) ஆகியோரின் சகோதரனும், சுதாகரன் (பிரான்ஸ்), சுபாஜினி (சுவிஸ்), சுகிர்தா, சுகந்தன், சுதர்சன், சுகன்ஜா, சுதர்ஜினி, சுபாஸ்கரன் (யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ 3ஆம் வருட மாணவன்) காலஞ்சென்ற சிவபாதம் மற்றும் கனகம்மா, காலஞ்சென்ற திருநாவுக்கரசு மற்றும் ராஜினி, கிளி, ஜெனா ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், விமலாம்பிகை (பிரான்ஸ்), சிறீஸ்காந்தராசா (சுவிஸ்), விஜயகிறிபன் (கல்மடு), அருள்ரூபன் (இடைக்காடு) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.08.2012) வியாழக்கிழமை (LUZERN) சுவிஸில் நடைபெறும்.

அன்னாரின் துக்க அனுஷ்டிப்பு கயட்டைப்புலம் கோப்பாயில் உள்ள திருச்செந்தூர்நாதனின் இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கயட்டைப்புலம்,
கோப்பாய். (20970) (3.6.14)

தகவல்:
சு.திருச்செந்தூர்நாதன் (மாமன்),
குடும்பத்தினர்





உலக சுகாதார நிறுவனத்தின் (W.H.O)
எச்சரிக்கை
செல்போன் பாவனையால்,
புற்றுநோய், மூளைக்கட்டி, மாரடைப்பு, கருச்சிதைவு ஏற்படலாம் !!!
அறிமுகமாகிறது...

**KEVA**
ANTI RADIATION CHIP
*Tested & Endorsed By World Renown Institutes*
**Proprietary KERT American Technology & International Certifications by ASCB(E), UNITED KINGDOM*

செல்போன் பாவனை பின்வருவனவற்றிற்கு காரணமாய் இருக்கின்றதென ஆராய்ச்சிகள் காட்டுகின்றன.




Rs. 450.00 upwards
Islandwide pharmacies

**NEBOS INTERNATIONAL (P) LTD.**
Hotline : 077 2487500, 0777705047

நாடுபூராகவும் முகவர்கள் தேவை www.nebosint.com


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.08.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.